# மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# பொதுத்தமிழ்

## உரைநூல்





www.Padasalai.Net

ஆக்கம் : திரு. ச. அருள் நேரு,

M.A., B.Ed., M.Phil.,DCH.,PGDCA.,DAVT.,

முதுகலைத் தமிழாசிரியர்.

*9894760547*

**படி! படி! படி! படிப்பே நம் வெற்றிப்படி!**

# மேனிலை இரண்டாமாண்டு

# பொதுத் தமிழ்

## பொருளடக்கம்


| வ. எண். | இயல் | பக்க எண் |
|---|---|---|
| 1 | ஒன்று | 1 |
| 2 | இரண்டு | 19 |
| 3 | மூன்று | 34 |
| 4 | நான்கு | 55 |
| 5 | ஐந்து | 72 |
| 6 | ஆறு | 86 |
| 7 | ஏழு | 108 |
| 8 | எட்டு | 126 |
| 10 | பகுபத உறுப்பிலக்கணம், இலக்கணக் குறிப்பு, புணர்ச்சி விதி | 139 |
| 12 | பொதுத்தேர்வு வினாக்கள் | 144 |


www.Padasalai.Net

**இன்று என்னை நீ தலைகுனிந்து படித்தால்**

**நாளை நீ தலை நிமிர்ந்து வாழலாம்**

**- புத்தகம்**



www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# இயல் 1

| | |
|---|---|
| உரைநடை | : தமிழ்மொழியின் நடை அழகியல் ~ தி.சு.நடராசன் |
| செய்யுள் | : இளந்தமிழே ~ சிற்பி பாலசுப்பிரமணியம், தன்னேர் இலாத தமிழ் |
| துணைப்பாடம் | : தம்பி நெல்லையப்பருக்கு ~ பாரதியார் |
| இலக்கணம் | : தமிழாய் எழுதுவோம். |

பலவுள் தெரிக

***1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்***

*அ) யாப்பருங்கலக் காரிகை* *ஆ) தண்டியலங்காரம்*

***இ) தொல்காப்பியம்*** *ஈ) நன்னூல்*

***2. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,***

***க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது.***

***உ) பொதிகையில் தோன்றியது.***

***ங) வள்ளல்களைத் தந்தது.***

*அ) க மட்டும் சரி* *ஆ) க, உ இரண்டும் சரி*

*இ) ங மட்டும் சரி* ***ஈ) க, ங இரண்டும் சரி***

***3. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது***
***தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்***

*அ) அடிமோனை, அடி எதுகை* *ஆ) சீர் மோனை, சீர் எதுகை*

***இ) அடிஎதுகை, சீர் மோனை*** *ஈ) சீர் எதுகை, அடிமோனை*

***4. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.***

***கருத்து 2 : தொடரமைப்பு சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.***

*அ) கருத்து 1 சரி* *ஆ) கருத்து 2 சரி*

***இ) இரண்டு கருத்தும் சரி*** *ஈ) கருத்து 1 சரி, 2 தவறு*

***5. பொருத்துக :***

| | |
|---|---|
| *அ) தமிழ் அழகியல்* | *- 1) பரலி சு.நெல்லையப்பர்* |
| *ஆ) நிலவுப்பூ* | *- 2) தி.சு.நடராசன்* |
| *இ) கிடை* | *- 3) சிற்பி பாலசுப்பிமணியம்* |
| *ஈ) உய்யும் வழி* | *- 4) கி. ராஜநாராயணன்.* |

*அ) 4, 3, 2, 1* *ஆ) 1, 4, 2, 3* *இ) 2, 4, 1, 3* ***ஈ) 2, 3, 4, 1***



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறுவினாக்கள்:

***1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.***

- மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்து சக்தியாக அமைகின்றன.
- மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.
- கவிதையின் இயங்காற்றல்தான் நடை அழகியல்.
- "நடைபெற்றியலும்", என்றும் "நடை நவின் றொழுகும்" என்றும் தொல்காப்பியம் சுட்டுகிறது.

***2. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக" - இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.***

படாஅம், கெடாஅ, கடாஅ - இம்மூன்றும் ஓசை நயமிக்க சொற்கள்.

படாஅம், கெடாஅ, கடாஅ - இவை மூன்றும் செய்யுளில் ஓசை குறையும்போது அளபெடுப்பதால் செய்யுளிசை அளபெடை (அ) இசை நிறை அளபெடை.

***3. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?***

மாலைப் பொழுதில் சூரியன் மலை மேட்டில் மறைவான். அப்பொழுது வானமெல்லாம் சிவப்பு நிறப் பூக்களாகக் காட்சியளிக்கும். அச்செந்நிறம் போல கைகள் சிவக்க தொழிலாளர்கள் உழைத்ததால் வியர்வை முத்துக்கள் தோன்றும். இவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்.

***4. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.***

விடியலில் கதிரவன் உதிக்கின்ற காட்சி மிகவும் வனப்பாகக் காட்சியளித்தது.

சிறுவினாக்கள் :

***1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.***

- ❖ எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும்தான் தொடங்குகின்றது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ❖ மொழிசார்ந்த கவிதையும், இசையோடும் இசைக்கருவியோடும் பிறக்கிறது.
- ❖ ஓசையும், பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
- ❖ இதையே அந்தப் பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.
- ❖ கடந்தடு தானை எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள் மிகுந்து வன்மையான உணர்ச்சியைத் தூண்டும் வகையில் இடம்பெற்றுள்ளன.
- ❖ இவ்வொலிக் கோலம் சங்கப் பாடல்களில் முக்கியப் பண்பாகும்.

**2. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்" - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

- * மாலை நேரத்தில் மலைகளுக்கிடையே மறையும்போது செம்மையான (சிவந்த) நிறத்துடன் சூரியன் காட்சியளிப்பான். அந்நேரத்தில் செம்மையான பூக்களைப் போல வானம் செம்மை நிறமாகக் காட்சியளிக்கும்.
- * அச்சிவந்த நிறத்தைப் போல உழைப்போரின் கைகள் சிவந்தன.
- * உழைப்பாளர்களின் சிவந்த கைகள், மாலை நேரத்தில் சிவந்த வானத்துடன் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**3. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :** தண்டி அவர்கள் இயற்றிய தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்.

**பொருள் விளக்கம் :** மலைகளுக்கிடையே தோன்றி, உயர்ந்தோரால் தொழப்பட்டு, கடலால் சூழப்பட்ட இவ்வுலகின் இருளைப் போக்குவது ஒன்று சூரியன், மற்றொன்று பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை எனும் இருள் போக்கும் மற்றொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.

**4. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே. -நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே கூவி வா, வா -சிற்பி பாலசுப்பிரமணியம். |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***நன்னூல் :*** *கால மாற்றத்தால் பழைய சொற்களைக் குறைத்துக் கொள்வதும், புதிய கருத்துகள், தொழில்நுட்பங்கள் சார்ந்த சொற்களை சேர்த்துக் கொள்வதும் பிழையாகாது. இங்கு புதுமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.*

***சிற்பி பாலசுப்பிரமணியம் :*** *பழமையான கருத்துக்களில் மிக அதிக அளவு நன்மைகள் இருப்பதால், புதுமையிலிருந்து பழமை நோக்கி மெய்சிலிர்க்க கூவி வா தமிழ்க்குயிலே என்று பழமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.*

நெடுவினாக்கள்:

***1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.***

***கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் :***

***முன்னுரை :***

*கவிதை என்ற அழகிய இலக்கிய வகையை உவமை, உருவகம், கற்பனை போன்றன கட்டமைக்கின்றன. கவிதையின் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.*

***நடை அழகியல் :***

- *கவிதையின் இயங்காற்றல்தான் நடை அழகியல்.*
- *மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்து சக்தியாக அமைகின்றன.*
- *"நடைபெற்றியலும்", என்றும் "நடை நவின் றொழுகும்" என்றும் தொல்காப்பியம் சுட்டுகிறது.*

***கவிதைக்கலை***

*உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி முதலியன மொழியின் வழக்குகளைக் கலையியல் வழக்காக மாற்றுகின்றன.*

***கவிதையின் நடையியல் கூறுகள் :***

*பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்கும் மிக முக்கியமானவையாகும்.*

***ஒலிக்கோலங்கள் :***

*மொழி சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும் உருவாகிறது. மொழி சார்ந்த கவிதையும் இசையோடு பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து, கலைவடிவம் பெறுகிறது. இதனையே ஒலிப்பின்னல் என்கிறோம்.*

***"கடந்தடு தானை மூவிருங் கூடி***
***உடன்றனிர் ஆயினும் பறம்புகொளற் கரிதே" (புறம். - 110)***



www.Padasalai.Net

என்னும் பாடல் வரிகளில் அமைந்த க, ட, த, ற எனும் வல்லினமெய்கள், வன்மையான உணர்ச்சியைக் காட்டுகின்றன.

"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை
கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம். 145)

இப்பாடல் வரிகளில், உயிர் நெட்டொலிகளும்,

"புணரின் புணராது பொருளே: பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே" - (நற். 16)
"நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை".

இப்பாடல் வரிகளில், சில சொற்கள் திரும்பிவரல் தன்மையால் நிகழும் ஒலிக்கோலம், சங்கப் பாடல்களில் ஒரு குறிப்பிடத்தக்க பண்பாகும்.

**சொற்புலமும் தொடரியல் போக்குகளும் :**

சொல்வளத்தில் , உணர்வும் பொருளும், கலையும் பண்பாடும், வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன. ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவும், பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும், துறைகளுக்கும் சூழல்களுக்கும் புனைவுகளுக்கும் சொல்லே களமாய் வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

முல்லைக்கலியில் காளைகளின் இனம் பற்றிய சொற்களும் "கிடை" என்ற குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களும் பல பெயர்களில் பல பெயர்களில் காணப்படுகின்றன. தனிச்சொல்லாகவும் தொகை மொழியாகவும் வாக்கிய அமைப்பில் சொற்புலம் காணப்படுகிறது. ஒலிக்கோலமும், சொற்புலமும், சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தைப் பண்படுத்துகின்றன. தமிழ் அழகியல் நடையைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரமாகும்.

**முடிவுரை :**

மேற்கண்ட கட்டுரையின் மூலமாக கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் எவை என்பதை அறிந்து கொண்டோம்.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.**

தம்பி நெல்லையப்பருக்கு – பாரதியார்

**முன்னுரை:**

"நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா" என்ற புகழ்மொழிக்குரியவர் மகாகவி பாரதியார். "எனக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல்" என்று பாடியதோடு, அதனை நிரூபித்தும் காட்டியவர் பாரதியார். அவரின் கடிதத்தின் வாயிலாக நாம் அறிந்து கொண்ட மொழிப்பற்றையும், சமூகப்பற்றையும் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தம்பி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாகக் காண்போம்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

### பாரதியின் மொழிப்பற்று :

* தமிழ் தமிழ் என்று எப்பொழுதும் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள்ள வேண்டும்.
* இந்தி, மராட்டி போன்ற வடநாட்டு மொழிகள் பெற்ற அற்புதமான புதுமை தமிழ்மொழியிலும் ஏற்பட வேண்டும்.
* தமிழில் புதிய புதிய சிந்தனை, புதிய உண்மை புதிய புதிய இன்பம் தமிழில் உருவாகிக்கொண்டே போக வேண்டும்.
* தமிழ்நாடு வாழ்க என்று எழுத வேண்டும்.
* தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் அதிகம் பெருக வேண்டும்.
* தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுத வேண்டும்.
* இவ்வாறெல்லாம் கூறியிருப்பதிலிருந்து அவரின் மொழிப்பற்று நமக்கு புலப்படுகிறது.

### பாரதியின் சமூகப்பற்று :



* தமிழ்நாட்டில் நோய்கள் தீர வேண்டும். நோயின்றி மக்கள் வளமுடன் வாழ வேண்டும்.
* ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள், அவை ஒன்றிலொன்று தாழ்ந்ததில்லை.
* பெண்ணைத் தாழ்மை செய்தோன், கண்ணைக் குத்திக் கொண்டான்: பெண்ணை அடைத்தவன், தன் கண்ணை அடைத்தான்.
* தொழில்கள் எங்கும் பெருகி, தமிழ்நாடு வளர வேண்டும்.
* வியாபாரம் பெருகி, யந்திரங்கள் உற்பத்தி பெருகி, தமிழ்நாடு வளர்ச்சி பெற வேண்டும்.
* இசை, சிற்பம், இயந்திரவியல் நூல்கள், பூகோளம் சார்ந்த நூல்கள், வானவியல் நூல்கள், இயற்கை பேணும் நூல்கள் தமிழ்நாட்டில் பெருகிட வேண்டும்.

### முடிவுரை :

பாரதியாரின் இக்கடிதத்திலிருந்து, அவரின் தமிழ்ப்பற்றை அறிய முடிகிறது. மேலும் தமிழ்நாட்டின் வளர்ச்சி, சமூகப்பற்று ஆகியவற்றையும் அறிய முடிகிறது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3. தமிழின் சீரிளமைத் திறன் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**இளந்தமிழே – சிற்பி பாலசுப்பிரமணியம்**
**தமிழின் சீரிளமைத் திறன்**

**முன்னுரை :**

*இளந்தமிழே என்னும் கவிதை, 1963இல் வெளிவந்த கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் முதல் கவிதைத் தொகுப்பான நிலவுப்பூ எனும் கவிதை நூலில் இடம்பெற்றுள்ளது.*

**செந்நிறப்பூங்காடு :**



*மாலை நேரத்தில் மலைகளுக்கிடையே மறையும்போது செம்மையான ( சிவப்பு) நிறத்துடன் சூரியன் காட்சியளிப்பான். அந்நேரத்தில் செம்மையான பூக்களைப் போல வானம் செம்மை நிறமாகக் காட்சியளிக்கும்.*

**வியர்வை வெள்ளம் :**

*செந்நிற வானம் போல, கைகள் சிவக்க தொழிலாளர்கள் உழைத்ததால் வியர்வை முத்துக்கள் தோன்றும். இவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்.*

**வெளிப்படுத்து மொழி :**

*ஆர்வமிகுதியால் பொங்கிவரும் கவிதையின் கருத்தை வெளிப்படுத்த தமிழ்மொழியே உதவுகிறது.*

**பாண்டியரின் சங்கம் :**

*முச்சங்கம் வளர்த்த பாண்டியரின் அவையில் தமிழ்த்தாய் கொலுவாய் வீற்றிருந்தாள். கடையெழு வள்ளல்களைத் தந்தது தமிழே.*

**தமிழ்க்குயிலே மீண்டு வா:**

*பழமைநலமும், தனிச்சிறப்பும் மிக்கது தமிழ். காலந்தோறும் தன்னை புதுப்பித்துக்கொண்டு என்றும் பழமைச் சிறப்போடு வா தமிழ்க்குயிலே. கூண்டை உடைத்தெறிந்து வெளியேறும் சிங்கத்தைப் போல சீறி வா என்று தமிழை அழைக்கிறார்.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**முடிவுரை :**

தனிச்சிறப்பு மிக்க தமிழ்மொழியானது, மீண்டும் சிறப்புற உலகை ஆள வேண்டும். இவையே தமிழின் சீரிளமைத் திறன் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவாகும்.

4. "சொல்லோவியங்கள் (கவிதை) என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ் வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.

**நிகழ்ச்சி நிரல்**

**"சொல்லோவியங்கள்" ~ கவிதை நூல் வெளியீட்டு விழா**

இடம் : அரசு மேனிலைப்பள்ளி, அஅஅ
நேரம் : பிற்பகல் 2.00 மணி
நாள் : 15 சூன் 2020

| | |
|---|---|
| 2.05 | வரவேற்புரை - மாணவர். பாரதி |
| 2.15 | தலைமையுரை - திரு. இராமச்சந்திரன் பள்ளி முதல்வர். |
| 2.30 | நூலை வெளியிட்டு உரையாற்றுபவர் : உயர்திரு. முதன்மைக் கல்வி அலுவலர், நூலை பெற்றுக் கொள்பவர் : கவிஞர். முத்துநிலவன் சொல்லோவியங்கள் - கவிதை நூல். |
| 2.45 | வாழ்த்துரை - ஆசிரியர். மணிமேகலை |
| 3.00 | ஏற்புரை - நூலாசிரியர். மகேஷ்வரன் |
| 3.45 | நன்றியுரை - மாணவி. கவிப்பிரியா |
| 4.00 | நாட்டுப்பண் |

**நன்றியுரை**

நவில்பவர் : மாணவி. கவிப்பிரியா

உலகின் முதல்மொழி, என்றும் அழியாத, தேனினும் இனிய மொழி எம் தமிழ்மொழியை முதற்கண் வணங்கி, அவையில் கூடியுள்ள சான்றோர்களையும் வணங்கி என் நன்றியுரையைத் தொடங்குகிறேன்.

சொல்லோவியங்கள் என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவில், வரவேற்புரை வழங்கிய சகோதரர் பாரதி அவர்களுக்கும், தலைமையுரை வழங்கிய நம் பள்ளி முதல்வர் திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கும், தன் பொன்னான நேரத்தை நமக்காக ஒதுக்கி, பள்ளிக்கு வருகைதந்து நூலை வெளியிட்டு, விழாவைச் சிறப்பித்த உயர்திரு. முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய ஆசிரியர் திருமதி. மணிமேகலை அவர்களுக்கும், ஏற்புரை வழங்கிய நூலாசிரியர் திரு. மகேஷ்வரன்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

எம் ஆசிரியரின் படைப்பான "சொல்லோவியங்கள்" கவிதை நூல் எம் கருத்துக்கு விருந்தளிக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த விழாவிற்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தளித்த பள்ளி நிருவாகத்திற்கும், இவ்விழாவிற்கு பார்வையாளர்களாக வந்து விழாவைச் சிறப்பித்த அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நெஞ்சார்ந்த நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மனப்பாடப் பாடல் - தன்னேர் இலாத தமிழ்**

*ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி*
*ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது*
*தன்னேர் இலாத தமிழ்.*

*- தண்டி*

பாவகை : நேரிசை வெண்பா.

**இலக்கணக் குறிப்பு (எவ்வாறு கண்டறிவது என்பதை பக்க எண் இல் காண்க)**

1. செம்பரிதி, செந்தமிழ், செந்நிறம் - பண்புத்தொகைகள்
2. முத்துமுத்தாய் - அடுக்குத்தொடர்
3. சிவந்து - வினையெச்சம்
4. வியர்வை வெள்ளம் - உருவகம்
5. வெங்கதிர் - பண்புத்தொகை
6. உயர்ந்தோர் - வினையாலணையும் பெயர்
7. இலாத - இடைக்குறை

**பகுபத உறுப்பிலக்கணம் (எவ்வாறு பிரிப்பது என்பதை பக்க எண் இல் காண்க)**

1. **சாய்ப்பான்** = சாய் + ப் + ப் + ஆன்
சாய் - பகுதி, ப் - சந்தி, ப் - எதிர்கால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

2. **விம்முகின்ற** = விம்மு + கின்று + அ
விம்மு - பகுதி, கின்று - நிகழ்கால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி

3. **வியந்து** = விய + த்(ந்) + த் + உ
விய - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

*4.* ***இருந்தாய்*** *= இரு + த்(ந்) + த் + ஆய்*

*இரு - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.*

*5.* ***உயர்ந்தோர்*** *= உயர் + த்(ந்) + த் + ஓர்*

*உயர் - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி.*

*6.* ***விளங்கி*** *- விளங்கு + இ*

*விளங்கு - பகுதி, இ - வினையெச்ச விகுதி.*

*7.* ***வந்து*** *- வா(வ) + த்(ந்) + த் + உ*

*வா - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.*

***புணர்ச்சி விதி (எவ்வாறு பிரித்து, விதி எழுதுவது என்பதை பக்க எண் இல் காண்க)***

*1.* ***செம்பரிதி*** *- செம்மை + பரிதி*

*ஈறுபோதல் விதிப்படி "மை" விகுதி கெட்டு, செம்பரிதி என ஆயிற்று.*

*2.* ***வானமெல்லாம்*** *- வானம் + எல்லாம்*

*உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி (ம் + எ = மெ) வானமெல்லாம் என ஆயிற்று*

*3.* ***உன்னையல்லால்*** *- உன்னை + அல்லால்*

*உன்னை + ய் + அல்லால் (இஈஐ வழி யவ்வும் விதிப்படி ய் தோன்றியது)*

*உன்னையல்லால் (உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி ய் + அ = ய ஆயிற்று).*

*4.* ***செந்தமிழே*** *- செம்மை + தமிழ்*

*செம் + தமிழே (ஈறுபோதல் விதிப்படி மை கெட்டது)*

*செந்தமிழே (முன்னின்ற மெய் திரிதல் விதிப்படி ம் - ந் ஆனது).*

*5.* ***ஆங்கவற்றுள்*** *= ஆங்கு + அவற்றுள்*

*ஆங்க் + அவற்றுள் (உயிர்வரின் உக்குரல் மெய்விட்டு ஓடும் விதிப்படி உகரம் கெட்டது)*

*ஆங்கவற்றுள் - (உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி க் + அ = க ஆயிற்று).*


*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. ***தனியாழி*** = தனி + ஆழி

தனி + ய் + ஆழி (இஈஐ வழி யவ்வும் விதிப்படி ய் தோன்றியது)

தனியாழி - (உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி ய் + ஆ = யா ஆயிற்று).

7. **வெங்கதிர்** = வெம்மை + கதிர்

வெம் + கதிர் (ஈறுபோதல் விதிப்படி மை கெட்டது)

வெங்கதிர் (முன்னின்ற மெய் திரிதல் விதிப்படி ம், ங்ஆகத் திரிந்தது)

இலக்கணம் - தமிழாய் எழுதுவோம்

***1. பிழையான தொடரைக் கண்டறிக.***

*இ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது.*

**2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.**

*அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.*

***3. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.***

என்னால் **முடிந்தால்** முதியோர் இல்லத்திற்கு நிதி உதவி செய்வேன்.

இந்த வேலையை **முடித்தால்** கூலியைத் தருவேன்.

***4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?***

- எழுத்துக்களை தெளிவாக உச்சரிக்க வேண்டும். மயங்கொலிச் சொற்களை உரிய வேறுபாட்டுடன் உச்சரிக்க வேண்டும்.
- வாய்விட்டுப் படிக்கும் பயிற்சி பிழைகளைத் தவிர்க்க ஏதுவாகும்.
- பலமுறை எழுதிப்பார்த்தும், சொல்வதை எழுதும் பயிற்சி, பொருள் வேறுபாடு அறிதல் போன்ற பயிற்சிகள் மூலம் பிழைகளைத் தவிர்க்கலாம்.

மொழிப்பயிற்சி

***தமிழாக்கம் தருக.***

1. Learning is a treasure that will follow its owner everywhere.

கல்வி எனும் புதையல், அதனை உடையவரையே (கற்றார்) பின்தொடரும். (அல்லது) கற்றோர்க்கு செல்லும் இடமெல்லாம் சிறப்பு.

2. A new language is a new life.

*ஒரு புதிய மொழி, புதிய வாழ்க்கையை உருவாக்கும்.*

3. If you want people to understand you, speak their language.

*மக்கள் உங்களைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், அவர்களுடைய மொழியில் பேசுங்கள்.*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

4. Knowledge of languages is the doorway to wisdom.

*மொழிப்புலமை என்பது ஞானத்தின் நுழைவு வாயில். (அல்லது) மொழிகளின் அறிவு ஞானத்தின் திறவுகோல்.*

5. The limits of my language are the limits of my world.

*என் மொழியின் எல்லையே, என் உலகின் எல்லை. (மொழியே எல்லை).*

### இலக்கிய நயம் பாராட்டல்



*முச்சங்கங் கூட்டி*
*முதுபுலவர் தமைக் கூட்டி*
*அச்சங்கத் துள்ளே*
*அளப்பரிய பொருள்கூட்டி*
*சொற்சங்க மாகச்*
*சுவைமிகுந்த கவிகூட்டி*
*அற்புதங்க ளெல்லாம்*
*அமைத்த பெருமாட்டி*

*- கண்ணதாசன்.*



**திரண்ட கருத்து :**

*மூன்று சங்கங்களையும் கூட்டி, அங்கு புலவர்களை ஒன்று திரட்டி, நற்கருத்துக்களை உடைய நூல்களையும், சுவை மிக்க கவிதைகளையும் திரட்டி, அற்புதங்களைப் படைத்தவள் தமிழ்த்தாய்.*

**மையக்கருத்து :**

*முச்சங்கம் அமைத்து, புலவர்களால் வளர்க்கப்பட்டது தமிழ்மொழி.*

**எதுகை :**

*அடி அல்லது சீர் தோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை ஆகும்.*

**பாடலிலுள்ள எதுகைச் சொற்கள்:**

*முச்சங்கம் - அச்சங்கம், சொற்சுவை - அற்புதம்.*

**மோனை :**

*அடி அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.*

www.Padasalai.Net



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பாடலிலுள்ள மோனைச் சொற்கள்:**

**மு**ச்சங்கம் - **மு**துபுலவர், **அ**ச்சங்கம் - **அ**ளப்பரிய, **சொ**ற்சங்கம் - **சு**வைமிகுந்த, **அ**ற்புதம் - **அ**மைத்த.

**அணி :**

தமிழ்மொழி வளர்ந்த விதத்தை உள்ளதை உள்ளவாறே கூறியிருப்பதால், இப்பாடல் இயல்பு நவிற்சி அணி ஆகும்.

**இயைபு :**

அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றி வருவது இயைபு ஆகும். இப்பாடலில் **கூட்டி** என்ற சொல் இயைபாக எல்லா அடிகளிலும் இடம்பெற்றுள்ளது.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாக உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சை கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே: மொழியால் வளர்பவரும் மக்களே.

**வினாக்கள்:**

1. மொழி என்பது யாது?
2. மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவி எது?
3. பெற்ற தாயின் முதல் வேட்கை எது?
4. குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது எது?
5. மனம் எதனால் அமைகிறது?
6. மொழிக்கு ஆசிரியராக உள்ளவர் யார்?
7. மொழியை வளர்ப்பவரும், மொழியால் வளர்பவரும் யார்?
(இது போன்று மாணவரே சொந்தமாக உருவாக்கிக் கொள்ளலாம்)

உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. **தாமரை இலை நீர் போல** - **தாமரை இலை நீர் போல** நம் வாழ்க்கையில் ஆசைகளுடன் ஒட்டியும் ஒட்டாமலும் வாழவேண்டும்.
2. **கிணற்றுத் தவளை போல** - வெளியுலகம் தெரியாமல் வாழும் கிராமத்து மாணவர்கள் **கிணற்றுத் தவளை போல** வாழ்கின்றனர்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

3. **எலியும் பூனையும் போல** - நானும் என் சகோதரனும் **எலியும் பூனையும் போல** எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டே இருப்போம்.
4. **அச்சாணி இல்லாத தேர் போல** - தாய் அல்லது தந்தையை இழந்த குடும்பமானது **அச்சாணி இல்லாத தேர் போல** ஆனது.
5. **உள்ளங்கை நெல்லிக்கனி போல** - தமிழ் மொழியின் தனிப்பெருஞ் சிறப்புகள் **உள்ளங்கை நெல்லிக்கனி போல** வெளிப்படையானது.

## கட்டுரைப் பயிற்சி

### தாய்மொழி வழிக் கல்வியின் சிறப்புகள்.

**முன்னுரை :**

"தாய்மொழி கண் போன்றது, பிறமொழி கண்ணாடி போன்றது". நமது எண்ணங்களைப் பிறருக்கு வெளிப்படுத்த உதவுவது மொழியே. கருத்துப்பறிமாற்றத்திற்கு உதவுவது மொழியே. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த மொழி தாய்மொழியாக இருந்தால் எவ்வளவு பயன் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தாய்மொழிக் கல்வியின் தேவை :**

தாயின் கருவறையிலேயே குழந்தை கற்கும் மொழியே தாய்மொழி ஆகும். தாய்மொழி என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் தொப்புள்கொடி உறவு போன்றது. நம் சிந்தனை ஆற்றல் வளர்ச்சிக்கும் கற்பனை வளர்ச்சிக்கும், படைப்பாற்றலுக்கும் துணைபுரிவது தாய்மொழியே. எனவே கல்வியானது தாய்மொழியிலேயே கற்பிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் கற்றல் முழுமை பெறும்.

**தாய்மொழிச் சிந்தனை :**

சிந்தனை வளர்வதற்குத் தாய்மொழியே சிறந்த கருவியாகும். இலக்கியத்தில் "நோபல் பரிசு" பெற்ற தாகூர் தம் தாய்மொழியான வங்காள மொழியிலேயே முதலில் எழுதினார். இவ்வாறு உலகில் பெரும்பாலான சிந்தனையாளர்கள் தமது முதல் படைப்பை தங்கள் தாய்மொழியிலேயே அளித்தனர்.

**அறிஞர்களின் பார்வை :**

ஜப்பான், ரஷ்யா, சீனா, ஜெர்மன், பிரான்சு, இங்கிலாந்து, ஸ்பெயின், கியூபா போன்ற நாடுகள் தொழில் முன்னேற்றமும், அறிவியல் முன்னேற்றமும் பெற்றிருக்கக் காரணம் தாய்மொழியிலேயே அவர்கள் படிப்பதால்தான் என்பது அறிஞர்களின் கருத்தாக அமைகிறது.

**கற்கும் திறன் :**

தாய்மொழிவழிக் கல்வி பெறுபவரே, கற்றல் திறனில் சிறந்து விளங்குகின்றனர். இதற்கு மேலை நாட்டவரின் சாதனைகளே சான்றாக உள்ளது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com



தாய்மொழி வழியாகக் கல்வி பயில்வோரே மிகுதியாக நோபல் பரிசு பெற்றுள்ளனர்.

*அறிஞர்கள் கூற்று :*

தாய்மொழி வழிக் கல்வியே நம்மை அறிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும் என்று அறிஞர் பெருமக்கள் கூறியிருக்கின்றனர். காந்தியடிகள் தாய்மொழிக்கல்வி பற்றிக் கூறும்போது ஜெகதீஷ் சந்திரபோஸ், பி.சி.ராய் முதலியோரின் சாதனைகளைக் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் தாய்மொழி மூலம் நமக்குக் கல்வி அளிக்கப்பட்டிருந்தால் நம்மிடையே பல போஸ்களும், இராய்களும் தோன்றியிருப்பார்கள். கோத்தாரி கல்விக்குழுவும் தாய்மொழிக்கல்வியையே வலியுறுத்துகிறது.

*கற்கும் திறன் :*

தாய்மொழியைப் போற்றி வீழ்ந்த நாடும் இல்லை, தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை. தாய்மொழி மூலமாகவே ஒருவர் தாம் கூற விரும்பும் கருத்தைத் தெளிவாகவும், முழுமையாகவும் தெரிவிக்க முடியும். தாய்மொழியில் கற்றால் மட்டுமே கற்றல் முழுமை அடையும்.

***இன்றைய நிலை :***

இன்று தாய்மொழி வழியில் கற்பதை கௌரவக் குறைச்சலாகவும், கேவலமாகவும் நினைக்கின்றனர். தாய்மொழியில் கல்வி கற்றவரை தரம் குறைந்தவர்களாகப் பார்ப்பது சமூகத்தில் நிலவி வரும் அவலங்களுள் ஒன்றாகும். அதனாலேயே கல்வி கற்போருக்கு தற்போது அரசு பணியில் முன்னுரிமை, இட ஒதுக்கீடு வழங்கி தாய்மொழிக் கல்வியை ஊக்குவிக்கிறது.

***முடிவுரை :***

மொழி என்பது கருத்துப் பரிமாற்றத்திற்கான கருவி மட்டுமன்று, அது அறிவையும், புகழையும் தந்து சாதனைகளுக்கு வழிவகுக்கும். தாய்மொழிக் கல்வியே சிறந்தது. அதுவே வாழ்வுக்கு உயர்வைத் தரும்.

## மொழியோடு விளையாடு

***குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.***

1. கவிஞர்: ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் - கவிமணி.
2. தமிழறிஞர் : முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம் - மறைமலை அடிகள்.
3. தாய்மொழி : ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும் - தமிழ்ஒளி.
4. சிறுகதை ஆசிரியர் : முதல்பாதி நவீனம் - புதுமைப்பித்தன்.
5. முன்னெழுத்து அரசன் : பின்னெழுத்து தமிழ் மாதம் - கோதை





திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

www.Padasalai.Net

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.
குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
உயிரின் ஒலியில் உளியின் ஒலி
உளியின் ஒலியில் உள்ளத்தின் ஒளி
உள்ளத்தின் ஒளியில் வாழ்வின் வலி.

ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் :

1. Subscription - உறுப்பினர் கட்டணம்.
2. Archive - காப்பகம்.
3. Fiction - புனைவு.
4. Manuscript - கையெழுத்துப் பிரதி.
5. Biography - வாழ்க்கை வரலாறு.
6. Biblography - நூல் நிரல்.

**கூடுதல் வினாக்கள்:**

1. சிற்பி பாலசுப்பிரமணியம் எந்த நூலிற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றார்? - **ஒரு கிராமத்து நதி.**
2. அணிக்கு இலக்கணம் கூறும் நூல் எது? - **தண்டியலங்காரம்.**
3. தண்டியலங்காரம் எந்நூலின் தழுவல்? - **காவியதர்சம்.**
4. தண்டியலங்காரத்தின் ஆசிரியர் யார்? - **தண்டி.**
5. தண்டியலங்காரம் இயற்றப்பட்ட காலம் எது? - **பொ.ஆ. 12ஆம் நூற்றாண்டு.**
6. வ.உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் யார்? - **பரலி.சு.நெல்லையப்பர்.**
7. தேசபக்தன் இதழின் துணையாசிரியர் யார்? - **பரலி.சு.நெல்லையப்பர்.**

**8. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?**

தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம் ஆகியன அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்களாகும். **(2022 திருப்புதல் தேர்வு)**

**9. ஓங்கலிடை வந்து எனத்தொடங்கும் பாடல் தண்டியலங்காரத்தில் எப்பகுதியில் இடம்பெற்றுள்ளது?**

பொருளணியியல்.

**10. தண்டியலங்காரத்தின் பிரிவுகள் யாவை?**

பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் ஆகிய மூன்றும் தண்டியலங்காரத்தின் பிரிவுகளாகும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***11. பரலி சு.நெல்லையப்பரின் பன்முகங்கள் யாவை?***

*விடுதலைப் போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர் ஆகியன பரலி சு.நெல்லையப்பரின் பன்முகங்களாகும்.*

***12. பரலி சு.நெல்லையப்பர் பதிப்பித்த நூல்கள் யாவை?***

*பாரதியாரின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப் பாட்டு, முரசுப்பாட்டு ஆகியன பரலி சு.நெல்லையப்பர் பதிப்பித்த நூல்கள் ஆகும்.*

***13. பரலி சு.நெல்லையப்பர் ஆற்றிய பணிகள் யாவை?***

*பாரதி நடத்திய சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும், லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றினார்.*

*நெல்லைத் தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களையும், வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதினார்.*

***14. தம்பி நெல்லையப்பருக்கு எனும் கடிதம் எந்நூலில் இடம்பெற்றது?***

*ரா.அ. பத்மநாபன் பதிப்பித்த பாரதி கடிதங்கள் என்னும் நூலில் இடம்பெற்றது.*

***15. பாரதியின் கடிதத்தின் சிறப்பு யாது?***

*பதினைந்து வயதில் கல்வி கற்க உதவி வேண்டி எட்டையபுரம் அரசருக்கு எழுதிய கடிதம் முதல் அவருடைய மறைவிற்கு முன் குத்திகேசவருக்கு எழுதிய கடிதம் வரை அனைத்தும் நம்மிடம் பேசுவது போல இருப்பதே அவருடைய நடையழகின் சிறப்பு.*

***16. பாரதி யாரைத் தம் தம்பியாகவே கருதினார்?***

*பரலி சு. நெல்லையப்பரைத் தன்னுடைய அருமைத் தம்பியாகவே கருதினார் பாரதியார்.*

***17. வம்சதீபிகை நூலின் மூலவடிவத்தை 2008 இல் மறுபதிப்பாக வெளியிட்டவர் யார்?***

*இளசை மணி.*

***18. தமிழில் தொகை மொழிகளுக்கு சான்று தருக.***

*வைகுறு விடியல், கன்னி விடியல், புல்லென் மாலை, நள்ளென் யாமம், காமர் வனப்பு போன்றன தொகை மொழிகள் ஆகும்.*

***19. சிற்பி பாலசுப்பிரமணியம் எந்தெந்த நூலிற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றார்?***

*மொழிபெயர்ப்பிற்காகவும், ஒரு கிராமத்து நதி நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.*

***20. சிற்பி பாலசுப்பிரமணியம் இயற்றிய கவிதை நூல்கள் யாவை?***

*ஒலிப்பறவை, சர்ப்ப யாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி.*

***21. சிற்பி பாலசுப்பிரமணியம் இயற்றிய உரைநடை நூல்கள் யாவை?***

*மலையாளக் கவிதை, அலையும் சுவடும்.*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

***22. சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராக இருந்தவர் யார்?***

*சிற்பி பாலசுப்பிரமணியம்.*

***23. மலையாளத்திலிருந்து கவிதைகள், புதினங்களையும் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?***

*சிற்பி பாலசுப்பிரமணியம்.*

***

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் 2



| | | |
|---|---|---|
| செய்யுள் | : | பிறகொருநாள் கோடை ~ அய்யப்ப மாதவன் |
| | | நெடுநல்வாடை ~ நக்கீரர் |
| உரைநடை | : | பெருமழைக்காலம் |
| துணைப்பாடம் | : | முதல்கல் ~ உத்தம சோழன் |
| இலக்கணம் | : | நால்வகைப் பொருத்தங்கள் |

www.Padasalai.Net

**பலவுள் தெரிக.**

*1. பொருத்துக.*

*அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன.*
*ஆ) விலங்குகள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன.*
*இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின.*
*ஈ) பசுக்கள் - 4) மேய்ச்சலை மறந்தன.*

*அ) 1, 3, 4, 2   ஆ) 3, 4, 2, 1   இ) 3, 2, 1, 4   ஈ) 2, 1, 3, 4*

***விடை : ஆ) 3, 4, 2, 1***

*2. நரம்புக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது.*

*அ) சூரிய ஒளிக்கதிர்கள்   ஆ) மழை மேகங்கள்   இ) மழைத்துளிகள்*
*ஈ) நீர் நிலைகள்*

***விடை : இ) மழைத்துளிகள்***

*3. வெள்ளச்சமவெளிகள் அழியக் காரணம்.*

*அ) பருவநிலை மாற்றம்   ஆ) மணல் அள்ளுதல்*
*இ) பாறைகள் இல்லாமை   ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்*

***விடை : ஆ. மணல் அள்ளுதல்.***



*திரு, ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. "**பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தன" தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு,
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர் இ) இடைச்சொல் தொடர்
ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**விடை : ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.**

5. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது.
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது.
இ) காலநிலை மாறுபடுகிறது.
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

**விடை : அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.**

**குறுவினா :**

**1. "ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்" எனும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**

- மரங்கள் இயற்கை நமக்களித்த வரங்கள்.
- பல வகைகளிலும் நமக்கு உதவும் மரங்களை நாம் வளர்க்க வேண்டும்.
- மரங்கள் நம் நாட்டின் செல்வங்கள் என்பதை உணர்ந்து காடுகளை உருவாக்கி, பசுமைப் பாரதத்தை உருவாக்குவோம்.
  மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்: பெற்ற மழை நீரை வீணாக்காமல் சேகரிப்போம்.

**2. இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

இனநிரை = இனம் + நிரை

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் என்ற விதிப்படி "**ம்** " மகர ஒற்று கெட்டு, இனநிரை என ஆனது.

**3. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான். - இரு தொடர்களாக்குக.**

- மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்.
- மனிதன் இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

**4. "நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது" - விளக்கம் தருக.**

- மழைக்காலத்தில் பெய்த மழையின் காரணமாக நகரத்தின் மாசுக்கள் அகன்றன.
- சூரியன் திடீரென்று பயணம் செய்கிறது. மாசுக்கள் அகன்ற நகரம், பட்டை தீட்டிய வெள்ளை வைரம் போலக் காட்சியளிக்கிறது.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**சிறுவினா :**

**1. "நீர் நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து**
**உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்" - இக்கவிதையின் அடி,**
**"தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே" எனும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாக அமைவதைப் பற்றி எழுதுக.**

✓ முதற்பாடலில் நீர் நிலைகளிலிருந்து சூரியன் உதடு குவித்து நீரை உறிஞ்சுவதாக கற்பனையாகப் பாடியுள்ளார் கவிஞர் அய்யப்ப மாதவன்.
✓ இரண்டாம் பாடலில் பனிநீரானது இலையில் தூங்குவதாகவும், அதனை கதிரவன் வாங்குவதாகவும் பாடியுள்ளார்.
✓ இரண்டு பாடல்களிலிருந்தும் கதிரவனின் வெப்பம் காரணமாக நீர் ஆவியாகும் இயற்கை நிகழ்வே காட்டப்பட்டுள்ளது.

**2. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

⌖ கோவலர் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்த மேகம், உலகம் குளிருமாறு மழையைப் பொழிந்தது.
⌖ தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலத்தில் மேயவிட்டனர்.
⌖ தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயர்ந்ததால் வருந்தினர்.
⌖ ஆயர் சூடிய காந்தள் மாலை கசங்கியது.
⌖ பலரும் சேர்ந்து நெருப்பு மூட்டி, கைகளைச் சூடேற்றிய போதிலும், அவர்களின் பற்கள் நடுங்கின.
⌖ குளிர் மிகுதியால் விலங்குகள் மேய்ச்சலை மறந்தன, குரங்குகள் நடுங்கின, பறவைகள் மரத்திலிருந்து வீழ்ந்தன, பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

**3. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

✧ பேரிடர்க் காலங்களில் தாங்கக்கூடியவையாக புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும்.
✧ நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடங்களை உருவாக்கி, அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.
✧ சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைச் சமூக இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும்.
✧ கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தல் வேண்டும்.
✧ மலைச் சரிவுகள், ஆற்றங்கரை, தாழ்வான இடங்கள் போன்ற இடங்களில் வசிப்போர் மழைக்காலங்களில் வானிலை ஆய்வு மையத்தின் அறிவுரை, அரசின் ஆணை ஆகியவற்றை முறைப்படி கடைப்பிடித்து, பாதுகாப்பான இடங்கட்கு குடிபெயர வேண்டும்.

**4. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக. (2024 மார்ச் வினா)**

* பேரிடர் மேலாண்மை ஆணையம் நடுவண் அரசால் 23.12.2005 அன்று துவங்கப்பட்டது.



திரு, ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

* புயல், வெள்ளம், சுனாமி, நிலநடுக்கம், தீவிபத்து, பனிப்புயல், வேதி விபத்துக்கள் போன்ற பேரிடர்கள் நிகழும்போது இந்த அமைப்புகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த இந்த ஆணையம் உதவுகிறது.
* இக்குழு மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் பேரிடர் காலங்களில் ஒருங்கிணைந்து செயல்படுகின்றது.
* தீயணைப்புத்துறை, காவல்துறை, மருத்துவத் துறை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கைகோர்த்து பணியாற்றுகின்றன.

**நெடுவினா:**

***1. "நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து" என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.***

**நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து**

**புவியரசன் :** வணக்கம் ஐயா.

**பசுமைதாசர் :** வணக்கம்.

**புவியரசன் :** சுற்றுச்சூழல் மாசு எவற்றால் ஏற்படுகிறது? இதைப் பற்றி விளக்குங்கள் ஐயா.

**பசுமைதாசர் :** தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகை மற்றும் கழிவுகள், வாகனப்புகை, செயற்கை உரங்கள், நெகிழி போன்றவற்றால் நிலம், நீர், காற்று ஆகியன மாசடைகின்றன.

**புவியரசன் :** நெகிழியால் எவ்வாறு பாதிப்பு ஏற்படுகிறது?

**பசுமைதாசர் :** மனிதர்கள் தினந்தோறும் பயன்படுத்திவிட்டு, தூக்கி எறியும் நெகிழியால் சுற்றுச்சூழல் பெருமளவில் மாசடைகிறது.

**புவியரசன் :** அப்படியா. கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்கள் ஐயா.

**பசுமைதாசர் :** கூறுகிறேன். நம் அன்றாட வாழ்வில் நெகிழியை அதிகம் பயன்படுத்துகிறோம். அவ்வாறு பயன்படுத்திவிட்டு, நெகிழிப் பைகளை நிலத்தில் போடுவதால், நீர் நிலத்தில் ஊறுவது இல்லை. இதனால் நிலத்தடி நீர் வெகுவாகக் குறைகிறது. குப்பையில் கிடக்கும் நெகிழிப்பைகளை கால்நடைகள் உண்பதால், அவை செரிமாணம் ஆகாமல், அவற்றின் உயிருக்கே ஊறு விளைவிக்கின்றன.

**புவியரசன் :** அப்போது நெகிழியை எரித்து விடலாமே?

**பசுமைதாசர் :** நெகிழியை எரிப்பதால் கார்பன் மோனாக்ஸைடு போன்ற நச்சுக்காற்றுகள் வெளியேறுகின்றன. அது காற்று மாசை ஏற்படுத்தி, நம் உடல்நலத்தை பெரிதும் பாதிக்கிறது. மேலும் அது எரித்தாலும் சாம்பலாவதில்லை. நெகிழி மண்ணில் மட்குவதற்கு ஆயிரம் ஆண்டுகள் கூட ஆகும். மேலும் கழிவுநீர்க் கால்வாய்களை நெகிழிப்பைகள் அடைத்துக் கொள்வதால் கழிவுநீர் சாலையில் ஓடி சுற்றுச்சூழலுக்கு பெரும் தீவிளைவை ஏற்படுத்துகின்றன.

**புவியரசன் :** இதைத் தடுக்க வேறு வழியே இல்லையா?

**பசுமைதாசர் :** ஏன் இல்லை. நெகிழியைத் தவிர்ப்பது ஒன்றே வழி.

**புவியரசன் :** எப்படி ஐயா?



திரு, ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பசுமைதாசர் :** உணவகம், பால், எண்ணெய் போன்ற அங்காடிகளுக்குச் செல்லும்போது உரிய பாத்திரங்களை உடன் எடுத்துச் செல்லலாம். மளிகைப் பொருள்களை காகிதப் பைகளில் வாங்கலாம். கடைகளுக்குச் செல்லும்போது, துணிப்பைகளை உடன் எடுத்துச்செல்லலாமே.

**புவியரசன் :** சரி ஐயா. நெகிழி நீர்ப்புட்டிகளைப் பயன்படுத்துவதில் தவறில்லையா?

**பசுமைதாசர் :** கண்டிப்பாகத் தவறு. குளிர்பானங்கள் மற்றும் குடிநீரை நெகிழிப் புட்டிகளில் வைத்துப் பயன்படுத்தும்போது, நெகிழியின் சிறு துகள்கள் அவற்றில் இருக்கும். அவற்றை அருந்துவதால் நம் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கின்றது. அது போன்றே நெகிழிக் குவளைகளையும் பயன்படுத்துவது தீங்கினை விளைவிக்கும்.

**புவியரசன் :** தேனீர்க் கடைகளில் சூடான தேனீரை நெகிழிக்குவளைகளில் தருகிறார்களே.

**பசுமைதாசர் :** ஆம். சூடான பொருட்களை நெகிழிக்குவளைகளில் வைப்பதால். அதிலுள்ள உணவுப்பொருள் நஞ்சாகிறது. சுற்றுச்சூழலுக்கும், உடல்நலத்திற்கும் கேடு விளைவிக்கும் நெகிழியைப் பயன்படுத்துவதை நாம் அடியோடு நிறுத்த வேண்டும். அரசு நெகிழிக்கு முற்றிலும் தடைவிதிக்க வேண்டும்.

**புவியரசன் :** தங்கள் தகவலுக்கு மிக்க நன்றி ஐயா.

**பசுமைதாசர் :** நன்றி. நெகிழி தவிர்த்து, நிலத்தை நிமிர்த்து.

**2. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.**

## நெடுநல்வாடை - நக்கீரர்.

### நெடுநல்வாடை காட்டும் மழைக்கால வருணனை:

**முன்னுரை :**

மழை என்பது இயற்கையின் கொடை. முல்லை நில மக்கள், பறவைகள், விலங்குகள் இவற்றின் வாழ்வில் மழையும், குளிரும் ஏற்படுத்தும் மாற்றத்தை சங்க நெடுநல்வாடை எனும் சங்க இலக்கியம் பதிவுசெய்கிறது.

**பழமொழி**

- ஐப்பசி மாதம் அடைமழை, கார்த்திகை மாதம் கனமழை என்பது சொலவடை(பழமொழி).
- ஓராண்டை ஆறு பருவங்களாக வகைப்படுத்திய பழந்தமிழர், ஐப்பசி, கார்த்திகை மாதங்களை கூதிர்ப்பருவம் (குளிர்காலம்) என்று அழைத்தனர்.

**மழைப்பொழிவு**

- கோவலர் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்த மேகம், உலகம் குளிருமாறு மழையைப் பொழிந்தது.

**பெருமழை தந்த மாற்றம்**

- தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலத்தில் மேயவிட்டனர்.
- தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயர்ந்ததால் வருந்தினர்.
- ஆயர் சூடியிருந்த காந்தள் மாலை கசங்கியது.
- பலரும் சேர்ந்து நெருப்பு மூட்டி, கைகளைச் சூடேற்றிய போதிலும், அவர்களின் பற்கள் நடுங்கின.
- குளிர் மிகுதியால் விலங்குகள் மேய்ச்சலை மறந்தன, குரங்குகள் நடுங்கின.

➢ பறவைகள் மரத்திலிருந்து வீழ்ந்தன, பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

➢ மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

**முடிவுரை:**

முல்லை நில மக்கள், பறவைகள் மற்றும் விலங்குகள் மழை மற்றும் குளிரால் அவர்தம் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றத்தை நெடுநல்வாடை படம் பிடித்துக் காட்டியது. இது போன்ற இலக்கியங்களைப் படித்து பழந்தமிழரின் வாழ்க்கை முறைமையை உணர்வோமாக.

**3. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க. (2024 மார்ச் வினா)**

**துணைப்பாடம் : முதல்கல் ~ உத்தம சோழன்**

**மன வரைபடம்**

**கதா பாத்திரங்கள் :** மருதன், மனைவி : அல்லி

மிராசுதாரர் : கிழவர் காளியப்பன், அவரது மனைவி கிழவி முல்லையம்மா

மீன் பிடித்துக் கொண்டிருந்தவன் : மாரி முத்து

கிராமத்தின் முதல் பட்டதாரி : பிரேம்குமார் (நாகூர் பிச்சை)

**கதைச்சுருக்கம் :** ஐப்பசி, கார்த்திகை மழையால் கிராமத்தில் பயிர்கள் அனைத்தும் மூழ்கின. இன்னும் சில நாட்களில் அவை அழுகிவிடும். தண்ணீர் வடியாததற்குக் காரணம் வாய்க்காலில் வளர்ந்திருந்த காட்டாமணக்குச் செடிகள். அவைகளைப் பிடுங்கி எறிந்தால் தண்ணீர் வடிந்து பயிர்கள் காப்பாற்றப்படும். இதை அனைவரிடமும் சொல்லி உதவி கேட்கிறான். யாரும் உதவாத சூழலில் தானே இறங்கி அப்பணியைச் செய்கிறான். உதவிக்கு அவன் மனைவி, மாரிமுத்து வர, காளியப்பன் மற்றும் ஊர்மக்கள் ஒன்று திரண்டனர். நல்லதொரு தொடக்கத்திற்கு மருதனே முதல்கல்லாக இருக்கிறான்.

**முன்னுரை :**

பயிர்களை வளர்ப்பதும், உயிரூட்டுவதும் மழையே ஆகும். பயிரைக் காக்க வேண்டிய மழை பெருமழையாகப் பெய்து, வெள்ளமாகித் தேங்குகையில் பயிர்கள் அழுகி விடுகின்றன. இதற்குக் காரணம் நீர்வழிப்பாதைகளை முறைப்படி பராமரிக்காமல் இருப்பதே. மருதன் பொறுப்புணர்வால் தன் பயிர்களைக் காத்தான். அவனுடைய பண்புநலன்களைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**குழந்தைப்பயிர் :**

வங்கக் கடலில் உருவான புயர் காரணமாக பலத்த மழை பெய்யக்கூடும் என்ற செய்தி கேட்டதும் துடிதுடித்துப் போனான் மருதன். சம்பா பருவத்தில் மழை பெய்ததால் நாற்றுநட்டு ஒரே வாரமான நிலையில் அபரிமிதமான மழையால் பயிர்கள் நீரில் மூழ்கின. இன்னும் ஒரு நாள் நீர் தேங்கினாலும் குழந்தைப்பயிர்கள் அழுகிவிடும் என வருந்தினான் மருதன்.

**மருதப்பனின் யோசனை :**

உபரிநீர் வடிவதற்காக இருந்த கால்வாயில் மண்டிக்கிடக்கும் காட்டாமணக்குச் செடிகளைப் பிடிங்கி எறிந்தாலே நீரெல்லாம் வடிந்துவிடும். பயிர்களை காப்பாற்றிவிடலாம் என்ற யோசனை மருதப்பனுக்கு உருவாயிற்று.



திரு, ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**உதவிகேட்டல் :**

ஊரில் உள்ள அனைவரும் காட்டாமணக்குச் செடிகளை அகற்றினால் வெள்ளம் வடிந்துவிடும். எனவே முதலில் மாரியிடம் கூறினான். ஆனால் அவனோ மீன் பிடிப்பதிலேயே குறியாக இருந்தான்.

ஊரில் பெரிய மிராசான காளியப்பனிடம் கூறினான். அவரோ தன் மகளின் வீட்டிற்குச் செல்லப்போவதாகக் கூறி, மருதனின் யோசனையை நிராகரித்தார்.

நாகூர் பிச்சை என்ற பெயர்கொண்ட பிரேம்குமார் படித்த பட்டதாரி. ஓர் அமைப்பிற்குத் தலைவர். அவரிடம் உதவி கேட்டான் மருதன். அவனோ இதுகுறித்து பி.டபிள்யூடி (PWD) இல் ஒரு மனு தரலாம் என்று கூறிவிட்டான். அதுவும் தோல்வியில் முடிந்தது.

**பொதுநலம் :**

மருதன் கண்ணில் பட்ட அனைவரிடமும் தன் யோசனையைக் கூறி, உதவி கேட்டான்: தோல்வியே மிஞ்சியது. வீட்டிற்குச் சென்று தன் மனைவி அல்லியிடம் கூறினான். அவளோ ஊரில் நம்முடைய நிலம் சக்கரைக்குழி இடம் கூட இல்லை: நமக்கென்ன என்று ஆவேசமாகக் கூறினாள். அவள் கொடுத்த உணவின் சுவையை உணராமல் கடமைக்குச்சாப்பிட்டான்.

தன் நிலம் மட்டுமன்றி ஊரார் பயிரும் அழியப் போவது எண்ணி வருந்தினான். அவனுடைய வருத்தத்தை உணர்ந்து, நீங்கள் சொல்வது சரிதான். எவருடைய உதவியுமின்றி, நம்மால் மட்டுமே செய்துவிட முடியுமா என்றாள் அல்லி.

**முதல்கல்லாய் களத்தில் மருதன் :**

பயிரை உயிரென்று எண்ணிய மருதன், அவற்றைக் காப்பாற்ற மார்பளவு நீரில் இறங்கி காட்டாமணக்குச் செடிகளைப் பிடிங்கி எறிந்தான். அதைக் கண்டு அல்லியும் இறங்கினாள். மீன் பிடித்துக் கொண்டிருந்த மாரிமுத்துவும் களத்தில் குதித்தான். அவ்வழியே வண்டியில் சென்ற காளியப்பனும் இதைக்கண்டு, அவரும் இறங்கினார். வண்டிக்காரன் மூலம் ஊருக்குள் பரவி அனைவரும் உதவிக்கு வந்தனர்.

**முடிவுரை :**

பயிர்களைக் காக்க முதல் கல்லாய் தானே இறங்கி பணியாற்றினான் மருதன். அவனைப் பின்தொடர்ந்து ஊரார் வந்து பயிரைக் காத்தனர். பொதுநலம் உடையவனாக மருதனின் பணி பாராட்டத் தக்கது. அவனைப் போல நாமும் பிறர்நலத்திலும் அக்கறை கொள்ள வேண்டும்.

**4. புயல் தாக்கத்தால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி, உங்கள் ஊர் மின்வாரிய பொறியாளர்களுக்குக் கடிதம் வரைக.**

**விடுநர்**

ஊர்ப்பொதுமக்கள்,
அஅஅ தெரு,
ஆஆஆ ஊர்,
இஇஇ மாவட்டம்.





www.Padasalai.Net

**பெறுநர்**

உயர்திரு. மின்வாரிய செயற் பொறியாளர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
ஆஆஆ ஊர்,
இஇஇ மாவட்டம்.

**ஐயா,**

பொருள் : புயலால் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்தல் சார்பாக.

வணக்கம். நாங்கள் மேற்கண்ட பகுதியில் வசித்து வருகிறோம். சமீபத்தில் ஒகி புயலின் தாக்கத்தால் ஆங்காங்கே மின் கம்பங்கள் அடியோடு சாய்ந்து விட்டன. மின்கம்பிகள் அறுந்துகிடக்கின்றன. இதன் காரணமாக எங்கள் பகுதியில் மின் விநியோகம் தடைபட்டுள்ளது. மின்சாரம் இல்லாமல் மிகுந்த துயரத்திற்கு ஆளாகியுள்ளோம். தேர்வு நேரத்தில் மாணவர்கள் படிக்க இயலாமல் துன்பப்படுகின்றனர். எனவே, மின்சாரத்தின் அவசியம் கருதி, தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மிக்க நன்றி

இங்ஙனம்,
ஊர்ப் பொது மக்கள்,
அஅஅ கிராமம்.

இடம் : அஅஅ
நாள் : 26.12.2021

திணை (திணை, துறை விளக்கம் 4 மதிப்பெண் வினாவாக கட்டாயம் வரும்)

**வாகைத்திணை (2024 மார்ச் வினா)**

**திணை விளக்கம் :**

வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவர். இதுவே வாகைத் திணை ஆகும்.

**சான்று :**

"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணிநீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க"

**பாடற் பொருள் :**

மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது, தாழ்வான பகுதிகளில் வெள்ளத்தை வெறுத்த வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு, ஆடு ஆகியவற்றை மேடான இடத்தில் மேயவிட்டனர். பழகிய இடத்தை விட்டுப் பிரிந்ததால் அவர்கள் வருத்தம் அடைந்தனர். அவர்கள் தலையில் அணிந்திருந்த காந்தள் மாலை கசங்கியது. பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளைச் சூடேற்றியபோதிலும் அவர்களது பற்கள் நடுங்கின.

**பொருத்தம் :**

போர்ப் பாசறையில் இருக்கும் தலைவனுக்கு வெற்றியை தரக்கூடிய வாடைக்காலமாக இருந்தது. அவன் வெற்றிக்கு அடையாளமாக வாகைப் பூவைச் சூடி மகிழ்ந்ததால் இப்பாடல் வாகைத்திணை ஆகும்.

## துறை

**கூதிர்ப்பாசறைத் துறை**

**துறை விளக்கம் :**

போரின் காரணமாக படையெடுத்துச் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் இடத்திற்குக் கூதிர்ப்பாசறை என்று பெயர்.

**சான்று :**

"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணிநீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க"

**பாடற் பொருள் :**

மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது, தாழ்வான பகுதிகளில் வெள்ளத்தை வெறுத்த வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு, ஆடு ஆகியவற்றை மேடான இடத்தில் மேயவிட்டனர். பழகிய இடத்தை விட்டுப் பிரிந்தததால் அவர்கள் வருத்தம் அடைந்தனர். அவர்கள் தலையில் அணிந்திருந்த காந்தள் மாலை கசங்கியது. பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றியபோதிலும் அவர்களது பற்கள் நடுங்கின.

**பொருத்தம் :**

அரசன் போரின் காரணமாக குளிர்காலத்தில் தங்கியிருந்தான் என்று கூறியிருப்பதால் இப்பாடல் கூதிர்ப் பாசறைத் துறைக்குச் சான்றாயிற்று.

## இலக்கணம்

### நால்வகைப் பொருத்தங்கள்

1. தமிழில் திணைப்பாகுபாடு **பொருட்குறிப்பு** அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

2. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்றுள்ள இலக்கண நூல் **தொல்காப்பியம்.**

3. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே **உயர்திணை, அஃறிணை.**

**4. பொருத்துக.**

அ) அவன், அவள், அவர் - 4) பதிலிடு பெயர்கள்
ஆ) நாங்கள், முயற்சி செய்வோம் - 1) உளப்படுத்தாத் தன்மைப் பெயர்
இ) நாம் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப் பெயர்
ஈ) நாங்கள், நாம் - 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்

**5. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?**

மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன திணை, பால், எண், இடம் ஆகியனவாகும்.

**6. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

1. இரண்டு மனிதர்கள் சென்றனர்.
2. ஆயிரம் வீரர்கள் போர்க்களம் சென்றனர்.

## மொழிப்பயிற்சி

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

சான்று : விலை, விளை, விழை

கார் பருவத்தில் நன்றாக **விளை**ந்ததால் தானியங்களின் **விலை** குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள **விழை**வதாக அரசு அறிவித்தது.

**1. தலை, தளை, தழை**

தலை - உடலின் உறுப்பு, முதன்மை
தளை - கட்டுதல்
தழை - செழித்தல், இலை

நெற்பயிருக்கு உரமிடுவதற்காக **தழை**களைத் திரட்டிக் கயிற்றால் **தளை**யிட்டுத் **தலை**யில் சுமந்து சென்றான்.

**2. கலை, களை, கழை**

கலை - அழகு, களை - நீக்குதல், கழை - மூங்கில்

சிலம்பக்**கலை** கற்றவன் **கழை**யைக் கையில் எடுத்து சுழற்றி தன் பகை **களை**ந்து வெற்றி பெற்றான்.

**3.அலை, அளை, அழை**

அலை - கடலலை, அளை - புற்று, அழை - கூப்பிடுதல்

**அளை**யுள் இருந்த பாம்பினைப் பிடிக்க, **அலை**ந்து திரிந்து ஒரு பாம்பாட்டியை **அழை**த்து வந்தனர்.

## இலக்கிய நயம் பாராட்டல் :

**பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து, திரண்ட கருத்தை அல்லது மையக்கருத்தை எழுதி, எவையேனும் மூன்று நயங்களைச் சுட்டுக**



வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது:
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!
- பாரதியார்.

***திரண்ட கருத்து :***

*தம்பி வீரா, மின்னல் வெட்டுகிறது, கடல் சீறுகிறது, மேகம் இடிக்கிறது, காற்று விண்ணைக் குடைகிறது, வானத்திலிருந்து தாளமாக இடிக்கிறது, எட்டுத்திசைகளிலும் இடிஇடிக்க மழை வந்தது.*

***மையக் கருத்து:***

*மின்னல் மின்னி, கடல் சீறி, இடிஇடித்து மழை பெய்ததை மிக அழகாக பாரதியார் வருணித்துள்ளார்.*

***எதுகை :***

*அடி அல்லது சீர் தோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை ஆகும். பாடலிலுள்ள எதுகைச் சொற்கள்:*

*வெட்டி, கொட்டி, சட்டச், எட்டு*

***மோனை :***

*அடி அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும். பாடலிலுள்ள மோனைச் சொற்கள்:*

**வெ**ட்டி, **வீ**ர, **கொ**ட்டி, **கூ**வென்று **எ**ட்டு, **எ**ங்ஙனம்

***சந்தம் (ஓசை)***

*பாடலில் "சட்டச்சட சட்டச்சட டட்டா", "வெட்டி, கொட்டி, போன்ற ஓசை நயம் மிக்க சொற்கள் இடம்பெற்றுள்ளன.*

***கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக.***

*பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்*

*நாள் : அக்டோபர் 2* *நேரம் : காலை 10 மணி*

*இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை.*

*நிகழ்ச்சி நிரல்*

*தமிழ்த்தாய் வாழ்த்து*

*வரவேற்புரை : திருமதி. அரசி.*
*செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்.*

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

முன்னிலை : திரு. அமுதன், இயற்கை வேளாண் உழவர்.
தலைமையுரை : திரு. இமயவரம்பன்,
பேரிடர் மேலாண்மை இயக்குநர்

கருத்தரங்கத் தலைப்புகள்

- ✧ இயற்கைச் சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும் - முனைவர். செங்குட்டுவன்
- ✧ பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் - திரு. முகிலன்.
- ✧ நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் - திருமதி பாத்திமா.
- ✧ பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததும் - திரு. வின்சென்ட்

நன்றியுரை : பர்வீன், பசுமைப்படை மாணவர் தலைவர்
நாட்டுப்பண்.

2020ஆம் ஆண்டு அக்டோபர் 2 அன்று காலை 10 மணிக்கு பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம் சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கிய இந்நிகழ்ச்சியில், செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி அரசி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இயற்கை வேளாண் உழவர் திரு. அமுதன் முன்னிலை வகித்தார். பேரிடர் மேலாண்மை இயக்குநர் திரு. இமயவரம்பன் தலைமையுரை வழங்கினார்.

கருத்தரங்கில் இயற்கைச் சீற்றங்களும் பருவகால மாற்றங்களும் என்ற தலைப்பில் முனைவர் செங்குட்டுவன் அவர்களும், திரு. முகிலன் அவர்கள் பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் என்ற தலைப்பிலும், திருமதி பாத்திமா அவர்கள் நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் என்ற தலைப்பிலும், திரு. வின்சென்ட் அவர்கள் பேரிடர்க்காலங்களில் செய்யக்கூடியதும், செய்யக் கூடாததும் என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

நிகழ்ச்சியின் இறுதி நிகழ்வாக பசுமைப்படை மாணவர் தலைவர் பர்வீன் நன்றியுரை நவில, நாட்டுப்பண்ணுடன் கருத்தரங்கம் இனிதே நிறைவடைந்தது.

www.Padasalai.Net

எண்ணங்களை எழுத்தாக்குக:-



***வாகனப் புகையால் வந்தது புவிக்குப் பகை***
***புவி வெப்பமடைதலால் உறுகியது பனி***
***பனி உறுகியதால் உயரும் கடல் நீரே***
***கடல் நீர் உயர்ந்தால் நிலமெங்கே,***
***நிலத்தில் வாழும் உயிர்களெங்கே?***
***எரிபொருளை அதிகளவு எரித்ததால்***
***புவிப்பந்தும் எரிகிறது. எரிவதை அணைக்க***
***மரம் வளர்ப்போம். மரம் மண்ணுக்கு***
***இறைவன் தந்த வரம்.***
***நிலமகளின் காய்ச்சலுக்கு மரமே மருந்து.***
***அதை நீ அனைவருக்கும் உணர்த்து***



ஆங்கிலச் சொற்களை தமிழ்ப்படுத்துக:

1. Plotform - நடைமேடை
2. Ticket Inspector - பயணச்சீட்டு ஆய்வர்
3. Train Track - இருப்புப் பாதை

திரு, ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. Level Crossing - இருப்புப் பாதையைக் கடக்குமிடம்
5. Railway Signal - தொடர்வண்டி வழிக்குறி
6. Metro Train - மாநகரத் தொடர்வண்டி

**இலக்கணக் குறிப்பு**

1. **வளைஇ** - சொல்லிசை அளபெடை
2. **பொய்யா** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
3. **புதுப்பெயல், கொடுங்கோல்** - பண்புத் தொகைகள்

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. **கலங்கி** = கலங்கு + இ (மார்ச் 2024)
கலங்கு - பகுதி, இ - வினையெச்ச விகுதி.

**புணர்ச்சி விதி**

1. **இனநிரை** = இனம் + நிரை
விதி : மவ்வீறு ஒற்றழிந்து உயிரீரு ஒப்பவும் விதிப்படி ம் கெட்டு இனநிரை என ஆயிற்று.
2. **புதுப்பெயல்** = புதுமை + பெயல்
புது + பெயல் (ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டது).
புதுப்பெயல் (இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் விதிப்படி ப் தோன்றியது).

**மனப்பாடப் பாடல் :**

**நெடுநல்வாடை**

“வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணிநீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க”

- நக்கீரர்

பாவகை : நேரிசை ஆசிரியப்பா.

**கூடுதல் வினாக்கள் :**

1. **உலகப்புவி நாள் கொண்டாடப்படுவது எப்போது?**
ஏப்ரல் - 22

2. **மழை பற்றி நம் முன்னோர் மொழி (பழமொழி) யாது?**
மாரியல்லது காரியமில்லை.



திரு, ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***3. புவி வெப்பமயமாதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே என்று கூறியவர் யார்?***

*இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் கருத்தாளர் டேவிட் கிங்.*

***4. இந்திய வானிலை ஆய்வுத்துறையினர் 2009ஆம் ஆண்டைக் கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்தனர்.***

***5. நடுவண் அரசு எப்போது தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது?***

*2005 ஆம் ஆண்டு, டிசம்பர் 23 அன்று அமைத்தது.*

***6. புயலுக்குப் பெயரிடும் முறை யாது? புயல்களுக்கு எவ்வாறு பெயரிடப்படுகிறது?***

*சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைப்பதற்குக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது. அதன்படி வங்கக் கடலிலும், அரபிக் கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்க இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மர், ஓமன், தாய்லாந்து ஆகிய எட்டு நாடுகள் ஒவ்வொன்றிற்கும் எட்டுப் பெயர்களை பரிந்துரை செய்திருக்கின்றன. அந்தப்பட்டியலில் உள்ள 64 பெயர்களின் வரிசைப்படிதான் ஒவ்வொரு புயலுக்கும் பெயர் வைக்கப்படுகிறது.*

***7. அய்யப்ப மாதவன் பிறந்த ஊர் எது?***

*சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்தவர்.*

***8. இன்று எனும் கவிதைக் குறும்படத்தை வெளியிட்டவர் யார்?***

*அய்யப்ப மாதவன்.*

***9. அய்யப்ப மாதவன் வெளியிட்ட கவிதை நூல்கள் யாவை?***

*மழைக்குப் பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி.*

***10. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன் யார்?***

*பாண்டியன் நெடுஞ்செழியன்.*

***11. நெடுநல்வாடையை இயற்றியவர் யார்?***

*மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்.*

***12. நெடுநல்வாடை எத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?***

*பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.*

***13. நெடுநல்வாடை இருவகையில் பொருள் சிறந்து விளங்குவதை விளக்குக. / நெடுநல்வாடை பெயர்க்காரணம் தருக. (2024 மார்ச் வினா)***

- *தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பம் மிகுதியால் நெடுவாடையாக (நீண்ட வாடைக் காலமாக) இருந்தது.*
- *போர்ப் பாசறையில் இருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாகவும் (நன்மை தரும் வாடைக் காலமாக) இருந்தது.*



*திரு, ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

*14. உத்தம சோழனின் இயற்பெயர் - செல்வராஜ்*

*தஞ்சைச் சிறுகதைகள் எனும் தொகுப்பில் முதல்கல் இடம்பெற்றுள்ளது.*
*உத்தமசோழன் திருத்துறைப்பூண்டி அடுத்த தீவாம்மாள் புரத்தைச் சேர்ந்தவர்.*
*இவரின் சிறுகதைத் தொகுப்புகள் : மனிதத்தீவுகள், குருவி மறந்த வீடு.*
*இவரின் புதினங்கள் : தொலைதூர வெளிச்சம், கசக்கும் இனிமை, கனல்பூக்கள்.*
*இவர் கிழக்கு வாசல் எனும் திங்களிதழை 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.*

***

www.Padasalai.Net



*திரு, ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் 3

**உரைநடை : தமிழர் குடும்ப முறை ~ பக்தவச்சல பாரதி**
**செய்யுள் : விருந்தினர் இல்லம் ~ ஜலாலுத்தீன் ரூமி**
**கம்பராமாயணம் ~ கம்பர்**
**துணைப்பாடம் : உரிமைத் தாகம் ~ பூமணி**
**இலக்கணம் : பொருள் மயக்கம்**
**வாழ்வியல் : திருக்குறள்**



**பலவுள் தெரிக.**

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை
அ)அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
**விடை : ஆ) திருமணமும் குடும்பமும்**

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) உரிமைத்தாகம் - 1.பாரசீகக் கவிஞர்.
ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி
இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி
ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதெமி
அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1
விடை : **இ) 2, 4, 1, 3**

3. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது.
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை **ஈ) இவை அனைத்தும்**
**விடை: ஈ) இவை அனைத்தும்.**

4. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார்? யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன்
ஈ) இராமன் சவரி
விடை : இ) **இராமன், சுக்ரீவன்**

5. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது.
அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை
இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூக முறை
விடை : **ஈ) தந்தைவழிச் சமூக முறை.**

**குறுவினா :**

**1. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு வரைக. (2024 மார்ச்)**

- **புக்கில்** - கணவனும் மனைவியும் தற்காலிகத் தங்குமிடம் புக்கில் என அழைக்கப்படுகிறது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

www.Padasalai.Net
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- **தன்மனை** - திருமணத்திற்குப் பிறகு கணவனும், மனைவியும் பெற்றோரை விட்டுப் பிரிந்து, தனியாக வாழ்வது தன்மனை எனப்படுகிறது.

**2. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?**

- இராமனைக் கண்டதால், தன் பொய்யான உலகப்பற்று அழிந்தது என்றும்,
- மேலும், அளவற்ற காலம் தான் செய்த தவம் பலித்துப் பிறவி ஒழிந்தது என்றும், இராமனைப் பார்த்து சவரி உரைத்தாள்.

**3. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

நம் வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் ஆனந்தம், அவமானம், வக்கிரம், வஞ்சனை, அற்பத்தனம் போன்றன எதிர்பாராத நிகழ்வுகள். அவற்றை நம் வீட்டிற்கு வந்து செல்லும் விருந்தினர்களாக உருவகப்படுத்தியுள்ளார். அவை நம் வீட்டிற்கு வரும்போது வரவேற்க வேண்டும் என்கிறார் ஜலாலுத்தீன் ரூமி.

**4. "துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது" என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?**

**அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும். ஆ. சிறு துரும்பும் பல்குத்த உதவும்.**

விடை : அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

**5. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?**

- தாய்வழிக் குடும்பத்தில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்கள் ஆதலால் பெண் குழந்தைகளின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது.
- தாய்வழிச் சமூகமுறையில் குடும்பத்தின் சொத்தும், வளங்களும், செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.
- தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே அளிக்கப்பட்டன.

**சிறுவினா :**

**1. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் எழுதுக.**

**விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே கூட்டுக்குடும்பம்:**

- கணவன், மனைவி, மகன் ஆகிய மூவரும் வாழ்கின்ற தனிக்குடும்பம் வளர்ச்சி அடைந்தபோது, தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்பமே மேலும் வளர்ந்து கூட்டுக்குடும்பமாக ஆயிற்று.
- கணவனின் சகோதர சகோதரர்கள், தாய், தந்தையர் இணைந்த குடும்பம் வளர்ந்து, இன்றைய கூட்டுக்குடும்பமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வகையில் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பமாக விளங்குகிறது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.**

- **குகன்** - இராமன் கங்கைக்கரையைக் கடக்க உதவியும், அவருக்குப் பணிவிடைகள் செய்தும், தேனும் மீனும் உணவாக அளித்தும், காத்தும், அவர் மீது தீரா அன்புகாட்டியும் நெகிழ்ந்தவன் குகன். அவரின் அன்பைப் புரிந்து கொண்டு குகனைத் தன் உடன்பிறந்தவராக ஏற்றார். குகனோடு ஐவராயினர்.
- **சுக்ரீவன்** - சீதையை மீட்கக் காரணமானவன் சுக்ரீவன். "உன் கிளை எனது, என் காதல் சுற்றம் உன் சுற்றம், நீ என் இன்னுயிர்த் துணைவன்" எனக் கூறி, தன் உடன்பிறப்பாக ஏற்றார். சுக்ரீவனோடு அறுவராயினர்.
- **வீடணன்** - அரக்கர் குலத் தலைவன் இராவணனின் தம்பி. சீதையைக் கவர்ந்து வந்தது குற்றம் என்று இராவணனிடம் கூறினான். அதனை ஏற்காததால் இராமனிடம் அடைக்கலம் புகுந்தான். அவனது நல்லெண்ணம் கண்டு அவனை சகோதரனாக ஏற்றார். வீடணனோடு எழுவராயினர்.
- **என்**னை கானகத்திற்கு (காடு) அனுப்பியதால் என் தந்தை தயரதன் கூடுதலாகப் புதல்வரை அடைந்து பெருமை பெறுகிறான்.

**3. "வருபவர் எவராயினும்**
**நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

- **இடம்** : இப்பாடல் வரிகள், ஜலாலுத்தீன் ரூமி இயற்றிய "விருந்தினர் இல்லம்" என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
- **பொருள்** : மனித இருப்பு விருந்தினர் இல்லம். ஒவ்வொரு காலையிலும் நம் வாழ்வில் ஆனந்தம், அவமானம், வக்கிரம், வஞ்சனை, அற்பத்தனம் போன்றன எதிர்பாராத நிகழ்வுகளாக வருகின்றன. அவை நம் வீட்டிற்கு வந்து செல்லும் விருந்தினர். இத்தகு விருந்தினர் வருகையால் நம் மனம் எனும் வீடு தூய்மையடைகிறது. எனவே, அவற்றை நாம் வாசலுக்கே சென்று வரவேற்க வேண்டும் என்கிறார் ஜலாலுத்தீன் ரூமி.

**4. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?**

**நான் என் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் :**

- காலையில் எழுந்து, யாரையும் எதிர்பார்க்காமல், என்னுடைய வேலைகளை நானே செய்வேன்.
- அம்மாவிற்கு உதவியாக, என்னால் முடிந்தவற்றைச் செய்வேன்.
- வீட்டைப் பெருக்கி, தூய்மை செய்வேன்.
- தங்கைக்கு உணவு அளித்து, பத்திரமாக பள்ளிக்கு அழைத்துச் சென்று, திரும்ப அழைத்து வருவேன்.
- மாலை வீட்டிற்குத் திரும்பியதும் என் வீட்டுப்பாடங்களை முடிப்பேன். தங்கை வீட்டுப்பாடம் முடிக்க உதவுவேன்.
- நானும் படிப்பேன், தங்கைக்கும் சொல்லிக் கொடுப்பேன்.
- தாத்தா, பாட்டிக்கு உணவளித்து, உபசரித்து மாத்திரைகள் கொடுப்பேன்.
- அவர்களுடன் உரையாடி மகிழ்வேன்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ❖ துணிகளைத் துவைப்பேன்.
- ❖ என்னால் இயன்ற உதவிகளை தாய் தந்தையருக்குச் செய்வேன்.

( இது போன்றவற்றை நீங்களே சிந்தித்து எழுதலாம் )

***5. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக. (மார்ச் 2024)***

***கழுகு வேந்தன் சடாயு***

- ✓ இராவணன் சீதையை சிறையெடுத்தபோது, தடுத்துச் சண்டையிட்டதால் காயப்படுகிறான். பின் இறந்தும் விடுகிறான்.
- ✓ தன் தந்தையின் நண்பனான சடாயுவைத் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் இறுதிச் சடங்குகள் செய்கிறான் இராமன்.
- ✓ எப்படிப்பட்ட விறகுகள் இவை என்று பார்ப்பவர்கள் வியக்கும்வண்ணம் கரிய அகில் கட்டைகளையும், சந்தனக் கட்டைகளையும் அடுக்கினான்.
- ✓ தருப்பைப் புற்களையும் ஒழுங்குற அடுக்கி, பூக்களையும் தூவினான்.
- ✓ மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான்.
- ✓ நன்னீரையும் கொண்டு வந்தான்.
- ✓ இறுதிச் சடங்கு செய்யும் மேடைக்கு, தன் பெரிய கைகளாலேயே சடாயுவைக் கொண்டு வந்தான்.
- ✓ இவ்வாறு கழுகு வேந்தன் சடாயுவைத் தன் தந்தையாக ஏற்று, இராமன் கடமையாற்றினான்.

**நெடுவினா :**

***1. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.***

***தமிழர் குடும்ப முறை - பக்தவச்சல பாரதி***

***முன்னுரை***

தொன்மைக்காலத்திலிருந்தே நம் நாட்டில் பண்பாடு கலாச்சாரத்தோடு இணைந்தது, நம் குடும்ப அமைப்பு முறை. இன்றளவும் உலக நாடுகள் மத்தியில் நம் குடும்ப உறவு முறை ஈடு இணையற்றதாக போற்றப்படுகிறது. அக்குடும்ப அமைப்பு தோன்றிய விதம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

***குடும்பம் எனும் அமைப்பு :***

- ➢ குடும்பம் எனும் அமைப்பு குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என விரிவு பெறுகிறது. குடும்பமே சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது.
- ➢ குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே.
- ➢ குடும்பு எனும் சொல், அம் விகுதி பெற்றுக் குடும்பம் என ஆயிற்று.
- ➢ சங்க இலக்கியங்களில் இல், மனை, குரம்பை, முன்றில், குடில் போன்ற சொற்கள் குடும்பங்களின் வாழிடத்தையே குறிக்கின்றன.
- ➢ மனைவியின் இல்லம் தம்மனை என்றும், கணவனின் இல்லம் நும்மனை என்றும் அழைக்கப்பட்டது.

- கணவனும் மனைவியும் இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கமே மணந்தகம்.

**தாய், தந்தை வழிக் குடும்பம் :**

- சங்க காலத்தில் கண சமுதாயத்திற்கு தாயே தலைமை தாங்குகிறாள்.
- தாய் வழியாகவே குலத்தொடர்ச்சி வளர்கிறது.
- தாய்வழிச் சமூகமுறையில் குடும்பத்தின் சொத்தும், வளங்களும், செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.
- தந்தை வழிக் குடும்பத்தில் மணமான பின் தலைவி, தலைவனுடைய வீட்டிலேயே வாழ்ந்தாள்.
- மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே எனும் குறுந்தொகைப் பாடல் தந்தைவழிக் குடும்பத்தையே சிறப்பிக்கிறது.

**தனி, கூட்டுக் குடும்பங்கள் :**

- கணவன், மனைவி, மகன் ஆகிய மூவரும் வாழ்கின்ற தனிக்குடும்பம் வளர்ச்சி அடைந்தபோது, தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்பமே மேலும் வளர்ந்து கூட்டுக்குடும்பமாக ஆயிற்று.
- கணவனின் சகோதர சகோதரர்கள், தாய், தந்தையர் இணைந்த குடும்பம் வளர்ந்து, இன்றைய கூட்டுக்குடும்பமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வகையில் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பமாக விளங்குகிறது.
- இல்லற வாழ்வின் இறுதியில் பெருமைமிகு மக்களுடன் நிறைந்து, சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயனாகும் என்று கருதினர்.

**முடிவுரை**

தனிச்சிறப்பு வாய்ந்த நம் குடும்ப அமைப்பு, குடும்ப முறை எவ்வாறு உருவாகி, வளர்ந்து மாற்றம் பெற்றது என்பதை இக்கட்டுரை வழிக்கண்டோம். பெருமை மிகு நம் குடும்ப அமைப்பு, உறவு முறையைப் போற்றுவோம்.

**2. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. (மார்ச் 2024)**

**கம்பராமாயணம் - கம்பர்**

**முன்னுரை**

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது வள்ளுவரின் வாக்கு. பிற உயிர்களையும் தம் உயிர் போல் எண்ண வேண்டும். இராமபிரான் பிற உயிர்களை எங்ஙனம் போற்றினார் என்பது பற்றி இக்கட்டுரையில் காண்போம்.



- **இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலை :** கம்பன், தான் படைத்த காப்பியத்தில் இராமனை பண்பின் படிமமாகப் படைத்துள்ளார்.
- இவனுக்கு முன்போ, பின்போ இப்படி ஒருவர் இருந்தார் எனச் சுட்டிக்காட்ட இயலாத இயல்புகளைக் கொண்டவராக இராமனைப் படைத்துள்ளார்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

### வேடுவர் தலைவன் குகன்:

- தன் தந்தை தசரதனின் உத்தரவுப்படி காட்டிற்குச் செல்லும் இராமன், குகனைக் காண்கிறார். அமுது படைத்து, அன்புறுகி சேவைகள் செய்து மகிழ்கிறான் குகன்.
- இராமன் காட்டிற்குச் செல்வதை எண்ணி துன்புறுகிறான். அதைக் கண்டு நம் மீது தீராத அன்புடையவன் என்று சீதையிடம் கூறுகிறார் இராமன்.
- கங்கைக் கரையைக் கடக்க உதவினார் குகன்.
- குகனின் எல்லையற்ற அன்பின் காரணமாகத் தன் சகோதரனாக ஏற்றார்.



### கழுகு வேந்தன் சடாயு :

- ✓ இராவணன் சீதையை சிறையெடுத்தபோது, தடுத்துச் சண்டையிட்டதால் காயப்படுகிறான் சடாயு. பின் இறந்தும் விடுகிறான்.
- ✓ தன் தந்தையின் நண்பனான சடாயுவைத் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் அகில் மற்றும் சந்தனக் கட்டைகளை அடுக்கி, தருப்பைப் புல் பரப்பி, பூக்கள் தூவி, மணலை நிறுவி, நன்னீராட்டி இறுதிச் சடங்குகள் செய்கிறான் இராமன்.



### தாயினும் அன்பு காட்டிய சவரி :

- சீதையைக் கண்டுபிடிக்க சுக்ரீவனுடன் நட்புகொள்ளுமாறு அறிவுறுத்தியவள் சவரி.
- இராமன் சீதையை தேடிச் சென்றபோது, சவரியைக் கண்டார்.
- சவரி செய்த விருந்து உபசரிப்பால் இராமன் நெகிழ்ந்தார். அவள் தன்னைக் காண தவமிருந்தாள் என்பதை அறிந்து, "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாயல்லவா" என்று வினவினார்.



### வானரத் தலைவன் சுக்ரீவன் :

சீதையை மீட்கக் காரணமானவன் சுக்ரீவன்.

- ➢ "உன் கிளை (உறவினர்) எனது (என் உறவினர் போன்றவர்) , என் காதல் சுற்றம் உன் சுற்றம், நீ என் இன்னுயிர்த் துணைவன்" எனக் கூறி, சுக்ரீவனைத் தன் உடன்பிறப்பாக ஏற்றார்.
- ➢ சுக்ரீவனின் படைத்தலைவனாகிய அனுமனே, சீதை இருக்கும் இலங்கைக்குச் சென்று, அவளை மீட்பதற்கு முக்கியப் பங்காற்றினான்.



### நல்லுரை தந்த வீடணன் :

அரக்கர் குலத் தலைவன் இராவணனின் தம்பி.

- ➢ சீதையைக் கவர்ந்து வந்தது குற்றம் என்று அண்ணன் இராவணனிடம் கூறினான். அதனை அவன் ஏற்காததால் இராமனிடம் அடைக்கலம் புகுந்தான். அவனது நல்லெண்ணம் கண்டு அவனை சகோதரனாக ஏற்றார்.

**முடிவுரை :**

மேற்கண்ட செய்திகளிலிருந்து அன்பிற்கு எல்லையே இல்லை என்பதையும். இராமன் அனைத்து உயிர்களிடமும் கொண்டிருந்த உறவுநிலையை அறியலாம்.

**3. "உரிமைத்தாகம்" கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்'.. கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.**

**உரிமைத்தாகம் - பூமணி**

**முன்னுரை**

ஒற்றுமையே பலம், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழிகள் மூலம் ஒற்றுமையின் தனிப்பெருஞ் சிறப்புகளை அறிந்து கொள்ளலாம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே என்ற வாக்கிற்கிணங்க ஒற்றுமையின்மையால் தம்பி பட்ட துயரங்களை இங்கு காண்போம்.

**கதாபாத்திரங்கள் :**
அண்ணன் - முத்தையன்
அண்ணி - மூக்கம்மா
தம்பி - வெள்ளைச்சாமி
வெள்ளைச்சாமி கடன் வாங்கியது ரூ200. மேலத்தெரு பங்காருசாமியிடம் நிலத்தை மேலக்காட்டை கிரையமாக எழுதி அந்தத் தொகையை வாங்கினான் வெள்ளைச்சாமி.

- ✧ மேலூர் பங்காருசாமியிடம் தன் நில பத்திரத்தைக் கொடுத்து இருநூறு ரூபாயை கடனாகப் பெற்றான் வெள்ளைச்சாமி.
- ✧ அவனால், பணத்தைத் திரும்பக் கொடுத்து பத்திரத்தை மீட்க முடியவில்லை.
- ✧ வட்டியும் அதிகமாகிக்கொண்டே போனது.
- ✧ இதை தெரிந்துகொண்ட வெள்ளைச்சாமியின் அண்ணன் முத்தையா, பங்காருசாமியிடம் சென்று பத்திரத்தை மீட்பது பற்றிப் பேசினான்.
- ✧ ஆனால் வெள்ளைச்சாமியும் அவனது மனைவியும், தன் சொந்த பிரச்சனைகளில் தலையிட வேண்டாம் என்று சொல்லி திட்டியும் அனுப்பிவிட்டனர்.
- ✧ காலம் கடந்தது. வெள்ளைச்சாமியால் வாங்கிய பணத்தையும் கொடுக்க முடியவில்லை, வட்டியையும் கொடுக்க முடியவில்லை.
- ✧ இறுதியாக வெள்ளைச்சாமியின் நிலத்தை பங்காருசாமி தனதாக்கிக் கொண்டான்.
- ✧ தன் நிலத்தையும், தன் அண்ணனின் அன்பையும் ஒருங்கே பறிகொடுத்தது நினைத்து மனநிம்மதியின்றித் தவித்தான்.
- ✧ தன்னுடைய நிலத்தைப் பார்க்கும்போதெல்லாம் மனவேதனையில் தவித்தான்.
- ✧ நாட்கள் கடந்தன. பருவகாலத்தில் பயிரிட நிலத்தை உழுதுகொண்டிருந்தான் பங்காருசாமி. அதனைக் கண்ட வெள்ளைச்சாமி மனம் வெதும்பினான்.
- ✧ தனது தவற்றினை முழுமையாக உணர்ந்தான்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- ✧ மனைவியின் பேச்சைக் கேட்டு நடந்ததால்தான் அண்ணனுடன் பிரச்சனை ஏற்பட்டது.
- ✧ அண்ணன் உதவ முன்வந்தபோதும் மறுத்ததால்தான் இந்நிலை ஏற்பட்டது என்பதை உணர்ந்து, நிலத்தில் புரண்டு அழுதான்.
- ✧ வெள்ளைச்சாமி அதன் பிறகு எவரிடமும் பேசாமல் பித்துப்பிடித்தவன் போல இருந்தான்.
- ✧ தம்பியின் நிலைகண்டு முத்தையா மனம் வெதும்பினான்.

**முடிவுரை**

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது இங்கு உணர்த்தப்பட்டது. உதவ முன் வந்த அண்ணனின் பேச்சைக் கேட்காததால் வெள்ளைச்சாமியின் குடும்பம் நடுத்தெருவிற்கு வந்தது. எனவே ஒற்றுமையாக இருப்போம், பெரியோரின் சொல் கேட்டு நடப்போம்.

## இலக்கணம் - பொருள் மயக்கம்

**1. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.**

நிறுத்தற்குறிகளை உரிய இடத்தில் இட்டு எழுதுதல்.

**2. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.**

*அ) பாலை பாடினான் - 4) பாலைத்திணை பாடினான்.*
*ஆ) பாலைப் பாடினான் - 3) பாலினைப் பாடினான்.*
*இ) தேரை பார்த்தான் - 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்.*
*ஆ) தேரைப் பார்த்தான் - 2) தேரினைப் பார்த்தான்.*

*விடை : இ) 4, 3, 1, 2*

**3. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.**

**மாணவர்கள், வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.**

*மாணவர்கள் வரிசையில் நின்று, அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.*

***4. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.***

முன்
- *அவன் முன்வந்து கூறினான்.*
- *அவன்முன் வந்து கூறினான்.*

தானே
- *அவர் தானே கேட்டார்.*
- *அவர்தானே கேட்டார்.*

கொண்டு
- *அவன் ஈட்டிக் கொண்டு வந்தான்.*
- *அவன் ஈட்டிக்கொண்டு வந்தான்.*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

*மீன்களைப் பிடித்துவிட்டான்.*

விட்டான்

*மீன்களைப் பிடித்து விட்டான்.*

**5. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.**

*அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.*

*அவள் அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.*

**6. சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி இவற்றில் இரட்டைக்கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.**

இரட்டைக்கிளவி பிரித்தால் பொருள் தராது.

இரட்டைக் கிளவியை சேர்த்தே எழுதவேண்டும்.

*அ) சலசலவெனச் சாரல் அடித்தது.*

*ஆ) கலகலவென கலா சிரித்தாள்.*

*இ) குழந்தை விம்மி விம்மி அழுதது.*

**7. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?**

திருவளர்செல்வன் என்பதே சரியான தொடர்.

திருவளர்செல்வன் என்பது வினைத்தொகை ஆகும். வினைத்தொகையில் வல்லினம் மிகாது என்ற விதிப்படி திருவளர்செல்வன் என்று வருவதே சரியானதாகும்.

**தமிழாக்கம் தருக:**

In Terms of human objectives, education is an end in itself, not just a means to an end (*மனித வளர்ச்சியின் அடிப்படையில் கல்வி என்பது ஒரு முக்கிய வழியாகும், அது அத்துடன் நின்றுவிடுவதில்லை*). Education is a basic human right (*கல்வி மனிதனின் அடிப்படை உரிமை*). It is also the key which opens many economic, social and political doors for people (*அது பொருளாதாரம், சமுதாயம் மற்றும் அரசியல் இலக்கை அடைவதற்கான திறவுகோலாகும்*). It increses access to income and employment opportunities (*அது ஊதிய உயர்வு மற்றும் வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்தும்*). While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life (*பொருளாதார நிபுணர்கள், கல்வி வாழ்வில் உயர்ந்த பதவிகளை அடைய வழி வகுக்கக்கூடியது என்று கணித்திருக்கிறார்கள்*). Educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return (*கல்வியைக் கற்பிப்பதே அதன் முக்கிய நோக்கமேயன்றி, அது ஏற்படுத்தப்போகும் பொருளாதாரத்தை எதிர்நோக்கியது அல்ல*).



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

### இலக்கிய நயம் பாராட்டல்



பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

- நாமக்கல் கவிஞர்.

**திரண்ட கருத்து :**

தமிழ் மொழியைப் புறக்கணித்து, வேற்றுமொழிக்கு முன்னுரிமை தந்தனர். இந்த நிலைமாற தன் இனிய உரையால், தமிழுக்கு இணையான மொழி உலகில் இல்லை என்று உரைத்தவர் பாரதியார். மேலும் கம்பரையும், வள்ளுவரையும் சுட்டிக்காட்டி நம் அகக்கண்களைத் திறந்த பாரதியார் ஓர் தெய்வக்கவி என்பது உறுதி.

**மையக் கருத்து:**

தமிழே உலகில் தலைசிறந்த மொழி என்பதை உலகிற்கு எடுத்துக்கூறியவர் பாரதியார்.

**எதுகை :**

அடி அல்லது சீர் தோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை ஆகும்.

**பாடலிலுள்ள எதுகைச் சொற்கள்:**

பெ**ற்**றெடுத்த - ஊ**ற்**றெடுத்த - க**ற்**றுணர்ந்தே - தெ**ற்**றென

**மோனை :**

அடி அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.

**பாடலிலுள்ள மோனைச் சொற்கள்:**

**பெ**ற்றெடுத்த - **பி**றமொழி, **ஊ**ற்றெடுத்த - **உ**லகில், **க**ற்றுணர்ந்தே - **க**ம்பனொடு, **தெ**ற்றென - **தெ**ய்வக்கவி.

**அணி :**

தமிழ்மொழியை மிக உயர்த்திக் கூறியிருப்பதால் இது **உயர்வு நவிற்சி அணி** ஆகும்.

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

***1. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்: அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தைப்போல எதிர்க்கொண்டுத் தீர்ப்பார்கள்.***



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீதுதான்: அவர்கள் எல்லாப் பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தைப்போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.

**2. எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.**

எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறிச் செல்வதனைக் கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றித் துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

**3. நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெருவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.**

நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்த கவனம் அறிவைப் பெருவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும்.

**4. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும். (மார்ச் 2024)**

மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.**

ஆசிரியருக்குக் கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்றுக் கொடுக்கும்.

**கீழ்க்காணும் பகுதியைப் படித்து அறிவிப்புப் பலகைக்கான செய்தியை உருவாக்குக.**

வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா, மே - 5, 2019
திருச்சிராப்பள்ளி

வேலை காரணமாக வெளிநாடுகளில் பிரிந்து வாழும் உறவினர்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் நிகழ்வு நடைபெற உள்ளது.

திருச்சி உறையூர் அன்பு நகரில் வசிக்கும் தங்கவேல் - பொன்னம்மாள் இணையரின் மூன்று தலைமுறை வழித்தோன்றல்கள் சந்திக்கும் நிகழ்வு மே-5 ஆம் தேதி இனிதே நடைபெற உள்ளது.

உறவினர் கூட்டத்தில் தங்கவேல் - பொன்னம்மாள் அவர்களின் மகன்கள், மகள்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள்சந்தித்துப் பெரியோர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார்கள். இந்நிகழ்ச்சியைத் தங்கவேல் அவர்களின் கொள்ளுப் பேத்தி செல்வி கண்மணி அவர்கள் ஒருங்கிணைக்கிறார்.




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**அறிவிப்புப் பலகை :**

**வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா**
நாள் : 5.5.2019
இடம் : அன்புநகர், உறையூர், திருச்சிராப்பள்ளி.
நிகழ்வு : தங்கவேல் - பொன்னம்மாள் இணையரின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள் என மூன்று தலைமுறை வழித்தோன்றல்கள் சந்தித்து பெரியோர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார்கள்.
ஒருங்கிணைப்பு : தங்கவேல் அவர்களின் கொள்ளுப் பேத்தி செல்வி. கண்மணி

எண்ணங்களை எழுத்தாக்குக



கதை சொல்லும் பாட்டி,
அறிவுரைகள் சொல்லும் தாத்தா.
எல்லாம் தற்போது
கற்பனையில் மட்டுமே.
தொலைக்காட்சியில் மூழ்கிய அப்பா,
கதைப்புத்தகத்தில் அம்மா,
கணினியில் கருத்தாய் அண்ணன்.
நானோ எல்லாம் இருந்தும்
ஏதுமற்ற அனாதையாய்.
உறவுகளால்
உள்ளங்களை ஒன்றிணைத்தது
அந்தக்காலம்.
அறிவியலால் குடும்ப உறவுகள்
சிதைந்தது இந்தக்காலம்.

**பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**
**(வேற்றுமை உருபுகள் : ஐ, ஆல், ஆன், கு, இன், அது, கண்)**

**எ.கா குமரன் வீடு பார்த்தேன்** - குமர**னை** வீட்டில் பார்த்தேன்.

**1. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்**
மாற**னின்** பேச்சுத்திற**னை** யார**ால்** வெல்ல முடியும்.

**2. போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.**
போட்டி**யில்** வெற்றி பெற்ற**தால்** கலைச்செல்வி**க்கு** பாராட்டுகள் குவிந்தன.

**3. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.**
காலை**யில்** எழுந்து படித்**தால்** நமக்கு நன்மை ஏற்படும்.

**4. அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.**
அனைவ**ரையும்** அன்**பால்** அழைத்தவ**னுக்கு** துன்பத்**தைத்** தர யா**ருக்கு** மனம் வரும்.

**5. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.**
சான்றோ**ருக்கு** மதிப்புக் கொடுத்**தால்** வாழ்**வில்** உயரலாம்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**படிப்போம் பயன்படுத்துவோம்**

1. Lobby - ஓய்வறை
2. Tips - சிற்றீகை
3. Checkout - வெளியேறுதல்
4. Mini meals - சிற்றுணவு

**இலக்கணக் குறிப்பு**

1. உளது - இடைக்குறை
2. மாதவம் - உரிச்சொற்றொடர்
3. தாழ்கடல் - வினைத்தொகை
4. செற்றவர் - வினையாலணையும் பெயர்
5. நுந்தை - நும் தந்தை என்பதன் மரூஉ

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. **தந்தனன்** - தா(த) + த்(ந்) + த் + அன் + அன்.
   தா - பகுதி (த எனக் குறுகியது விகாரம்), த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அன் - சாரியை, அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி
2. **பொலிந்தான்** - பொலி + த்(ந்) + த் + ஆன்.
   பொலி - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

**புணர்ச்சி விதி**

**அருங்கானம்** = அருமை + கானம்

அரு + கானம் ( ஈறுபோதல் விதிப்படி மை கெட்டது).

அருங்கானம் ( இனமிகல் விதிப்படி க் ற்கு இனமான ங் மிகுந்தது)

**மனப்பாடப் பாடல்கள்**

**1. கம்பராமாயணம்**

துன்பு உளதுஎனின் அன்றோ
　　சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது: இடை மன்னும்
　　பிரிவு உளது என உன்னேல்:
முன்பு உளெம் ஒரு நால்வேம்
　　முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
　　ஐவர்கள் உளர் ஆனோம்

- கம்பர் பாவகை : கலி விருத்தம்



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு: பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்:
எம்முறை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய
நின்னொடும் எழுவர் ஆனேம்:
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை
- கம்பர்

பாவகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

**கூடுதல் வினாக்கள் :**

1. இளந்தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி : செவிலிக்குரியது.
2. மணம்புரிந்த கணவனும், மனைவியும் சேர்ந்த இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டம் : மணந்தகம்.
3. மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே எனும் வரிகள் இடம்பெற்ற நூல் குறுந்தொகை.
4. ஜலாலுத்தீன் ரூமி எம்மொழிக் கவிஞர் : பாரசீகம்.
5. ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் : கோல்மன் பார்க்ஸ்.
6. ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளை தமிழில் மொழிபெயர்த்தவர் : என். சத்தியமூர்த்தி. கவிதைத் தொகுப்பின் பெயர் : தாகங்கொண்ட மீனொன்று.
7. ஜலாலுத்தீன் ரூமியின் எப்போது எங்கு பிறந்தார்?
   பொ.ஆ. 1207 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் பிறந்தார்.
8. கம்பர் தம் காவியத்திற்கு இட்ட பெயர் இராமாவதாரம்.
9. கம்பரின் காலம் 12ஆம் நூற்றாண்டு.
10. கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப்படுபவர் கம்பர்.
11. கரிசல் எழுத்தாளர்களுள் ஒருவர் பூ. மாணிக்கவாசகர் (பூமணி).
12. பூமணி அஞ்ஞாடி எனும் புதினத்திற்காக 2014 இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.
13. பூமணி இயக்கிய திரைப்படம் கருவேலம்பூக்கள்.
14. பூமணி இயற்றிய சிறுகதைத் தொகுப்புகள் அறுப்பு, வயிறுகள், ரீதி, நொறுங்கல்கள்.
15. பூமணி இயற்றிய புதினங்கள் வெக்கை, பிறகு, அஞ்ஞாடி, கொம்மை.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## திருக்குறள்



1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது.
2. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
   தெய்வத்துள் வைக்கப் படும்.
3. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
   வானகமும் ஆற்ற லரிது.
4. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
   அன்றே மறப்பது நன்று.
5. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்: உய்வில்லை
   செய்ந்நன்றி கொன்ற மகற்கு.
6. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
   வேண்டும் பிறன்கைப் பொருள்.
7. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்: தீய
   பிறத்தல் அதனான் வரும்.
8. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க: காவாக்கால்
   தன்னையே கொல்லும் சினம்.
9. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
   ஏமப் புணையைச் சுடும்.
10. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
    உண்மை அறிவே மிகும்.

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
   தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
   ஏமப் புணையைச் சுடும்.

***இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.***

2. கடலின் பெரிது **ஆ) பயன் ஆராயாமல் செய்த உதவி.**

3. பின்வரும் நாலடியார் பாடலுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்.

விடை : அ) இருவேறு உலகத்து இயற்கை: திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

**4. புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளை எழுதுக**

*உயர் அலுவலரின் வருகை*
*அலுவலகமே அல்லாடும்*
*அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே*
*கோப்புகளை விரைந்து முடிக்க*
*ஒழுங்கு செய்ய*
*நேரத்தில் இருக்க வேண்டும்*
*விரைகிறது மனம்*
*பரபரப்பும் மனவழுத்தமுமாய்*
*வண்டியை எடுக்கிறேன்*
*காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை*
*'போ அந்தப் பக்கம்'*
*உதறிச் செல்கிறேன் குழந்தையை.*

விடை : செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்
காக்கில்என் காவாக்கால் என்.

**5. இலக்கணக்குறிப்பு தருக.**

1. அன்பும் அறமும் - எண்ணும்மை
2. நன்கலம் - பண்புத்தொகை
3. மறத்தல் - தொழிற்பெயர்
4. உலகு - இடவாகுபெயர்.

**6. பொருள் கூறுக.**

1. வெகுளி - கோபம்
2. புணை - தெப்பம்
3. ஏமம் - பாதுகாப்பு
4. திரு - செல்வம்

**7. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?**

அ) செய்யாமல் செய்த உதவி.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**8. பகையும் உளவோ பிற - பொருள் கூறுக.**

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட நமக்கு வேறு பகை இல்லை.

**9. செல்லிடத்து - புணர்ச்சி விதி தருக.**

செல்லிடத்து = செல் + இடத்து

(i) செல்ல் + இடத்து (தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் விதிப்படி ல் தோன்றியது)

(ii) செல்லிடத்து (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி ல் + இ = லி ஆயிற்று).

**10. பொருத்துக:**

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1) சேர்ந்தாரைக் கொல்லி

ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - 2) ஞாலத்தின் மாணப் பெரிது

இ) சினம் - 3) தெய்வத்துள் வைக்கப்படும்

ஈ) காலத்தினாற் செய்த உதவி - 4) நன்மை கடலின் பெரிது

**ஆ) 3 4 1 2**

**குறுவினா :**

**1. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?**

அறத்தின் வழியே இல்வாழ்க்கை நடத்துபவன், முயற்சியுடையோரை விடச் சிறந்தவர்.

**2. ஞாலத்தின் பெரிது எது?**

உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவியானது உலகை விடப் பெரியது ஆகும்.

**3. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?**

மறக்கக் கூடாதது - பிறர் செய்த நன்மையை

மறக்கக் கூடியது - பிறர் செய்த தீமையை.

**4. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?**

பிறருடைய பொருளை விரும்பாமல் இருந்தால் நம்மிடம் செல்வம் குறையாமல் இருக்கும்.

**5. சினத்தை ஏன் காக்க வேண்டும்?**

தன்னைக் காத்துக் கொள்ள விரும்பினால் சினத்தைக் காக்க வேண்டும். இல்லையெனில் சினம் தன்னையே கொன்றுவிடும்.

**சிறுவினா :**



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**அணி :**

குறட்பாவில் பயின்று வரும் அணி நிரல் நிறை அணியாகும்.

**அணி விளக்கம் :**

செய்யுளில் சொற்களையும் அவற்றின் பொருளையும் வரிசைப்பட அமைப்பது நிரல் நிரை அணியாகும்.

**குறள் விளக்கம் :**

இல்வாழ்க்கையில் அன்பு என்பது நற்பண்பு ஆகும். அறத்தோடு செயல்படும்போது அதன் பயன் கிடைக்கும்.

**பொருத்தம் :**

அன்பு என்பது இல்வாழ்க்கைக்குரிய பண்பு, அறத்தினால் அதன் பயன் விளையும் என்று சொல்லையும் பொருளையும் வரிசைப்படி அமைத்திருப்பதால் நிரல் நிரை அணியாகும்.

**2. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழிநின்று விளக்குக.**

- இல்வாழ்க்கையில் அன்பு என்பது நற்பண்பு ஆகும். அறத்தோடு செயல்படும்போது அதன் பயன் கிடைக்கும்.
- அறத்தின் வழியே இல்வாழ்க்கை நடத்துபவன், முயற்சியுடையோரை விடச் சிறந்தவர்.
- இவ்வுலகத்தில் அறநெறியோடு வாழ்பவன், வானுலகத்தில் உள்ள தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவர்.

**3. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள்வழி விளக்குக.**

- உரிய நேரத்தில் ஒருவர் செய்த உதவியானது அளவில் சிறிதாக இருப்பினும் அது உலகைவிடப் பெரியது ஆகும்.
- பதிலுதவியை எதிர்பார்க்காமல் ஒருவர் செய்த உதவியின் நன்மை கடலைவிடப் பெரியது ஆகும்.
- பிறர் உதவி செய்யாதபோதும் தான் செய்யும் உதவிக்கு மண்ணுலகும், விண்ணுலகும் கூட ஈடாகாது.

**4. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.**

- தன்னைக் காத்துக் கொள்ள விரும்பினால் சினத்தைக் காக்க வேண்டும். இல்லையெனில் சினம் தன்னையே கொன்றுவிடும்.
- முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட நமக்கு வேறு பகை இல்லை.
- சினம் எனும் கொள்ளியானது தனக்குப் பாதுகாப்பு தரும் தெப்பம் போன்ற சுற்றத்தை அழித்துவிடும்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***5. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக. (மார்ச் 2024)***

***சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்***
***ஏமப் புணையைச் சுடும்.***

***அணி விளக்கம் :***

ஒப்புமை உடைய இரு பொருள்களைக் கூறி ஒன்றை உருவகப்படுத்திவிட்டு, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

***குறள் விளக்கம் :***

சினம், தன்னைச் சேர்ந்தவர்களை அழிக்கும் நெருப்பு. அது ஒருவருடைய சுற்றம் என்னும் பாதுகாப்பான தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

***பொருத்தம் :***

குறட்பாவில் சினத்தை நெருப்பாகவும், சுற்றத்தை தெப்பமாகவும் வருணித்த வள்ளுவர், வாழ்க்கையைப் பெருங்கடலாக உவமிக்கவில்லை. இங்கு ஒன்றை உருவகித்து, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விட்டதால் இப்பாடல் ஏகதேச உருவக அணிக்கு சான்றாயிற்று.

***நெடுவினா :***

***1. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைக்கொண்டு நிறுவுக.***

***முன்னுரை***

உலகம் போற்றும் பொதுமறையாம் திருக்குறளில் பல்வேறு நல்லறங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் செய்ந்நன்றியறிதல் ஒரு சிறந்த அறம் என்பதைப் பற்றிக் காண்போம்.

***செய்யாமல் செய்த உதவி :***

நாம் ஒரு உதவியும் செய்யாமல் இருக்க, தனக்கு உதவி செய்த ஒருவருக்கு இம் மண்ணுலகையும், விண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது.

***உலகை விடப் பெரியது :***

உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறிதாக இருப்பினும், அது இவ்வுலகத்தை விடப் பெரியது ஆகும்.

***கடலை விடப் பெரியது :***

இந்த உதவியை பிறருக்குச் செய்வதால் இன்ன பயன் விளையும் என்று ஆராயாமல் ஒருவர் செய்த உதவியானது கடலை விடப் பெரியது ஆகும்.

***அளவு :***

ஒருவர் தினையளவே உதவியிருந்தாலும், அதன் பயன் தெரிந்தவர் பனையளவு உதவியாகவே கருதிப் போற்றுவர்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**நன்று : நன்றல்லது :**

பிறர் செய்த நன்மையை மறக்கக் கூடாது. பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிட வேண்டும்.

**நன்றி மறவாமை :**

எந்த அறத்தை மறந்தவருக்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பு உண்டு. ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்கு தப்ப வாய்ப்பே இல்லை.

**முடிவுரை :**

பிறர் செய்த உதவியை என்றும் மறக்கக்கூடாது. நாமும் வள்ளுவரின் வழிநின்று நம்மால் இயன்ற உதவியை பிறருக்குச் செய்து இவ்வுலகத்தில் வாழ்வாங்கு வாழ்வோம்.

**2. சினத்தைக் காத்தால் வாழ்வை மேன்மைப்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.**

**முன்னுரை :**

நாம் செய்ய வேண்டியவற்றைப் பட்டியலிட்டுள்ள திருவள்ளுவர், நாம் செய்யக்கூடாதவற்றையும் பட்டியலிட்டுள்ளார். சினம் நம்மை அழிக்கும் நஞ்சு போன்றது. வெகுளாமை அதிகாரத்தில் சினத்தினால் உண்டாகும் பயன்கள் குறித்து விளக்கியுள்ளார். அவற்றை இனிக் காண்போம்.

**வலியார் மெலியார் மீது சினம் :**

தன் சினம் செல்லுபடியாகக் கூடிய மெலியவரிடத்தில் கோபப்படாமல் இருத்தலே சிறந்தது. செல்லுபடியாகாத வலியவரிடத்தில் சினத்தை வெளிப்படுத்தினால் என்ன? வெளிப்படுத்தாமல் இருந்தால் என்ன?

**சினத்தை மறத்தல் :**

சினத்தால் தீய விளைவுகளே உண்டாகின்றன. எனவே எவரிடத்திலும் சினத்தை வெளிக்காட்டாமல் அதனை மறந்துவிட வேண்டும்.

**சினத்தால் பகை :**

நம் முகமலர்ச்சியும், மகிழ்ச்சியும் கொல்லும் சினத்தை விட நமக்கு வேறு பகை இல்லை.

**தன்னைக் காக்க வேண்டுமானால் :**

தன்னைக் காத்துக் கொள்ள விரும்பினால் சினத்தைக் காக்க வேண்டும். இல்லையெனில் சினம் தன்னையே கொன்றுவிடும்.

**சினம் ஒரு கொள்ளி :**

சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் கொள்ளி போன்றது. அது தன்னைக் காக்கும் சுற்றம் எனும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**முடிவுரை :**

சினத்தினால் ஏற்படும் தீய விளைவுகளைக் கூறி, திருவள்ளுவர் எச்சரிக்கிறார். அவரின் கருத்துக்களை ஏற்றுச் செயல்படுத்த முற்படுவோமாக.

**கூடுதல் வினாக்கள் :**

1. திருக்குறளில் உள்ள மொத்த அதிகாரங்கள் : **133**
2. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் : **38, இயல்கள்**
3. பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் : **70, இயல்கள்**
4. இன்பத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் : **25, இயல்கள்**
5. அறத்துப்பாலில் உள்ள இயல்கள் **(4): பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்.**
6. பொருட்பாலில் உள்ள இயல்கள் **(3) : அரசியல், அமைச்சியல், ஒழிபியல்.**
7. இன்பத்துப்பாலில் உள்ள இயல்கள் **(2) : களவியல், கற்பியல்.**
8. திருக்குறளில் உள்ள மொத்த இயல்கள் : **9**
9. கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு எத்தனை அடியில் சிலை அமைக்கப்பட்டுள்ளது? **: 133 அடி**

**10. திருக்குறள் பெயர்க்காரணம் தருக.**

இரண்டடி வெண்பாவிற்கு குறள் வெண்பா என்று பெயர். எனவே குறள் என்பது குறள் வெண்பாவிற்கு ஆகி வந்தது. அது திரு எனும் சிறப்புப் பெயர் பெற்று திருக்குறள் என்று பெயர் பெற்றது.

**11. திருக்குறள் இலக்கணக் குறிப்பு தருக:**

அடையடுத்த கருவி ஆகுபெயர்.

12. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாடியவர் : **பாரதியார்.**
13. வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் இவ்வையகமே என்று திருவள்ளுவரைப் புகழ்ந்தவர் **: பாரதிதாசன்.**
14. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு **: 1812.**
15. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்பதில் இரண்டு என்பது **: திருக்குறளைக் குறிக்கும்.**
16. கிரேக்கம், இலத்தீன் முதலிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் : **திருக்குறள்.**
17. வாழ்வின் மேன்மைகளையும், வாழ்வியல் நெறிகளையும் வகுத்துக் காட்டிய நூல் : **திருக்குறள்.**
18. திருக்குறளுக்குரிய வேறுபெயர்கள் **: குறள், உலகப் பொதுமறை, அறவிலக்கியம், தமிழர் திருமறை.**

***

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இயல் 4

உரைநடை : பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் - உ.வே.சாமிநாதர்
செய்யுள் : இதில் வெற்றி பெற - சுரதா
இடைமீடு - சி. மணி
புறநானூறு - ஔவையார்
துணைப்பாடம் : பாதுகாப்பாய் ஒரு பயணம்
இலக்கணம் : பா இயற்றப் பழகலாம்



**பலவுள் தெரிக.**

1. "காவினெம் கலனே: சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் "கலன்" உணர்த்தும் பொருள்.
   அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி
   ஈ) வேளாண்கருவி
   விடை : **இ) இசைக்கருவி.**
2. சுரதா நடத்திய கவிதை இதழ்
   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
   விடை : **ஆ) காவியம்.**
3. "விண்வேறு: விண்வெளியில் இயங்கு கின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" - இத்தொடர் தரும் முழுமையான பொருள்
   அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
   ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
   இ) வெண்மதியும், முகிலும் வேறு வேறு
   ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு.
   **விடை : ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு.**
4. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
   அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய்
   ஈ) மாவிலைக்கரி
   விடை : **இ) கடுக்காய்.**

5. "குழிமாற்று" எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்.
   அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
   **விடை : ஆ) கணிதம்**

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**குறுவினா :**

**1. இடையீடு எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?**

கவிஞனின் கவிதை சார்ந்த எண்ணம், அதனை வெளிப்படுத்தும் வண்ணம், எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் வாசகனின் மனநிலை போன்றவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது.

**2. வசனம், கவிதை வேறுபாடு தருக.**

- எதுகை மோனை சேர்க்காமல், அடியளவு ஏதுமின்றி எழுதும் வடிவமே வசனம். இலக்கண முறை இன்றி எழுதப்படுவது வசனம்.
- யாப்பு (இலக்கண) முறைப்படி இயற்றப்படுவது கவிதை.

**3. "எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்" - யாருக்கு?**

கலைத்தொழிலில் வல்லவர்களுக்கு இவ்வுலகில் எங்கு சென்றாலும் உணவு தவறாமல் கிடைக்கும்.

**4. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?**

- தமிழில் : நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்களான ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்றன.
- கணிதத்தில் : கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள் மனனப் பயிற்சிக்கு உதவின.

**சிறுவினா :**

**1. "மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.**

எண்ணம், வெளியீடு, கேட்டல் என்னும் மூன்றும், மூன்றான காலம் போல் ஒன்றாகும். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களும் வெவ்வாறாக இருப்பினும் காலம் என்று அழைக்கும்போது ஒன்றாகவே தோன்றும். அதைப்போல எண்ணம், வெளியீடு, கேட்டல் ஆகிய மூன்றும் ஒன்றல்ல ஆனால் செயல் என்று பார்க்கும்போது அது ஒன்றேயாகும். நாம் ஒன்றைச் செய்ய நினைக்கிறோம் ஆனால் வேறு ஒன்றைச் செய்து முடிக்கிறோம். இவையே மூன்றான காலம் போல் ஒன்று ஆகும்.

**2. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?**

- வகுப்பறைக்குள் நுழையும்போதே புன்னகையுடன் நுழைவேன்.
- மாணவர்களிடம் அன்புடனும் கருணையுடனும் நடந்துகொள்வேன்.
- தவறு செய்யும் மாணவர்களை தனியே அழைத்துச்சென்று அவர்களின் தவற்றினை உணர்த்தி அன்பால் நல்வழிப்படுத்துவேன்.
- மாணவர் மனம் புண்படும்படியான வார்த்தைகளைப் பயன்படுத்த மாட்டேன்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- அவர்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களின் பிரச்சனைகளைக் கேட்டறிந்து அவர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பேன்.
- என்னை ஆசிரியராக எண்ணாமல் தன் குடும்பத்தில் ஒருவராக மாணவர் ஏற்றுக்கொள்ளும்படி அவர்களிடம் நடந்துகொள்வேன்.
- (இது போன்ற பொருத்தமான விடைகளை மாணவரே சிந்தித்து எழுதலாம்).

**3. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.**

- பண்டைய காலத்தில் மாணவர்கள் முதலில் மணலில் எழுதிப் பழகுவர். ஆசிரியர் முதலில் எழுத, மாணவர்கள் அதைப் பின்பற்றி எழுதுவர். மணலில் எழுதப் பழகிய பின்னர் ஓலைச்சுவடிகளில் எழுத்தாணி கொண்டு எழுதினர்.
- இடைக்காலத்தில் மாணவர்கள் பலகையில், பலப்பம் கொண்டு எழுதினர். இக்காலத்தில் காகிதத்தில் கரிக்கோல் கொண்டு எழுதுகின்றனர்.
- பண்டைக் காலத்தில் எழுத்துக்கள் ஒன்றின்மேல் ஒன்று படாமல், கொம்பு, சுழி கோணாமலும் எழுதினர். ஏட்டுச்சுவடிகளின் மூலம் இதனை அறியலாம்.
- தற்காலத்தில் இரட்டை வரி ஏட்டில் வரிகளையும், எழுத்துக்களையும் தெளிவாக எழுதுகின்றனர்.

**4. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.**



பாடாண் திணை :

பாடு + ஆண் + திணை. பாடப்படும் ஆண் மகனின் ஒழுக்கங்கள். அதாவது ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் நெறி போன்ற நல்லியல்புகளை சிறப்பித்துக் கூறுவது பாடாண்திணை ஆகும்.

வாயிலோயே எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியின் புகழ், கொடை, வலிமை, அருள் நெறி ஆகியன சிறப்பித்துப் பாடப்பட்டு இருக்கிறது. எனவே இப்பாடல் புறநானூற்றுப் பாடலுக்கு உரியதாகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**நெடுவினா :**

***1. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.***



***இதில் வெற்றி பெற — சுரதா***

***முன்னுரை :***

உவமைக்கவிஞர் என்று அழைக்கப்படுபவர் சுரதா. இவரது கவிதைகளில் உவமைகள் பெருமளவில் இடம்பெற்றிருக்கும். உவமைகளைக் கையாள்வதில் வல்லவர் என்பதாலேயே உவமைக் கவிஞர் என்று அழைக்கப்படுகிறார். இதில் வெற்றி பெற எனும் இப்பாடலில் கவிதை எழுதுவதில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும் என்று பட்டியலிடுகிறார். இவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

***கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவன :***

- கவிதை எழுத உரைநடைக்கும் கவிதைக்கும் வேறுபாட்டினை அறிந்திருக்க வேண்டும்.
- சொற்களை அமைக்கும்போது எதுகை, மோனை சேர்க்காமல் அடிவரையறை இன்றி எழுதப்படுவது வசனம்.
- இலக்கண முறைப்படி இயற்றப்படுவதே கவிதை ஆகும்.

***கவிதையில் இடம்பெற வேண்டுவன.***

- எழுத்துகளுக்கு இடையில் அசைகள் அமையும்.
- இரண்டு சீரின் இடைவெளியில் தளைகள் அமையும்.
- தளைகள் ஒன்று சேர்ந்து அமைவது அடிகள்.
- அடிகள் பல சேர்ந்து வரின் தொடை அமையும்.
- தொடை பல தொடர்ந்தால் பாக்கள் வரும்.
- இவற்றை எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு கவிதை எழுதத் தொடங்க வேண்டும்.
- சீர்களில் தேமா, புளிமா போன்றன இருக்க வேண்டும்.
- வெண்பாவின் ஈற்றுச்சீர் காசு எனும் வாய்பாட்டில் முடியும்.
- நல்ல புலவர்களின் பாடல்கள் அவர்கட்கு புகழ்பெற்றுத் தரும்.
- எளிய மக்களுக்கும் விளங்கும்படி தமிழ்க்கவிதை படைக்க வேண்டும்.
- கேள்விகள் எழுப்பினால் ஆராய்ச்சி விளையும்.
- எழுத்துக்களை நுட்பமாகக் கற்றால் அறம், பொருள் விளையும்.
- இவற்றையெல்லாம் அறியாமல் பா இயற்றினால் புகழும், சிறப்பும் எங்ஙனம் விளையும்.
- எனவே, பா இயற்றும் முறையறிந்து நல்ல கருத்துகளுடன் இயற்ற வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் உவமைக்கவிஞர் சுரதா.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**முடிவுரை :**

இதில் வெற்றி பெற எனும் இக்கவிதையின் வழி, கவிதை எழுதும் முறை, தொடுக்கும் முறை ஆகியவற்றை நாம் கற்றுக் கொண்டோம். இவற்றைப் பின்பற்றி நாம் கவிதை எழுதி, கவிஞன் எனும் பெறுமை பெருவோமாக.

**2. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.**

**பண்டைய காலத்துப் பள்ளிக் கூடங்கள் - உ.வே.சாமிநாதர்**

**முன்னுரை**

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது கல்வியாலேயே நிகழும். கற்றல் கற்பித்தல் முறையானது காலந்தோறும் மாற்றமும் ஏற்றமும் பெற்றுத் திகழ்கிறது. அதைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கல்வித்தொடக்கம் :(வித்யாரம்பம்)**

ஐந்து வயதில் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பும் நாள் சிறப்பான நாளாகக் கொண்டாடப்படும். ஏட்டில் மஞ்சள் பூசிப் பிள்ளைகளிடம் கொடுத்து வாசிக்கச் சொல்வார்கள். உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க மாணாக்கன் அதனைப் பின்பற்றுவான்.



**மையாடல் :**

சுவடிகளிலுள்ள எழுத்துக்கள் தெளிவாகத் தெரியவும், கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் இருப்பதற்கும் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளியிலைச் சாறு அல்லது ஊமத்தையிலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி ஆகியவற்றைக் கொண்டு மை தயாரித்துப் பூசினர்.

**எழுத்துப்பயிற்சி :**

பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத, அதன்மேல் பிள்ளைகள் எழுதுவர். எழுத்துக்கள் ஒன்றின்மேல் ஒன்று படாமல், வரிகோணாமல் எழுதினர்.

**மனனப் பயிற்சி :**

அடிப்படையான நூல்களெல்லாம் பிள்ளைகளுக்கு மனனமாக இருக்கும். தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள் முதலியன மனனமாக இருக்கும். கணிதத்தில் மேல்வாயிலக்கம், கீழ்வாயிலக்கம், குழிமாற்று


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

போன்றனவும் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்றவைகளும் மனனமாக இடம்பெறும். அன்பினால் அடக்குதல்.

முற்காலத்தில் கொடிய தண்டனைகள் இல்லை. மாணவர்களை ஆசிரியர்கள் அன்பினால் வழிப்படுத்தினர்.

**முடிவுரை :**

காலத்தின் கோலத்தால் கற்றல் கற்பித்தல் முறையில் மாற்றங்கள் வந்தாலும் அக்காலக் கல்விமுறையின் நற்பயன்களும், அவற்றில் படித்த பேரறிஞர்கள் நமக்கு ஈட்டித்தந்த நூற்செல்வத்தையும் நினைக்கும்போது நமக்குப் பெருமிதம் உண்டாகிறது.

**3. "சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு" - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?**

முன்னுரை :

இந்திய நாட்டிலேயே தமிழகத்தில்தான் அதிக விபத்துக்களும், உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. அவற்றைத் தவிர்த்து சாலை விபத்துகளற்ற தமிழகத்தை ஏற்படுத்த செய்ய வேண்டியவற்றை இக்கட்டுரையின் வழியே காண்போம்.

- பதினெட்டு வயது நிறைந்தவர்கள் முறையான பயிற்சி பெற்று ஓட்டுனர் உரிமம் பெற்ற பின்னர் வாகனங்களை இயக்க வேண்டும்.
- பள்ளி மாணவர்கள் இருசக்கர வாகனம் ஓட்டுவது சட்டப்படி குற்றம்.
- இருசக்கர வாகனத்தில் செல்வோர் தலைக்கவசம் அணிய வேண்டும். கைப்பேசியில் பேசிக்கொண்டே வாகனங்களை இயக்கக் கூடாது.
- பொதுவழியில் உச்ச வேகத்தில் ஓட்டுவது, காதணி கேட்பிகள் பொருத்திக்கொண்டு ஊர்திகளை ஓட்டுவது கூடாது.
- சாலை விதிகளை முழுமையாக அறிந்து, முறையாகப் பின்பற்ற வேண்டும்.




- ஓட்டுநரின் கவனக்குறைவு, போதிய பயிற்சியின்மை, தட்பவெப்பநிலை, இயந்திரக்கோளாறு, மிகுதியான ஆட்களையோ, சரக்குகளையோ ஏற்றிச் செல்வது, இருப்புப் பாதைகளை கவனிக்காமல் கடப்பது, மது அருந்திவிட்டு வாகனங்கள் ஓட்டுவது போன்ற காரணங்களால் விபத்துக்கள் அதிகம் நடக்கின்றன.
- மாணவர்கள் சாலையில் விளையாடக் கூடாது.
- சாலையை அடைத்துக்கொண்டு செல்வது, மற்ற வாகனங்களை பிடித்துக்கொண்டு மிதிவண்டியில் செல்வது, ஓடும் பேருந்தில் ஏறுவது,



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இறங்குவது, படிக்கட்டில் தொங்கிக் கொண்டு செல்வது போன்றவற்றை கட்டாயம் செய்யக்கூடாது.

- சாலையில் உள்ள குறியீடுகளை அறிந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டும்.
- போக்குவரத்துக் காவலரின் சைகைகளைகட்டாயம் அறிந்து நடக்க வேண்டும்.
- நடந்து செல்வோர் நடைமேடையைப் பயன்படுத்த வேண்டும்.
- சாலையைக் கடக்கும் முன் இருபுறமும் பார்த்துவிட்டு சைகை செய்துவிட்டு கடக்க வேண்டும்.
- எதிரில் வரும் வாகனங்களுக்கு வழிவிட வேண்டும்.
- பிற வாகன ஓட்டிகளுக்கு விட்டுக் கொடுத்து இயக்கவேண்டும்.

**முடிவுரை :**

சாலை விதிமுறைகளை கடைப்பிடித்து மிதமான வேகத்தில் வாகனங்களை இயக்கி விபத்தில்லா தமிழகத்தை உருவாக்க சூளுரைப்போம்.

மொழிப்பயிற்சி

பிழைகளை நீக்குக

**1. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.**

நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.

**2. எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.**

எங்கள் ஊரில் நூலகக் கட்டடட் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.

**3. ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.**

அரங்கன் வெண்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

**4. மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.**

வானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

**5. ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.**

ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.

**6. இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.**

இன்றைக்கு சாயுங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

**தமிழாக்கம் தருக.**

The Serious dearth of library facilities in this country is scarcely keeping with India's status in the international community of nations or with her educational and social needs *(இந்திய நாட்டில் நூலகத்தின் பற்றாக்குறையால் கல்வி மற்றும் சமூகத் தேவைகளில் இந்தியாவின் நிலைப்பாடு மற்ற நாடுகளைக் காட்டிலும் குறைந்தே உள்ளது)*. In this matter, India compares unfavorably not only with other independent Dominions of the commonwealth but even with certain British colonies



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

*(இந்த விஷயத்தில் இந்தியா, சில பொதுவுடைமை நாடுகள் மற்றும் ஆங்கிலக் குடியேற்ற நாடுகளோடு எதிர்மறையாகக் ஒப்பிடப்படுகிறது)*. She possesses only one public library on any considerable size, and even this institution is adequate to serve the need of the capital city *(இந்தியாவில் பெரிய அளவிலான நூலகம் ஒன்று மட்டுமே உள்ளது. அது தலைநகரத்தின் தேவையைக் கூட நிறைவேற்ற போதுமானது அல்ல)*. Only a few towns can boast of possessing any library at all *(சில நகரங்கள் மட்டுமே நூலகத்தால் பெருமை அடைகின்றன)*. The rural population is completely neglected *(கிராமப்புற மக்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறார்கள்)*; There are no travelling libraries to reach them of kind that are to be found even in some backward countries *(சில பின்தங்கிய நாடுகளில் இருப்பதைப்போல நடமாடும் நூலகங்கள் கூட கிராமப்புறங்களைச் சென்றடைவதில்லை)*.

The growth of libraries has lagged *(இந்தியாவில் நூலகங்களின் வளர்ச்சி குன்றியுள்ளது)*. Far behind the increase in the number of schools and the rise in the rate of literacy *(பின்னாளில் பள்ளிகளின் எண்ணிக்கை உயர்ந்தாலும், எழுத்தறிவில் பின்தங்க நேரிடும்)*. The great mass of the people in india do not have the means to buy books or even magazines and newspapers *(பெரும் மக்கள் தொகை உள்ள இந்தியாவில் புத்தகங்கள் அல்லது இதழ்கள் மற்றும் செய்தித்தாள் வாங்கக் கூட வழியில்லை)*; in the absence of sufficinat public libraries and reading room, most of them cannot attain regular habits *(போதுமான பொது நூலகங்கள் மற்றும் வாசிப்பதற்கான அறைகள் பற்றாக்குறையால் வாசிப்புப் பழக்கம் அற்றுப் போகிறது)*.



**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**

***1. பலகை*** - ***பலகை****யால் ஆன மேசையில் உணவு உண்டனர்.(மரப்பலகை)*
***பல கைகள்*** *ஒன்றிணைந்து வெற்றியை தமதாக்கின.(பல கைகள்)*

***2. தாமரை*** - ***தாமரை*** *நமது பாரத நாட்டின் மலராகும். (தாமரை மலர்)*
*காட்டில்* ***தா மரையைக்*** *கண்டேன் (தா மரை - தாவுகின்ற மான்)*

***3. கோவில்*** - ***கோவில்*** *இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. (கோவில் - ஆலயம்)*
*எதிரியை வீழ்த்த* ***கோ வில்****லை எடுத்தார் (கோ வில் - அரசன் வில்).*

***4. வெங்காயம்*** - *காய்கறி கடைக்குச் சென்று* ***வெங்காயம்*** *வாங்கி வா. (காய்கறிகளுள் ஒன்று)*
*தீயில் சிக்கியதால்* ***வெம் காயம்*** *ஏற்பட்டது (வெம் காயம் - தீக்காயம்).*

***5. தலைமை*** - *சுதந்திர தினத்திற்கு முதலமைச்சர்* ***தலைமை*** *தாங்கினார்.*
*தலைமுடி நரைத்ததால்* ***தலை மை****யைப் பயன்படுத்தினார் (தலை மை - நரைமுடியை கருமையாக்கப் பயன்படும் சாயம்).*



*திரு.ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.**
***யானைக்கும் அடிசறுக்கும்***

***பழமொழி விளக்கம் : 1***

எவ்வளவோ திறமை, அறிவு, வலிமை, புத்திசாலித்தனம் இருப்பினும் சில நேரங்களில் தவறு செய்வது உண்டு.

***வாழ்க்கை நிகழ்வு : 2***

நான் கல்லூரி படித்துக்கொண்டிருந்தேன். அப்போது ஈருருளை மிக நன்றாக ஓட்டக் கற்றுக்கொண்டேன். மிகவும் வேகமாகவும், அதே சமயத்தில் நளினமாகவும் வண்டியை இயக்குவேன். மிகச்சிறப்பாக வாகனத்தை இயக்கிக்காட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் பெற்றேன். வண்டி இயக்குவதில் எனக்கு ஈடு இணை எவருமில்லை என்று நண்பர்களிடம் சவால் விடுவேன். சாலை விதிகளை மதித்தும், பிறருக்கு வழிவிட்டும், மிதமான வேகத்துடனும் வண்டியை இயக்குவேன். தலைக்கவசம் அணிதல், வண்டியை இயக்கும்போது அலைபேசியில் பேசாதிருத்தல் போன்றவற்றைக் கட்டாயம் கடைபிடிப்பேன்.

ஒருநாள் நான் கல்லூரியில் நடந்த நிகழ்வு ஒன்றை மனதில் நினைத்துப் பார்த்துக்கொண்டே வண்டியை ஓட்டினேன். கவனச்சிதறல் காரணமாக எதிரில் வரும் வாகனத்தை கவனிக்கத் தவறிவிட்டேன். ஒரு பேருந்தை கடந்து கொண்டிருக்கும்போது எதிரில் வந்த மகிழுந்தின் வேகத்தைக் கணிக்கத் தவறிவிட்டேன். நொடிப்பொழுதில் என் வாகனமும், மகிழுந்தும் மோதிக்கொள்ள இருந்தது. நல்வாய்ப்பாக எதுவும் நிகழவில்லை. பேருந்தில் இருந்தவர்களும், மகிழுந்தின் ஓட்டுனரும் என்னை கடுமையாகத் திட்டியும் எச்சரித்தும் என்னை அனுப்பினர். யானைக்கும் அடிசறுக்கும் என்ற பழமொழிக்கேற்ப எனக்கு விபத்து நிகழ இருந்தது. அன்றைய நாள் முதல் வாகனத்தை முழுகவனத்துடன் இயக்கி வருகிறேன்.

***பழமொழி உணர்த்தும் நீதி:***

யானைக்கும் அடிசறுக்கும் என்ற பழமொழிக்கேற்ப வாகனத்தை இயக்குபவர்கள் என்னதான் திறமையாக இருப்பினும் சில நேரத்தில் விபத்தில் சிக்கிக் கொள்கின்றனர். எனவே இருமாப்பு இருக்கக் கூடாது.

- ***தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்.***

  பொருள் : பிறருக்கு நன்மை செய்பவருக்கு நன்மையே விளையும், தீமை செய்பவருக்கு தீமையே ஏற்படும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை**

பொருள் : பிறரிடமுள்ள குறைகளை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தால் நம்முடன் நட்பாக எவரும் இருக்க மாட்டார்கள். எனவே பிறரிடம் குறைகளைக் கண்டுபிடிக்கும் பழக்கத்தை கட்டாயம் நிறுத்த வேண்டும்.

**எறும்பு ஊரக் கல்லும் தேயும்**

பொருள் : எவ்வளவு கடுமையான பணியாக இருந்தாலும், தொடர்ந்து அதைச் செய்தால் இனிதே நிறைவடையும். (அல்லது) விடா முயற்சியுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

**ஊழி பெயரினும் தான் பெயரார்**

பொருள் : உலகமே அழியும் காலம் வந்தாலும், சான்றோர் தம் நல்ல குணத்தை விட்டு மாற மாட்டார்கள். தீய செயல்கள் செய்ய மாட்டார்.

***(இது போன்ற பழமொழிகளுக்கு மாணவர்கள் கற்பனைத் திறனுக்கு ஏற்ப வாழ்க்கை நிகழ்வோடு எழுதலாம்).***

**கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உணவே மருந்து மருந்தே உணவு என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

ருசிக்காக, சாப்பிடக் கூடாத பொருள்களைச் சாப்பிடுவதும், பசிக்காக அளவுக்கு மீறிச் சாப்பிடுவதும்தான் பிணிகளுக்குக் காரணம். சாதாரணமாக உண்ட உணவு செரிமானத்திற்கு 4 மணி நேரம் ஆகிறது. பொதுவாகவே உணவை நன்றாக மென்று விழுங்க வேண்டும். இதனால் மாவுப்பொருட்கள் செரிமானதற்கு உமிழ்நீர் சுரந்து உணவுடன் உட்செல்லும்.

உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சத்துகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றைப் பற்றிய தெளிந்த அறிவு, ஆரோக்கிய உணவினைத் தேர்வு செய்ய மிகவும் உதவியாய் இருக்கும்.

நமது எடை மற்றும் உயரத்தினை அவ்வப்போது சோதித்து நினைவில் கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியமானது. பிறகு தங்களது எடை மற்றும்



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உயரத்தைப் பொறுத்து ஆரோக்கியமான உணவு முறையைத் தேர்ந்தெடுக்கவும் உடற்பயிற்சி செய்யவும் முடிவெடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதருக்கும் அவரது வயது, பாலினம், உடல் உழைப்பு, உடல்நிலை, வாழும் இடம், பருவநிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஊட்டச்சத்துக்களின் தேவை மாறுபடும்.

தேவையான தானியங்களுடன் பருப்பு மற்றும் பயறு வகைகளைச் சேர்த்து, அதிக காய்கறிகளுடனும் பழங்களுடனும் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

**குறிப்பு : மூன்றில் ஒரு பங்காக சுருக்க செய்ய வேண்டியன.**

1. திருந்தாப் படிவம் - வினாவில் கொடுக்கப்பட்ட பத்தியில் ஓரளவு சுருக்கி எழுத வேண்டும்.
2. திருந்திய படிவம் - திருந்தாப் படிவத்தில் உள்ளவற்றை சுருக்கியும், வினாவில் கொடுக்கப்பட்ட பத்தியில் உள்ள சொற்களுள் மூன்றில் ஒரு பங்கு சொற்கள் இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும். திருந்திய படிவம் எழுதி முடித்த பின் திருந்தாப் படிவத்தை கரிக்கோலால் ( பென்சில் ) குறுக்காகக் கோடு போட வேண்டும்.
3. தலைப்பு - பத்திக்குப் பொருத்தமான தலைப்பிடவும்.
4. கொடுக்கப்பட்ட வார்த்தைகள் - வினாவில் கொடுக்கப்பட்ட பத்தியில் உள்ள சொற்களின் எண்ணிக்கையை எழுத வேண்டும்.
5. சுருக்கப்பட்ட வார்த்தைகள் - திருந்திய படிவத்தில் உள்ள சொற்கள்.

**திருந்தாப் படிவம் :**

ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்குக் காரணமாகின்றன. மருத்துவத் தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம். உணவே மருந்து மருந்தே உணவு என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

சாதாரணமாக உண்ட உணவு செரிமானத்திற்கு 4 மணி நேரம் ஆகிறது. ஆரோக்கிய உணவினைத் தேர்வு செய்ய மிகவும் உதவியாய் இருக்கும். பிறகு தங்களது எடை மற்றும் உயரத்தைப் பொறுத்து ஆரோக்கியமான உணவு முறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தானியங்கள், பருப்பு, பயறு வகைகள், காய்கறிகள் மற்றும் பழங்களுடன் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

**திருந்திய படிவம் :**

**ஆரோக்கிய உணவு**

ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் ஆகியன உடல்நலப் பாதிப்புகளுக்குக் காரணமாகின்றன. உணவே மருந்து



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மருந்தே உணவு என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

தங்களது எடை மற்றும் உயரத்தைப் பொறுத்து ஆரோக்கியமான உணவு முறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தானியங்கள், பருப்பு, பயறு வகைகள், காய்கறிகள் மற்றும் பழங்களுடன் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

கொடுக்கப்பட்ட வார்த்தைகள் - 164
சுருக்கப்பட்ட வார்த்தைகள் - 47



இலக்கணம் - பா இயற்றப் பழகலாம்

**1. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.**

அ) அன்பே **தகளியாய்.**
ஆ) வான்மழை **தூறலில்.**
இ) கண்ணிரண்டும் **இல்லார்.**
ஈ) வெண்ணிலவு **காய்கிறது.**
உ) வெய்யோன் **ஒளிர்ந்திட.**



**2. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.**

அ) கல்வி கரையில **கற்பவர்.**
ஆ) கல்லாரே ஆயினும் **கற்றாரை.**
இ) நல்லவை செய்யின் **இயல்பாகும்.**
ஈ) அவமதிப்பும் ஆன்ற **மதிப்பும்.**
உ) உண்ணாது நோற்பர் **பெரியோர்.**

**3. பொருத்துக.**

அ) மாச்சீர் - 4) தேமா, புளிமா
ஆ) காய்ச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்
இ) விளச்சீர் - 1) கருவிளம், கூவிளம்
ஈ) ஓரசைச்சீர் - 2) நாள், மலர்

**விடை : ஆ) 4, 3, 1, 2**

**4. கீழுள்ள சொற்களை ஈற்றுச்சீராகக் கொண்டு குறள் வெண்பா/ நேரிசை வெண்பா எழுத முயற்சிக்கவும்.**

**கடல்**

கடல்வீழ் அருவியும் சாரலும் காண
அலையுதே உள்ளக் **கடல்.**

**வாள்**

www.Padasalai.Net



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

எதிர்சென்று மன்னன் மணிமுடி பூண்சிரம்
கொய்ததே கூரிய **வாள்.**

**மழை**

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் **மழை.**

**தேன்**

மலைமுகட்டுக் கூட்டில் மலர்தேடிச் சேர்த்த
அருமருந்தே மாமலைத் **தேன்.**

**மரம்**

இன்னாத செய்தார்க்கும் தண்ணிழல் தந்தே
தலைமுறை காக்கும் **மரம்.**


**5. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?**

இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை.

**6. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?**

- ஒரு விகற்பம் - செய்யுளில் நான்கு அடிகளும் ஒரே எதுகை பெற்று வருவது.
- பலவிகற்பம் - செய்யுளில் நான்கு அடிகளிலும் வெவ்வேறு எதுகைகள் பெற்று வருவது.

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



புத்தகம் படித்தால்
பொறியியலாளர் ஆகலாம்.
மனமுவந்து படித்தால்
மருத்துவர் ஆகலாம்.
அமர்ந்து படித்தால்
ஆசிரியராகலாம்.
நிமிர்ந்து படித்தால்
நீதிபதி ஆகலாம்.
கவனமுடன் படித்தால்
காவலராகலாம்.
செம்மாந்து படித்தால்
செவிலியராகலாம்.
படி படி படி படிப்பபே
நம் வெற்றிப் படி.

**கலைச்சொல் (வானூர்தி நிலையம்)**

| | | | |
|---|---|---|---|
| Arrival | - வருகை | Passport | - கடவுச்சீட்டு |
| Departure | - புறப்பாடு | Visa | - நுழைவு இசைவு |
| Conveyor Belt | - ஊர்திப்பட்டை | Domestic Flight | - உள்நாட்டு விமானம் |



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

Take Off - வானூர்தி கிளம்புதல்

**இலக்கணக் குறிப்புகள் :**

1. வயங்குமொழி - வினைத்தொகை
2. அடையா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
3. அறிவும் புகழும் - எண்ணும்மை
4. சிறாஅர் - இசைநிறை அளபெடை

**பிரித்துப் புணர்ச்சி விதி தருக :**

1. எத்திசை = எ + திசை

இயல்பினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி த் மிகுந்து எத்திசை என ஆயிற்று.

திணை விளக்கம்

பாடாண் திணை

**திணை விளக்கம் :** பாடு + ஆண் + திணை. பாடப்படும் ஆண் மகனின் ஒழுக்கங்கள். அதாவது ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளை சிறப்பித்துக் கூறுவது பாடாண்திணை ஆகும்.

**சான்று :**

வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி ......

**பாடல் விளக்கம் :**

விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி தன்னுடைய தகுதியை அறியாதவனோ என்று வாயில் காவலரைக் கண்டு ஔவையார் பாடியுள்ளார். இதிலிருந்து அதியமான் பரிசிலருக்கு கொடை வழங்கியமை தெரிகிறது.

**பொருத்தம் :**

ஔவையாரின் வாயிலோயே எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியியன் கொடைத்திறம் வெளிப்படுகிறது. எனவே இப்பாடல் பாடாண் திணைக்குச் சான்றாகும்.

**துறை விளக்கம்**

***பரிசில் துறை***

துறை விளக்கம் :

பரிசில் வேண்டி மன்னரின் வாயிலில் நிற்பது பரிசில் துறை ஆகும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

சான்று :

வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி ......

**பாடல் விளக்கம் :**

விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி தன்னுடைய தகுதியை அறியாதவனோ என்று வாயில் காவலரைக் கண்டு ஔவையார் பாடியுள்ளார். இதிலிருந்து அதியமான் பரிசிலருக்கு கொடை வழங்கியமையும், ஔவையாருக்கு பரிசில் வழங்கத் தாமதமானதும் தெரிகிறது. எனவே காலம் தாழ்த்தாது பரிசில் தர வேண்டி ஔவையார் வலியுறுத்துகிறார்.

**பொருத்தம் :**

ஔவையாரின் வாயிலோயே எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியியன் கொடைத்திறம் வெளிப்படுகிறது. மேலும் காலம் தாழ்த்தாது பரிசில் தர வேண்டி ஔவையார் வாயில் காவலனிடம் வலியுறுத்துகிறார். எனவே இப்பாடல் பரிசில் துறைக்குச் சான்றாகும்.

**மனப்பாடப் பாடல்கள் :**

**1. இதில் வெற்றிபெற**

விண்வேறு விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு
மண்வேறு: மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு: பனித்துளியும் மழையும் வேறு

புண்வேறு: வீரர்களின் விழுப்புண் வேறு:
புகழ்வேறு: செல்வாக்கு வேறு: காணும்
கண்வேறு: கல்விக்கண் வேறு: கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

\- **சுரதா**

**பாவகை :** எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***2. புறநானூறு***

*அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,*
*வறுந்தலை உலகமும் அன்றே: அதனால்*
*காவினெம் கலனே: சுருக்கினெம் கலப்பை:*
*மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்*
*மழுவுடைக் காட்டகத்து அற்றே*
*எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.*

\- **ஔவையார்.**

**பாவகை :** நேரிசை ஆசிரியப்பா.

**கூடுதல் வினாக்கள் :**

***1. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்***
***மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் - இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?***
*தமிழ்விடுதூது.*

***2. நாராசம் என்றால் என்ன?***
ஓலைச் சுவடிகளைக் கட்டுவதற்கு இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவர். அதற்கு நாராசம் என்று பெயர்.

***3. எழுத்தாணியின் வகைகள் யாவை? (2022 பொதுத்தேர்வு வினா)***
*மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி.*

***4. தூக்கு அல்லது அசை என்றால் என்ன?***
சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்கு தூக்கு அல்லது அசை என்று பெயர்.

***5. உ.வே.சா பெற்ற பட்டங்கள் யாவை?***
மகாமகோபாத்தியாய, திராவிட வித்தியா பூஷணம், தாகஷிணாத்திய கலாநிதி, சென்னை பல்கலைக்கழகம் வழங்கிய டாக்டர் பட்டம் போன்றன இவர் பெற்ற பட்டங்கள்.

***6. உ.வே.சா நூலகம் எங்கு அமைந்துள்ளது?***
சென்னை திருவான்மியூரில் உ.வே.சா. நூலகம் உள்ளது.

***7. ஓதல் பிரிவுக்குரிய காலம் எவ்வளவு?*** *3 ஆண்டுகள்.*

***8. சுரதாவின் இயற்பெயர் யாது?*** இராசகோபாலன். (பாரதிதாசன் மீது கொண்ட பற்றின் காரணமாக அவரது இயற்பெயரான சுப்புரத்தினம் என்பதோடு தாசன் சேர்த்து ***சுப்புரத்தினதாசன்*** என்பதைச் சுருக்கி சுரதா என மாற்றிக் கொண்டார்).



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com


***9. சி. மணி அவர்களின் இயற்பெயர் யாது?*** *சி. பழனிச்சாமி.*

***10. புறநானூறு பெயர்காரணம் யாது? புறநானூறு குறிப்பு வரைக.***

*புறநானூறு எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. புறப்பொருள் பற்றியது. புறம், புறப்பாட்டு என்றும் அழைக்கப்படுகிறது. தமிழரின் போர், வீரம், நாகரிகம், பண்பாடு, நெறிப்பட்ட வாழ்க்கை முதலியவற்றை விளக்கமாக எடுத்துரைக்கிறது.*

***11. 18 வயது நிறைவடையாத குழந்தை ஊர்தி இயக்கினால் அதற்கான தண்டனை யாது?***

*18 வயது நிறைவடையாத குழந்தை ஊர்தி இயக்கினாலோ, விபத்தை ஏற்படுத்தினாலோ, அக்குழந்தையின் பெற்றோருக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும்.*






*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் 5


திருஞானசம்பந்தர்

உரைநடை : மதராசப்பட்டினம்

செய்யுள் : தெய்வமணிமாலை - இராமலிங்க அடிகள்,
தேவாரம் - திருஞானசம்பந்தர்,
அகநானூறு - அம்மூவனார்

துணைப்பாடம் : தலைக்குளம் - தோப்பில் முகமது மீரான்

இலக்கணம் : படிமம்

**அ. பலவுள் தெரிக :**

1. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல. அது நம்பிக்கை மையம் - காரணம்

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்.
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு.
இ) மென்பொருள் உற்பத்தியில் முன்னிலை
ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

**விடை ஈ) அ, ஆ, இ - அனைத்தும்.**

2. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.

காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் தவறு
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் சரி

**விடை : ஈ) கூற்று சரி, காரணம் சரி**

3. பொருத்துக.

அ) திருவல்லிக்கேணி ஆறு - 1) மாவலிபுரச் செலவு
ஆ) பக்கிங்கம் கால்வாய் - 2) கல் கோட்டை
இ) பல்லாவரம் - 3) அருங்காட்சியகம்
ஈ) எழும்பூர் - 4) கூவம்

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1

**விடை : இ) 4, 1, 2, 3**

4. "உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்" - இத்தொடர் உணர்த்தும் பண்பு.

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு
ஈ) இவை அனைத்தும்

**விடை : இ) முரண் பண்பு**

5. "விளியறி ஞமலி" - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

**விடை : இ) நாய்**

**ஆ. குறுவினாக்கள் :**

**1. கலிவிழா, ஒளிவிழா - விளக்கம் தருக.**

- கலிவிழா - எழுச்சி (அல்லது) உற்சாகம் தரும் விழா.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ஒளிவிழா - ஆரவார விழா.
- மயிலையில் உள்ள கபாலீசுவரர் கோவிலில் நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழாவானது எழுச்சி தருவதாகவும், ஆரவாரம் மிக்கதாகவும் உள்ளது என திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

**2. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.**

காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869இல் உருவாக்கப்பட்ட இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

**3. "தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே" - தொடருக்குப் பதவுரை எழுதுக.**

அறம் செய்வோர் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தக்கோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே என்பது பொருள்.

**4. "பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்" - இத்தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.**

- முரண் எனப்படுவது எதிர்ச்சொற்கள் ஆகும்.
- பெருங்கடல், சிறுகுடி ஆகிய சொற்களில் பெருமை x சிறுமை என்பது முரணாக இடம்பெற்றுள்ளது.

சிறுவினாக்கள் :

**1. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**

- சென்னை நகரின் ஒவ்வொரு பகுதிக்கும் வரலாறு உண்டு. அதன் பண்பாட்டு அடையாளங்களை எண்ணிக்கையில் அடக்குவது மிகக் கடினம்.
- இந்திய சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றுபவை.



- ஆங்கிலேயர் உருவாக்கிய மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ் சாரசனிக் கட்டடக்கலை முறையில் அமைந்தது. இன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகம் என்று அழைக்கப்படுகிறது.
- எழும்பூர் அருங்காட்சியகமும், கோட்டை அருங்காட்சியகமும் சென்னையின் அடையாளத்தைப் பேணுபவையாகும்.
- இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னிமாரா நூலகம் நவீனமாக வளர்ந்து வரும் பெரிய நூலகமாகும்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- இந்தியத் திரைப்படத் துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய சென்னைக்குத் திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள், திரையரங்கம் ஆகியன குறிப்பிடத்தக்க அடையாளங்கள்.

**2. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?**

இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் வேண்டுவன :

- அறம் செய்வோர் நிறைந்திருக்கும் சென்னையில், கந்தக்கோட்டத்தில் எழுந்தருளியுள்ள கந்தவேளே.
- ஒருநெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமருடைய உறவு வேண்டும்.
- உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகருடைய உறவு கலக்காமல் இருக்க வேண்டும்.
- நினது புகழையே நான் பேச வேண்டும்.
- மதம் எனும் பேய் என்னைப் பிடிக்காமல் இருக்க வேண்டும்.
- இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக.

**3. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?**

- இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளை உடைய பெரிய ஊர் திருமயிலை எனும் மயிலாப்பூர் ஆகும்.
- அங்கு எழுச்சிமிக்க விழாக்கள் நடைபெறும்.
- மயிலையில் உள்ள கபாலீசுவரர் கோவிலில் நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழாவானது எழுச்சி தருவதாகவும், ஆரவாரம் மிக்கதாகவும் உள்ளது. அத்தகு திருவிழாவைக் காணாமல் போவது முறையாகாது என திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

**4. “நெல்லின் நேரே வெண்கல் உப்பு” - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.**

நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனும் இவ்வரி அம்மூவனார் இயற்றிய அகநானூறு பாடலில் இடம்பெற்றுள்ளது.

**பண்டமாற்று முறை :**

- தாம் விளைவித்த பொருளைக் கொடுத்து, அதற்கு ஈடாக வேறு பொருளைப் பெறுவது பண்டமாற்று முறையாகும்.
- பாடலில் உமணர் மகள் ஒருத்தி நெல்லைக் கொடுத்து அதற்கு நிகரான உப்பை பெற்றுக் கொள்ளுமாறு கூவினாள். இதிலிருந்து பண்டமாற்று முறையைப் பற்றி அறியலாம்.

**உப்பு விளைவித்த முறை :**

- உப்பளங்களில் உழாமலேயே உப்பு விளைவிப்பர்.
- விளைவித்த உப்பை வணிகர் வண்டியில் ஏற்றிச் செல்வர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- கோடைக்காலத்தில் வெப்பத்தால் பிளவுபட்ட குன்றைக் கடந்து தொலைவில் உள்ள ஊர்களில் உப்பை விற்பனை செய்வர்.

நெடுவினா :

**1. "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக. (பொது வினா)**

**நான் விரும்பும் நகரம் - மதுரை**



***முன்னுரை :***

தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்பும், தோற்றப்பொலிவும் மிக்க நகரங்களுள் முதன்மையானது மதுரை. அந்நகரின் சிறப்பை இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

***மதுரையின் தொன்மை :***

வைகை ஆற்றின் கரையில் அமைந்திருக்கும் நகரம் மதுரை. கடைச்சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களின் தலைநகரமாக விளங்குகிறது. மீனாட்சியம்மன் ஆலயத்தை மையமாகக் கொண்டு தாமரை வடிவில் மதுரை நகர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

***மதுரை :***

முத்தும் முத்தமிழும் வளர்ந்தது பாண்டிய நாடு. அப்பாண்டிய நாட்டின் தலைநகரம் மதுரை ஆகும். மதுரை என்ற சொல்லுக்கு அழகு என்னும் பொருளும் உண்டு.

***வீதிகளின் பெயர்கள் :***

மீனாட்சியம்மன் ஆலயத்தைச் சுற்றிலும் உள்ள வீதிகளுக்கு சித்திரை, ஆடி, ஆவணி போன்ற மாதத்தின் பெயர்களும், அரசர்வீதி, அந்தணர்வீதி, வணிகவீதி, வேளாளவீதி என சூட்டப்பட்டுள்ளது.

***பண்பாட்டு நகரம் :***

மீனாட்சியம்மன் கோவிலில் எப்போதும் திருவிழாக்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். நாலங்காடியும் அல்லங்காடியும் எப்போதும் இயங்கும். எனவே தூங்கா நகரமாக மதுரை திகழ்கிறது. குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடி அரங்கேற்றம் செய்தபோது, மீனாட்சியம்மையே சிறுமியாக வந்து குமரகுருபரருக்கு முத்துமணி மாலை அணிவித்த வரலாறு, சிவபெருமானின் திருவிளையாடல்கள் நடைபெற்ற வரலாறு ஆகியன மதுரைக்கு பெருமை சேர்ப்பன.

இலக்கியங்கள் பலவும் மதுரை தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. முத்தமிழையும் வளர்த்த மதுரை, பழந்தமிழரின் வாணிப நகரமாகவும் திகழ்ந்தது.

விருந்து, உபசரிப்பு, இனிய தமிழ், மல்லிகைப்பூ ஆகியவற்றுக்குப் பெயர்போன மதுரையில் சல்லிக்கட்டும் உலகப்பிரசித்தி பெற்றது.

***முடிவுரை :***



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

www.Padasalai.Net
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மதுரை நகரின் புகழை சொல்ல சொல்ல தமிழ் மணக்கும். கோவில்கள் பல அமைந்துள்ளதால் கோவில்நகரம் என்னும் புனைப்பெயரையும் உடைய மதுரை பழைமையான, பண்பாட்டு வளம் மிக்க, வீரஞ்செறிந்த ஊர் என்றால், அது மிகையாகாது.

**2. "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.**



**முன்னுரை**

ஒரு நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்பவை கிராமங்களே. சுத்தமான காற்று, குடிநீர், அமைதியான சுற்றுச்சூழல், மனதிற்கினிய வயல்கள் என கிராமங்களின் சிறப்புகள் சொல்லில் அடங்காது. அத்தகு கிராமங்கள் நகரங்களாக மாறி வரும் அவலத்தை நம் கண்முன்னே காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**கிராமத்துக் காட்சி :**

குளத்துக்கரை விநாயகரும், அரசமரமும், குளிர்ச்சி தரும் குளங்களும், காதிற்கினிய குயிலோசையும் என கோடி பணம் கொடுத்தாலும் கிடைக்காத மகிழ்ச்சி தருவன நம் கிராமங்கள்.

எந்தத் தொழில் அழிந்தாலும் உலக இயக்கம் பாதிக்காது. ஆனால் உயிர் கொடுக்கும் உழவுத்தொழில் அழிந்தால் உயிர்கள் இருக்காது. அத்தகு சிறப்புடைய கிராமங்கள் நகரங்களாக மாறுவது காலத்தின் கட்டாயம். நம் கிராமங்கள் அழிந்து வருவதை கண்கூடாகப் பார்க்கிறோம்.

**நகர மயமாதல் :**

நகரத்திற்குக் குடிபெயரும் கிராமத்தினர் பட்டியலில் இந்திய அளவில் மூன்றாவது இடத்தில் தமிழகம் உள்ளது. மொத்த மக்கள் தொகையில்14.5% பேர் கிராமங்களை விட்டு விட்டு நகரங்களுக்கு வந்துவிட்டனர். மொத்த மக்களுள் 48.40% பேர் நகரங்களில் வசிக்கின்றனர். மக்கள் தொகை குறைந்த கிராமங்கள் கலையிழந்து வருகின்றன.

பச்சைப்பசேல் என்றிருக்கும் வயல்வெளிகள், திண்ணை வீடுகள், சில்லென்று காற்று வீசும் மரத்தடி, கோவில், குளம் என மண்வாசனை மிக்க நம் பாரம்பரிய விளையாட்டுகள் என்று எல்லாவற்றையும் இழந்துவிட்டோம்.

இயற்கை வாழ்வை விட்டுவிட்டு இயந்திரமான வாழ்வை வாழ்கிறோம். அதன் காரணமாக நோய்கள் பெருகிவிடுகின்றன. மனநிலையும் பாதிக்கிறது. ஆள் ஆரவாரமற்ற கிராமங்களில் விளை நிலங்கள் எல்லாம் விலை நிலங்களாகின்றன. மாடு மேய்ந்த இடங்கள் மாடிவீடுகளாயின. அடுப்பு இருந்த இடங்கள் அடுக்குமாடிகளாகி விட்டன. அரசமரமும், குளத்தடியும் அற்று வெறுமையே எஞ்சுகிறது.

கண்ணுக்கினிய இயற்கைக் காட்சிகள் அற்று, வெறும் உயிரற்ற சாலைகளும், வானளாவ கட்டிடங்களும், வாகனங்களுமே நம் கண்களை நிறைக்கின்றன.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

கொஞ்சும் கிளி, கூவும் குயில், நம் காதுகளுக்கு இனிமை பயக்கும் பறவைகள், குருவிகளின் ஓசையை கேட்க முடியவில்லை. வாகனங்களின் இரைச்சலே கேட்கிறது.

இவ்வாறு கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன.

**3. சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன?**

**தேவாரம் - திருஞானசம்பந்தர்**



**முன்னுரை:**

திருவிழாக்கள் நம் பண்பாட்டின் அடையாளங்கள். விழாக்கள் இம்மண்ணின் மாண்பினை உலகிற்கு எடுத்துக்காட்டுவன. சீர்மிகு சென்னையில் மயிலாப்பூரில் பங்குனி உத்திரத்திருவிழா நடைபெற்ற விதத்தையும், கந்தக்கோட்டத்தைப் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**மயிலாப்பூர்**

- இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளை உடைய பெரிய ஊர் திருமயிலை எனும் மயிலாப்பூர் ஆகும்.
- அங்கு எழுச்சிமிக்க விழாக்கள் நடைபெறும்.
- மயிலையில் உள்ள கபாலீசுவரர் கோவிலில் நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழாவானது எழுச்சி தருவதாகவும், ஆரவாரம் மிக்கதாகவும் உள்ளது. அத்தகு திருவிழாவைக் காணாமல் போவது முறையாகாது என திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

- **கந்தக்கோட்டப் பகுதிகள் :**



- அறம் செய்வோர் நிறைந்திருக்கும் சென்னையில், கந்தக்கோட்டத்தில் எழுந்தருளியுள்ள கந்தவேளே.
- ஒருநெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமருடைய உறவு வேண்டும்.
- உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகருடைய உறவு கலக்காமல் இருக்க வேண்டும்.
- பொய் பேசாது இருக்க வேண்டும்: நினது புகழையே நான் பேச வேண்டும்.
- மதம் எனும் பேய் என்னைப் பிடிக்காமல் இருக்க வேண்டும்.
- அறிவும், இறையருளும், நோயற்ற வாழ்வும் வேண்டும்.
- இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக.

இவ்வாறு கந்தக்கோட்டப் பகுதியை இராமலிங்க அடிகளார் காட்சிப்படுத்தியுள்ளார்.

**முடிவுரை :**

இக்கட்டுரையில் மயிலாப்பூரில் நடைபெற்ற பங்குனி உத்திரத் திருவிழாவின் சிறப்பையும் கந்தக்கோட்டப் பகுதிகள் காட்சிப்படுத்தப்பட்டமையையும் கண்டோம்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இலக்கணம் - படிமம்

*1. படிமம் என்பதன் பொருள்*

***இ) காட்சி***

*2. " காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்" இக்கவிதையில் பயின்று வருவது*

***ஆ) வினைப்படிமம்.***

*3. கூற்று : உவமை, உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.*

*காரணம் : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.*

***அ) கூற்று சரி, காரணம் தவறு.***

*4. மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க.*

***இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்.***


*5. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?*

***மெய்ப்படிமம் வெளிப்படுகிறது.***

**தமிழில் மொழிபெயர்க்க :**

Periyar was not only a great social revolutionary; *(பெரியார் மிகச் சிறந்த சீர்திருத்தவாதி மட்டுமல்ல)* he was something more than that *(அதற்கும் மேலானவர்).* He is known as a great champion of the underpriviledge; *(சமூகத்தில் ஒடுக்கப்பட்டோரின் உயர்வுக்கு வழிகாட்டியவர்)* even in this sphere he was much more than that*(அவர் அதற்காகப் பெரிதும் பாடுபட்டார்).* His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, *(அவரின் செயல்திறனின் யுக்தி விசாலமானது. பிரச்சனைகளை நுணுகி ஆராயக்கூடியவர்).* understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it *(பிரச்சனைகளைப் புரிந்துகொண்டு அதற்கு நிரந்தரத் தீர்வு காணும்வரை அவர் ஓய்வதில்லை)* . Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene *(சாதி, மத வேறுபாடுகள் ஆழமாக வேரூன்றி இருந்தபோது, பெரியாரின் தலையீட்டிற்குப் பிறகே அவ்வேறுபாடுகள் களையப்பட்டன).*

**இலக்கிய நயம் பாராட்டல் :**



பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

**திரண்ட கருத்து :**

பிறப்பினால் மட்டுமே அனைவருக்கும் பெருமை வந்துவிடாது. நாம் செய்யும் நல்ல செயல்களே சிறப்பு தரும். பிறருக்கு நன்மை செய்பவரே உலகம் விரும்பும் உயர்குடியில் பிறந்தவர். பிறருக்குத் தீங்கு செய்பவரே, எவரும் நெருங்கித் தீண்டத் தகாதவர்.

**மையக்கருத்து :**

பிறப்பினால் எவருக்கும் பெருமை இல்லை. அவரவர் செய்யும் நன்மைகளே அவரை உயர்த்தும். உலகே கொண்டாடும்.

**எதுகை :**

அடி அல்லது சீர்தோறும் இரண்டாமெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

பாடலிலுள்ள எதுகைச் சொற்கள் :

பிறப்பு - சிறப்பு, நன்மை - தின்மை.

**மோனை :**

அடி அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.

பாடலிலுள்ள மோனைச் சொற்கள் :

பிறப்பு - பெருமை, சிறப்பு - செய்கை, நன்மை - நாடும், தின்மை - தீண்ட

**முரண் :**

பாடலில் முரண்பட்ட சொற்கள் அமையத் தொடுப்பது முரண் தொடை.

மேற்கண்ட பாடலில் நன்மை x தின்மை என்பது முரணாக அமைந்துள்ளது.

**இயைபு :**

பாடலின் ஈற்றுச்சீர்கள் ஒன்றிவரத் தொடுப்பது இயைபு. அப்பா - அப்பா, ஆர் - ஆர் என்பன இயைபாக வந்துள்ளன.

## மொழிப்பயிற்சி :

**பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

1. இப்ப எனக்குப் **புரிஞ்சி** போச்சு. நீயும் **புரிஞ்சிக்கோ.**

இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.

2. நிலத்தக் **கௌறனும்டா** அப்பதான் **வகுறு** நிறையும்.

நிலத்தைக் கிளற(உழ) வேண்டும். அப்பொழுதுதான் வயிறு நிறையும்.

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3. ***அண்ணைக்கு*** *அவனுக்குப் பணம் குடுத்து* ***ஒதவியிருக்க வேண்டியதுதான.***

*அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியதுதானே.*

4. ***வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை*** *அப்பா* ***இஸ்துகினு*** *போனாரு.*

*வீட்டின் அருகில் விளையாடிய குழந்தையை அப்பா இழுத்துக்கொண்டு போனார்.*

5. ***புள்ளைக்கு உடம்பு*** *சரியில்லை மூணு நாளா* ***சிரமப்படுது.***

*பிள்ளைக்கு உடல்நிலை சரியில்லை. மூன்று நாட்களாக சிரமப்படுகிறான்.*

6. ***ரவைக்கு சித்தப்பன*** *காவலுக்கு போவ* *சொல்.*

*இரவில் சிற்றப்பாவை காவலுக்கு போகச் சொல்.*

**கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக**

சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை | பத்துப்பாட்டு

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |
| | | |

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

**சங்க இலக்கியங்கள் :**

*பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியங்கள் பழங்கால மக்களின் வாழ்வியல் முறைகளை நமக்குக் காட்டும் கண்ணாடி போல்வன.*

**எட்டுத்தொகை நூல்கள் :**

*தொகை நூல்கள் எனப்படுவன பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் இயற்றப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். எட்டுத்தொகை நூல்களுள் அகம் சார்ந்தன ஐந்து, புறம் சார்ந்தன இரண்டு, அகப்புற நூல்கள் ஒன்று. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை ஆகியன அகத்திணை நூல்களாகும். புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியன புறத்திணை நூல்களாகும். பரிபாடல் அகமும் புறமும் கலந்த அகப்புற நூல் ஆகும்.*

**பத்துப்பாட்டு நூல்கள் :**



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பல்வேறு புலவர்கள் பாடிய நெடிய பாடல்களை உடையது பத்துப்பாட்டு. அவற்றுள் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய நான்கும் அகம் சார்ந்த பத்துப்பாட்டு நூல்கள் ஆகும். மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய ஆறும் பத்துப்பாட்டுள் புறம் சார்ந்த நூல்களாகும்.

## எண்ணங்களை எழுத்தாக்குக



உள்நாட்டுச் சந்தைக்குப் பொருள்களை எடுத்துச் செல்லும் சிறு வணிகர் கூட்டம். 17ஆம் நூற்றாண்டு, சிதம்பரம்.

நெற்றி வியர்வை
நிலத்தில் சிந்த
உழுது,விதைத்து நீரூற்றிக்
களைபறித்து, உரமூட்டி
விளைந்த பயிரை
விற்க நல்ல விலைக்குப்
போகுமென்று
கொண்டுசென்றோம்
தலைச்சுமையாய்
சந்தைக்கு.
வந்தவர் போனவரெல்லாம்
விலைபேசினரே தரத்தைக் குறைகூறி.
உழைத்ததினும் களைத்தோமே
வணிகரின் போரத்தால்.

## ஈற்றடி எழுதித் துளிர்ப்பாவை நிறைவு செய்க :

| | | | | |
|---|---|---|---|---|
| பூட்டிய வீட்டிலும் பூத்துச் சிரிக்கிறது முல்லை | 1. விழும் மரங்கள் அழியும் காடு ---------- | 2. அப்படியென்ன சொல்லியது காற்று குதித்தாடுகிறது மேகம் ---------- | 3. பூத்த மலரொன்று பறக்கிறது ------- | 4. வானம் அழுகிறது பூமி சிரிக்கிறது ---------- |
| | உலக அழிவு | புயல் | பட்டாம்பூச்சி | மழை |

**கீழ்க்காணும் பகுதியைப் படித்துப் பார்த்து, பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து தமிழ்ப்படுத்துக.**

சர்க்கார் கொடுக்கும் சம்பளம் ஜீவனத்துக்குப் போதுமா? அதற்குள் ஜீவனம் நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது. எல்லாம் மாயை; உள்ளூர நிற்கும் ஆத்மா மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு. தான் இந்தப் பிரபஞ்சத்தை ஆட்டிவைக்கும் சக்தியின் ஒரு அம்சம் என்று திடமாக நம்பியிருந்தார். ஏனென்றால், அவரது ஆத்ம விசாரத்தைச் சோதனை போட்டுப் பார்க்க இதுவரை தெய்வத்துக்கோ மனுஷனுக்கோ அவகாசம் கிடைத்ததில்லை. மனுஷ வர்க்கம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையை ஸ்புடம் போட்டுப் பார்ப்பது போல தவறுக்கு மேல் தவறு செய்துகொண்டிருந்தது.

சர்க்கார் - அரசு   ஜீவனம் - வாழ்க்கை
மாயை - இருப்பது போலத் தோன்றும்   ஆத்மா - உயிர்



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

*பிரபஞ்சம் - உலகம்*
*ஆத்ம விசாரத்தை - உயிர் பற்றிய கவலை*
*மனுஷனுக்கோ - மனிதனுக்கோ*
*மனுஷ வர்க்கம் - மனித இனம்*
*அம்சம் - வடிவம்*
*அவகாசம் - நேரம்*
*ஸ்புடம் - ஆராய்தல்*

***படிப்போம் பயன்படுத்துவோம் : (கலைச் சொற்கள்)***

Affidavit - ஆணையுறுதி ஆவணம்
Allegation - சாட்டுரை
Conviction - தண்டனை
Jurisdiction - அதிகார எல்லை
Plaintoff - வாதி

**இலக்கணக் குறிப்பு :**

*1. மலரடி - உவமைத்தொகை.*
*2. மறவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.*
*3. வளர்தலம் - வினைத்தொகை.*
*4. மாமயிலை - உரிச்சொற்றொடர்*
*5. பெருங்கடல் - பண்புத்தொகை*
*6. உழாஅது - செய்யுளிசை அளபெடை*
*7. வெரீஇய - சொல்லிசை அளபெடை*

**பகுபத உறுப்பிலக்கணம் :**

1. **நினைக்கின்ற = நினை + க் + கின்று + அ**
நினை - பகுதி, க் - சந்தி, கின்று - நிகழ்கால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.

2. **வைத்து = வை + த் + த் + உ**
வை - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

3. **பேசுவார் = பேசு + வ் + ஆர்**
பேசு - பகுதி, வ் - எதிர்கால இடைநிலை, ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

4. **கண்டான் = காண்(கண்) + ட் + ஆன்**
காண் - பகுதி (கண் எனக் குறுகியது விகாரம்), ட் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

5. **அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்**
அமர் - பகுதி, த் - சந்தி, ந்ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

6. **செய்த = செய் + த் + அ**
செய் - பகுதி, த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.


*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547*

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**7. சாற்றி = சாற்று + இ**

சாற்று - பகுதி, இ - வினையெச்ச விகுதி.

### புணர்ச்சி விதி :

**1. உள்ளொன்று = உள் + ஒன்று**

உள்ள் + ஒன்று தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் விதிப்படி ள் இரட்டித்தது.

உள்ளொன்று உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி ள் + ஒ = ளொ ஆயிற்று.

**2. ஒருமையுடன் = ஒருமை + உடன்**

ஒருமை + ய் + உடன் - இஈஐ வழி யவ்வும் விதிப்படி ய் உடம்படு மெய்யாக வந்தது.

ஒருமையுடன் - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி ய் + உ = யு ஆயிற்று.

**3. பூம்பாவாய் = பூ + பாவாய்**

பூம்பாவாய் - பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும் விதிப்படி ம் தோன்றியது.


**4. பெருங்கடல் = பெருமை + கடல்**

பெரு + கடல் - ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டது.

பெருங்கடல் - இனமிகல் விதிப்படி க் ற்கு இனமான ங் மிகுந்தது.

### மனப்பாடப் பாடல்

**தெய்வமணிமாலை**



ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

**- இராமலிங்க அடிகளார்**

**பாவகை : பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கூடுதல் வினாக்கள் :**

**1. இந்தோ சாரசனிக் கட்டடக்கலை என்றால் என்ன?**

முகலாய கட்டடக்கலை, பிரித்தானியக் கட்டடக்கலை, இந்திய பாரம்பரிய கட்டடக்கலை ஆகியவற்றைக் கலந்து உருவாக்கப்பட்டதே இந்தோ சாரசனிக் கட்டடக்கலை எனப்படும்.

**2. இந்தோ சாரசனிக் கட்டடக்கலைக்கு சான்றுகள் தருக.**

இப்பாணியில் கட்டப்பட்ட முதல் கட்டடம் சேப்பாக்கம் அரண்மனை. மத்தியத் தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டி தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதி மன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கம் ஆகியன . இந்தோ சாரசனிக் கட்டடக்கலைக்கு சான்றுகள் ஆகும்.

**3. கன்னிமாரா நூலகம் பற்றிக் கூறுக.**

1860இல் அருங்காட்சியகத்தின் அங்கமாகத் தொடங்கப்பட்ட இந்நூலகம் இந்தியாவின் முதல் நூலகமாகும்.

**4. அண்ணா நூற்றாண்டு நூலகம் பற்றிக் குறிப்பு வரைக.**

2010ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்நூலகம் ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய நூலகமாகும்.

**5. இராமலிங்க அடிகளார் பற்றிக் கூறுக.**

சமரச சன்மார்க்க நெறிகளை வகுத்தவர், பசிப்பிணி போக்கியவர். சிதம்பரம் அடுத்த மருதூரில் பிறந்தவர். சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர். திருவருட்பாவை இயற்றியவர். மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகியன இவர் இயற்றிய உரைநடை நூல்கள்.

**6. மயிலைப் பதிகத்தில் காணப்படும் விழாக்கள் யாவை?**

| | |
|---|---|
| ஐப்பசி | - ஓண விழாக்கள் |
| கார்த்திகை | - விளக்குத் திருவிழா |
| மார்கழி | - திருவாதிரை விழா |
| தை | - தைப்பூச விழா |
| மாசி | - கடலாட்டு விழா |
| பங்குனி | - பங்குனி உத்திரத் திருவிழா. |

**7. திருஞான சம்பந்தர் பாடிய பாடல்களைத் தொகுத்தவர் யார்?**

நம்பியாண்டார் நம்பி.

**8. திருஞான சம்பந்தர் பாடிய பாடல்கள் யாவை?**

பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளைப் பாடினார். அவை தேவாரம் என்று அழைக்கப்படுகின்றன.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**9. உப்பங்கழி என்பது யாது?**

*கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதிக்கு உப்பங்கழி என்று பெயர். கடல்நீரைப் பாத்திகளில் தேக்கி வெயிலில் ஆவியாக்கி உப்புப் படிவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்ட இடத்தை உப்பளம் என்கிறோம். ஆடை போல் படியும் உப்பை, சேகரித்து, பக்குவப்படுத்தி விற்பனைக்கு அனுப்புவர்.*

**10. அகநானூற்றின் முறை வைப்பு யாது?/அகநானூறு குறிப்பு வரைக.**

*அகநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. மூன்று பிரிவுகளை உடையது, முதல் 120 பாடல்கள் களிற்றியானை நிரை, 180 பாடல்கள் மணிமிடை பவளம், 100 பாடல்கள் நித்திலக்கோவை ஆகும்.*

**11. அம்மூவனார் பற்றிக் குறிப்பு வரைக.**

*அகப்பாடல்கள் மட்டுமே பாடிய புலவர். நெய்தல் திணைப் பாடல்கள் பாடுவதில் வல்லவர். எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குநுறூறு ஆகியவற்றில் இவரது பாடல்கள் இடம்பெற்றுள்ளன.*

**12. உப்பளம் என்றால் என்ன?**

*கடல்நீரைப் பாத்திகளில் தேக்கி வெயிலில் ஆவியாக்கி உப்புப் படிவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்ட இடத்தை உப்பளம் என்கிறோம். உப்பு விளையும் களத்திற்கு அளம் என்று பெயர். பிற நிலங்களில் கிடைக்கும் பொருள்களை உமணர்கள் உப்பிற்குப் பண்டமாற்றாகப் பெற்றனர்.*

**13. சாய்வு நாற்காலி புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் யார்?**

*தோப்பில் முகமது மீரான்.*

**14. படிமம் என்றால் என்ன?**

*படிமம் என்றால் காட்சி என்பது பொருள். விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி படிமம்.*

***



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## இயல் 6

**உரைநடை : திரைமொழி**
**செய்யுள் : சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்**
**மெய்ப்பாட்டியல் - தொல்காப்பியர்**
**துணைப்பாடம் : நடிகர் திலகம் - பாலச்சந்திரன் சுள்ளிக்காடு**
**இலக்கணம் : காப்பிய இலக்கணம்**
**அறவுரைப்பகுதி : திருக்குறள் - திருவள்ளுவர்**



**பலவுள் தெரிக.**

1. ஆர்ப்பரிக்கும் கடல்,
அதன் அடித்தளம்
மௌனம், மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது.
அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்
இ) நிறைகுடம் நீர்த்ததும்பல் இல்
ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

**விடை : ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது.**

2. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்.....
தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.
1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.
அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு
ஈ) 1 சரி, 2 சரி

**விடை : ஈ) 1 சரி, 2 சரி**

**3. பொருத்துக.**

அ. ஆமந்திரிகை - 1. பட்டத்துயானை
ஆ. அரசு உவா - 2. மூங்கில்
இ. கழஞ்சு - 3. இடக்கை வாத்தியம்
ஈ. கழை - 4. எடை அளவு

அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1 2 3 4 ஈ) 4 3 2 1

**விடை : அ) 3 1 4 2**

4. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு.

**விடை : ஈ) காட்சி மறைவு**

www.Padasalai.Net


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**குறுவினா :**

**1. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?**

நகை, அழுகை, இளிவரல்(சிறுமை), அச்சம் (பயம்), மருட்கை(வியப்பு), பெருமிதம், வெகுளி(சினம்), உவகை(மகிழ்ச்சி) ஆகியன எண்வகை மெய்ப்பாடுகள் ஆகும்.

**2. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.**

- ✓ பின்னணி இசை, திரைப்படத்தில் காட்சியடைப்புக்கு உயிரூட்டும்.
- ✓ கதைநாயகி சன்னல்வழியாக தலையை நீட்டி வெளியே எதையோ வெறித்துப் பார்க்கிறாள்.
- ✓ அவள் தெருவைப் பார்ப்பது மட்டுமே காட்டப்பட்டு, பின் மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுகிறது.
- ✓ அவளைப் பார்க்க வந்தவர், அவளது விருப்பத்திற்கு மாறாக புறப்பட்டுச் செல்கிறார் என்பது உணர்த்தப்பட்டது.

**3. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு தருக.**

**ஒருமுக எழினி :**

திரையானது மேடையின் ஒருபுறத்திலிருந்து மறுபுறம் செல்லுமாறு அமைக்கப்படுவது ஒருமுக எழினி எனப்படுகிறது.

**பொருமுக எழினி :**

திரையானது மேடையின் இருபுறத்திலிருந்தும் நடுவில் ஒன்றோடொன்று பொருந்துமாறு அமைக்கப்படுவது பொருமுக எழினி எனப்படுகிறது.

**4. "மூச்சு நின்று விட்டால்**
**பேச்சும்**
**அடங்கும் - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றைத் தருக.**

எரிவதைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும்.
பல்லு போனால், சொல்லு போச்சு.

**சிறுவினா :**

**1. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**



- நாட்டிய அரங்கு அமைப்பதற்கென்று இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன.
- நாட்டிய அரங்கு அனைவரும் கண்டுகளிக்கத்தக்க முறையில் அமைந்திருந்தது. பார்வையாளர் அனைவரும் பார்த்து இரசிப்பதற்கு ஏதுவாக, நாட்டிய அரங்கு உயரமாக அமைந்திருந்தது.
- தூண்களின் நிழல் மேடையின் மீது விழாத வகையில் விளக்குகள் அமைத்திருந்தனர்.
- அரங்கின் நீளம், அகலம், உயரம் ஆகியன எவ்வாறு அமைந்தால் சிறப்பாக இருக்குமோ, அங்ஙனமே அமைத்திருந்தனர்.

www.Padasalai.Net



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- நாட்டிய அரங்கில் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி எனப் பலவகைத் திரைகள் அமைத்து நாட்டியத்தின் அழகுக்கு அழகு சேர்த்தனர்.
- முத்துக்கள், மாலைகள், ஓவியங்களால் அரங்கை அழகுபடுத்தினர். நாட்டிய மேடை பொலிவும், புதுமையும் வாய்ந்ததாக இருந்தது.
- இவையே நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எமது கருத்தாகும்.

**2. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.**

**உவகை (மகிழ்ச்சி)**

கண்ணனைக் காண்பதற்காக அவருடைய நண்பன் குசேலன் துவாரகை வந்தார். அவர் வருகையைக் கேள்விப்பட்ட கண்ணன், தாயின் வருகை அறிந்த குழந்தையைப் போல மகிழ்ந்தார்.

**"தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போன்று............"**

என்ற சூழல், உவகை எனும் மெய்ப்பாடு தோன்றுவதற்கான சூழலாகும்.

**வெகுளி (கோபம்):**

**"உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம்.....**

**...ஒருங்கு அகப்படேஎன் ஆயின் (புறம்.72)**

தன்னை இளையவன் என்று எள்ளிய பகைவேந்தர் மன்னனை வென்று, அவர்களை சிதறி ஓடுமாறு செய்து, அவரது முரசையும் கைப்பற்றுவேன் என்று பாண்டியன் நெடுஞ்செழியன் வெகுண்டு உரைத்தான்.

இச்சூழல் வெகுளி எனும் மெய்ப்பாடு தோன்றுவதற்கான மெய்ப்பாடு ஆகும்.

**3. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.**

- காட்சி என்பது கதை நகர்வுக்கு உதவுவது.
- திரைப்படத்தில் காட்சிகள் சிறப்பாக அமைந்தால், வசனத்திற்குக்கூட இரண்டாம் இடம்தான்.
- காட்சிகளை அடுத்தடுத்து அமைப்பார்கள்.
- முதல் காட்சியில் தோழி ஒருத்தி கதாநாயகியிடம் தொடர்வண்டி பயணச்சீட்டைக் கொடுப்பாள்.
- அடுத்த காட்சியில் கதாநாயகி தொடர்வண்டியில் இருப்பாள்.
- எண் 7, வீரையா தெரு என்று ஒருவர் முகவரியை சொல்லிக்கொண்டிருக்கும்போதே, அந்த முகவரியில் காட்சி நிற்கும்.
- இவ்வாறு காட்சிகள் ஆற்றல் மிகுந்தனவாக உள்ளன.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.**

- ♣ மகிழ்ச்சியாக வாழ்வதற்காகத்தான் இவ்வுலகிற்கு வருகிறோம். ஆனால் அவ்வாறு இருக்க முடியாமல் செல்கிறோம்.
- ♣ உயிர் போனபிறகு, அவருடைய பேச்சும் நின்றுவிடுகிறது. அவர் இனி எதற்கும் உதவாமல் போகிறார்.
- ♣ நம் உள்ளமும், உடலும் ஆர்ப்பாட்டத்துடன் இருந்தாலும், நம் ஆழ்மனம் அமைதியாகவே இருக்கும். இதனை ஆர்ப்பரிக்கும் கடல் அலை, அதன் அடித்தளம் மௌனம் என்கிறார்.
- ♣ ஒரு உண்மையை மறைப்பதற்காக பல உண்மைகளைப் பேசுவர்.
- ♣ இது போன்று கண்முன் நிகழ்வதை சொற்சிமிழில் அடைக்கிறார் நகுலன்.

## நெடுவினா :

**1. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.**

**முன்னுரை**

கனவுக்குள் கனவு காண்பதே திரைப்படம். திரைப்படமானது பல ஆயிரம் பேரின் கடின உழைப்பால் உருவாகின்றது. ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலாகவும், பல்வேறு கலைகளின் சங்கமமாகவும் அமைகின்றது. அதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கூட்டு முயற்சி :**

- ⌖ கதை, திரைக்கதை, வசனம் எழுதி, இயக்கி, ஒளிப்பதிவு செய்து, இசை சேர்த்து பெரும் முதலீட்டில் உருவாகும் திட்டமிட்ட கூட்டுமுயற்சியே திரைப்படம்.
- ⌖ திரைப்படமானது பல ஆயிரக்கணக்கான பேரைக் காப்பாற்றும் தொழிலாகவும், கலைகளின் சங்கமமாகவும் திகழ்கிறது.



**ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழில்**

கதை, உரையாடல், பாடல், ஆடை அணிகலன்கள், உடை வடிவமைப்பாளர்கள், நடிகர், துணை நடிகர்கள், படத்தணிக்கையாளர்கள், பயிற்றுனர்கள், பாடலாசிரியர், இசையமைப்பாளர், ஒலி ஒளி அமைப்பாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், இயக்குநர், உதவியாளர்கள், ஓட்டுநர்கள் என ஆயிரக்கணக்கான பணியாளர்களின் அயராத உழைப்பால் திரைப்படம் உருவாகின்றது.

இரண்டு மணி நேரம் நம் கண்களுக்கும், செவிகளுக்கும், கருத்திற்கும் விருந்தளித்து நம்மை வேறு உலகிற்கு அழைத்துச்செல்வது திரைப்படம். கவலை மறந்து நம்மை சிரிக்கவும் சிந்திக்கவும் செய்யும் திரைப்படங்கள் ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் தேனீக்களைப் போன்று உழைப்பின் பயனாக விளைந்தவை.

**கலைகளின் சங்கமம் :**

திரைப்படம் என்பது வெறும் பொழுது போக்குக்கான ஊடகம் அன்று. பல கலைகளின் இணைப்பே திரைப்படம். நடனம், பாடல், இசை, சிற்பம், ஓவியம்,



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பேச்சு, சிலம்பம், கவிதை, தற்காப்பு, நடிப்பு, ஒப்பனை போன்ற பலவகைக் கலைகளின் சங்கமமே திரைப்படம்.

திரைப்படம் கதையில் தொடங்குகிறது. அங்கு தொடங்கி முழுதிரைப்படம் நிறைவடையும் வரை கலையானது மிளிர்ந்துகொண்டே இருக்கிறது. கதை, கதைக்கேற்ற திரைக்கதை, திரைக்கதைக்கேற்ற உரையாடல், நடிப்பு, பாடல், பாடலுக்கேற்ற நடனம், நடனத்திற்கு இசை, சண்டைக்காட்சி, பின்னணி காட்சி, வடிவமைப்பு, நடிகர், நடிகைக்கேற்ற உடை வடிவமைப்பு, ஒப்பனை என பல்வேறு இடங்களிலும் கலை நிரம்பி வழிகிறது.

**என் கருத்து :**

திரைப்படம் என்ற ஒன்று இல்லையேல் பெரும்பாலான கலைகள் இல்லாமல் போய் விட்டிருக்கும்.

இவ்வாறு திரைப்படம் ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலாகவும், கலைகளின் சங்கமமாகவும் அமைந்து மிளிர்கிறது.


**2. மகா நடிகரைக் கண்ட பாலச்சந்தரின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.**

**மகா நடிகரை(சிவாஜி கணேசன்) கண்ட பாலச்சந்தரின் மனவோட்டம்:**

**நடிகர் திலகம் - பாலச்சந்திரன் சுள்ளிக்காடு**

**முன்னுரை**

மகா நடிகரான செவாலியே சிவாஜி அவர்கள் வாங்கிய விருதுகள் பற்பல. கலைமாமணி, பத்மபூசன், பத்மஸ்ரீ, செவாலியர், தாதா சாகிப் பால்கே என நடிகர்களுக்கெல்லாம் திலகமாக அமைந்துள்ளார் சிவாஜி அவர்கள். அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.



**பாலசந்தரின் மனவோட்டம் :**

- ✧ சிவாஜியின் திரைப்படம் திரையரங்கில் வெளியிடப்படுகிறது என்ற விளம்பரத்தைச் செய்தவர் பாலச்சந்தர். அவர் தமது முப்பத்தெட்டாவது வயதில் சிவாஜியின் இல்லத்திற்கே சென்று அவரைக் காணும் வாய்ப்பு கிட்டியது.

**சிவாஜியின் வீடு :**

சிவாஜியின் வீட்டிற்குச் சென்ற அவருக்கு, அது வீடாகக் காட்சியளிக்கவில்லை அரண்மனையாகக் காட்சியளித்தது.

- ✧ வேலைப்பாடுகள் நிறைந்த வீட்டைக்கண்டு அதிசயித்தார். அங்கு இடம்பெற்றிருந்த அவரது புகைப்படத்தைக் கண்டு பிரம்மித்தார்.
- ✧ சத்ரபதி சிவாஜி, கட்டபொம்மன், இராசராச சோழன் எனப் பல கதாபாத்திரங்களில் புகைப்படத்தில் கம்பீரமாக வீற்றிருந்தார்.

**வீரநடைபோட்ட சிவாஜி :**

சிவாஜி இவர்களை வரவேற்க வந்தபோது சிங்கநடை போட்டு வந்தார். அக்காட்சியைக் கண்டபோது இராசராச சோழனின் வருகையைப் பார்த்த தமிழ்நாட்டுத் தெருப்பிள்ளைகளைப் போல தான் துள்ளி எழுந்ததாக பாலச்சந்தர் குறிப்பிடுகிறார்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***சிவாஜியை பாலச்சந்தர் இரசித்தல்:***

இராஜிவ் நாத்திடம் பேசிக்கொண்டிருந்த போது சிவாஜி அவர்களின் புருவ அசைவு, கண்கள், முகஅபிநயங்கள், உதடுகள், கைவிரல்கள், தாள, லய, அபிநயங்களையும் பார்த்து இரசிக்கிறார்.

***கலைக்கு சிவாஜியின் மரியாதை :***

- ✧ பாலச்சந்தரைப் பார்த்து கவிஞரே வணக்கம் என்று சிவாஜி கூறியபோது, காவியக் கலையிடம் அவருக்கிருந்த ஆழ்ந்த ஆதரவையும், மரியாதையையும் காண்பிப்பதாக அது விளங்கியது.
- ✧ சரித்திரத்திலும், புராணங்களிலும் வரும் வீரபுருஷர்களைப் போல தத்ரூபமாக நடித்து, அவர்களை சாமானியர் மற்றும் ஏழைகளின் இதயத்தில் குடிபுகவைத்தேன். இது சிவாஜி அவர்கள் இந்த நாட்டிற்கு அளித்த கலாச்சாரப் பங்களிப்பு. இதை ஒருபோதும் நாடு மறக்காது. இவ்வாறு சிவாஜி கூறியபோது அவர் முகத்தில் தெரிந்த ஆத்ம திருப்தியை வருணிக்க பாலச்சந்தருக்கு வார்த்தைகள் இல்லை.

***கட்டபொம்மனாக சிவாஜி :***

- ✧ சிவாஜி அவர்கள் கட்டபொம்மன் போன்று நடித்துக்காட்டியபோது சிங்கத்தின் கர்ஜனை போன்று இருந்தது. அதைக்கண்டு மிரண்டு போனார்கள். மேலும் அவரது நடிப்பில் தன்னை மறந்து மௌனமானார்கள்.
- ✧ இராவணன்போல பாலச்சந்திரன் நடித்துக் காட்டியபோது சிவாஜி கைதட்டிப் பாராட்டினார். அது அவருக்கு மிகவும் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

***முடிவுரை :***

மொத்தத்தில் சிவாஜியின் வீட்டிற்குச் சென்று, அவரைக் கண்டு, அவரோடு உறவாடியது பாலச்சந்தர் அவர்களுக்கு வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாக அமைந்து விட்டது.

***3. உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக. (பொதுவான வினா)***

***முன்னுரை :***

கலை, நம் மண்ணின் மரபு. நம்மை மகிழ்விப்பதும், பொழுதுபோக்குவதும் கலைகளே. மொத்தமுள்ள கலைகள் 64. அத்தகு கலையை நிகழ்த்தும் கலைஞர் ஒருவரை சந்தித்து உரையாடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.



***நாடக நடிகர் கபிலன் :***

எங்கள் ஊரான மதுரையில் பல நாடக சபைக் குழுக்கள் உள்ளன. அதில் நாடகங்களை எழுதி நடிக்கும் திரு.கபிலன் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவருடன் நான் உரையாடிய செய்திகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உங்கள் நாடகங்களின் நோக்கம் என்ன அல்லது அவற்றின் மூலம் என்ன உணர்த்த விரும்புகிறீர்கள் என்றேன்.

**நாடகங்களின் நோக்கம் :**

எங்கள் நாடக குழுக்களின் நோக்கம் மக்களை நல்வழிப்படுத்துவது ஆகும். நல்ல மக்கள் சமுதாயத்தை உருவாக்குவதே எங்களுடைய முக்கிய நோக்கம் என்று பதிலளித்தார். மேலும் சமுதாய விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இதிகாச புராணங்களை பாட்டாளி மக்களுக்கும் கொண்டு சேர்ப்பது ஆகியன நமது நாடகங்களின் முக்கிய நோக்கங்கள் ஆகும் என்றார்.

நல்ல தகவல்களை மக்களுக்கு கொண்டு சேர்க்கிறீர்கள். சரி மக்களுக்கு இவை சென்று சேர்கிறதா? என்றேன்.

மக்களை சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டுவனவாக நாடகங்களை அமைப்போம். அதனால் மக்கள் ஆர்வமுடன் கண்டுகளிப்பர் என்றார் அவர்.

**நாடகக் குழு :**

உங்கள் நாடகக்குழு பற்றிக் கூறுங்கள் என்றேன்.

எங்கள் நாடகக் குழுவில் 20ற்கும் மேற்பட்டோர் உள்ளனர். அவர்கள் நடிப்பில் தனிமுத்திரை பதிப்பவர்கள். நாங்கள் நாடகங்களில் நடிக்கும்போது அந்த கதாபாத்திரமாகவே மாறிவிடுவோம். மேலும் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம் என்றார் திரு.கபிலன்.

விழிப்புணர்வு நாடகங்கள் பற்றிக் கூறுங்கள் என்றேன்.

திருடன் திருந்துதல், அரசனின் கடமைகள், அதிகாரிகள் தம் தவற்றை உணர்ந்து விழிப்புடன் தம் கடமையை ஆற்றுதல், பொதுவாழ்வில் எங்ஙனம் ஏமாற்றுகிறார்கள் போன்ற செய்திகளை மக்களுக்கு எங்கள் நாடகங்கள் வாயிலாக உணர்த்துகிறோம் என்று அவர் கூறினார்.

**மக்களிடையே நாடகங்களுக்கு வரவேற்பு :**

நாடகங்களுக்கு இன்று மக்களிடையே வரவேற்பு எவ்வாறு உள்ளது என்றேன்.

எங்கள் நாடகத்தில் இராமாயணம், மகாபாரதம், கர்ணன், அரிச்சந்திரன் போன்ற பல்வேறு புராணங்களும், கதைகளும் இடம்பெறும். அதனால் மக்கள் விரும்பிப் பார்க்கின்றனர். கலைகளை வளர்ப்பது எங்கள் நோக்கமே அன்றி பணம் சம்பாதிப்பது அல்ல. சாமானிய மக்கள் எங்கள் நாடகங்களை விரும்பிப் பார்க்கின்றனர் என்றார்.

**முடிவுரை :**

கலைமாமணி விருது பெற்ற அந்த நாடகக் கலைஞரை பாராட்ட வார்த்தைகளே இல்லை. அழிந்துவரும் கலைகளுள் ஒன்றான நாடகக் கலைக்கு உயிரூட்டிவரும் அவரை வாழ்த்தி விடைபெற்றேன்.

**இலக்கணக்குறிப்பு :**

1. தொல்நெறி - பண்புத்தொகை.
2. ஆடலும் பாடலும் - எண்ணும்மை
3. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை - தொழிற்பெயர்கள்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பகுபத உறுப்பிலக்கணம்.**

1. தொழுதனர் = தொழு + த் + அன் + அர்

தொழு - பகுதி, த் - இறந்தகால இடைநிலை,
அன் - சாரியை, அர் - படர்க்கைப் பலர்பால் விகுதி.

2. நகை = நகு + ஐ.

நகு - பகுதி ( நகை ஆனது விகாரம்), ஐ - தொழிற்பெயர் விகுதி.

3. மருட்கை = மருள் + கை.

மருள் - பகுதி, கை - தொழிற்பெயர் விகுதி.

4. வெகுளி = வெகுள் + இ

வெகுள் - பகுதி, இ - தொழிற்பெயர் விகுதி.

**புணர்ச்சி விதி :**

1. தலைக்கோல் = தலை + கோல்

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி க் மிகுந்து தலைக்கோல் ஆயிற்று.

**இலக்கணம் - காப்பிய இலக்கணம்**

**1. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்**

ஆ) மயிலைநாதர்.

2. கூற்று 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

கூற்று 2 : ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று நீலகேசி.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு.

**3. சரியானதைப் பொருத்தித் தேர்க.**

அ) 4, 3, 2, 1

**4. தவறான இணையைத் தேர்க.**

அ) விருத்தப்பா - நாலடியார்.

**5. காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

காப்பியம், சிறும்காப்பியம், பெருங்காப்பியம் என்று இருவகைப்படும்.

**6. காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?**

பொருட்டொடர்நிலைச் செய்யுள், கதைச் செய்யுள், அகலக்கவி, தொடர்நிலைச் செய்யுள், விருத்தச் செய்யுள், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், மகாகாவியம் (எவையேனும் ஐந்து மட்டும்)



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

www.Padasalai.Net
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**7. காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.**

காதை, சருக்கம், இலம்பகம், படலம்.

8. பாவிகம் - விளக்குக

காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே பாவிகம் என்பர்.

காப்பியத்தின் பண்பாகப் பாவிகம் என்பதைத் தண்டியலங்காரம் குறிக்கின்றது.

மொழிப்பயிற்சி :

தமிழாக்கம் தருக.

Popular as the 'Cultural Capital' of India, Tamil Nadu is extremely well-known for its marvelous temples and other architectural gems (இந்தியாவின் கலாச்சார தலைநகரம் என்றழைக்கப்படும் தமிழ்நாட்டில் தலைசிறந்த கோவில்களும் மற்றும் கட்டடக்கலை இரத்தினங்களுக்கும் மிகவும் பிரசித்தி பெற்றது). The state rose to prominence primarily because of its well-known and outstanding Tangore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor (பண்டைய தஞ்சையில் சோழப் பேரரசால் செழித்து வளர்க்கப்பட்ட தஞ்சை ஓவியங்கள் அதன் பிரசித்தியாலும், முக்கியத்துவத்தாலும் சிறப்பு பெற்றது). In this traditional art form, the paintings showcase the embellished form of the sacred deities of the region (இந்தப் பாரம்பரியம் மிக்க கலையான ஓவியத்தில் உள்ள புனிதமான தெய்வத்திருவுருவங்களின் வழியே அதன் அழகு வெளிப்படுத்துகின்றன). The deities in the paintings are festooned with glass pieces, pearls, semi-precious stones, and gold and other vibrant colours (ஓவியங்களில் உள்ள தெய்வ வடிவங்கள் கண்ணாடித்துண்டுகள், முத்துக்கள், விலைமதிப்பற்ற கற்கள், தங்கம் மற்றும் கண்கவர் வண்ணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன). In this modern times, Tanjore paintings look up to human figures, animals, floral motifs and birds as muses (இந்த நவீன காலத்தில் தஞ்சை ஓவியங்களிலுள்ள மனித உருவங்கள், விலங்குகள், பூக்கள் மற்றும் பறவைகள் கலையாக பார்க்கப்படுகின்றன).

**கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குறிக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

1. கபிலன் திறமையானவர் என்று **குமரனுக்குத்** (குமரன்) தெரியும்.
2. நேற்று முதல் **அணையின்** (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
3. உங்களுக்கு **யாரால்** (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்?
4. முருகன் **வேகமாகச்** (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
5. நம்முடைய **தேவையின்** (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க :**

1. களம் - கலம்

போர்க்**களத்**தில் புண்பட்ட வீரர்களுக்கு **கலத்**தில் நீர் தரப்பட்டது.

(களம் - இடம், கலம் - பாத்திரம்)

2. வலம் - வளம்

ஆற்றின் **வலப்**புறத்தில் வயல்கள் நீர்**வளத்**தால் செழித்திருந்தன.

(வலம் - வலது பக்கம், வளம் - செழுமை)

3. புல் - புள்

**புல்**லைக் கொண்டு மரத்தில் **புள்** அழகிய கூட்டை உருவாக்கியது.

(புல் - தாவரம், புள் - பறவை)

4. உழை - உளை

உழவர்கள் **உளை**யில் இறங்கி **உழை**த்ததால் உணவு கிடைக்கிறது.

(உளை - சேறு, உழை - உழைப்பது)

5. கான் - காண்

அங்குள்ள அழகிய **கானைக் காண** நானும் என் நண்பனும் சென்றோம்.

(கான் - காடு, காண் - பார்த்தல்)

6. ஊண் - ஊன்

சத்துள்ள **ஊண்**கள் இருக்க, உடலைக் கெடுக்கும் **ஊன்** எதற்கு?

(ஊண் - உடல், ஊன் - உணவு)


7. தின்மை - திண்மை

உடல் **திண்மை**யாக இருந்தால் மட்டும் போதாது, பிறருக்குத் **தின்மை** செய்யாமல் இருக்க வேண்டும்.

(தின்மை - தீமை, திண்மை - வலிமை)

**இலக்கிய நயம் பாராட்டல்**

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?
- பாரதிதாசன்.



**திரண்ட கருத்து :**

மாலையில் கதிரவன் மறைவுக்குப் பின் இருளும் உலகம் கண்டேன். அவ்வாறே வானத்தையும், திசைகளையும் கண்டேன். கருமையான இருள் சிரிப்பது போலவும் ஒளிமுத்தைப் போல நிலவு இருக்கிறது. ஒளியையும், குளிரையும் அளித்து சிந்தாமல், சிதறாமல் ஒட்டுமொத்தமாக இயற்கை அன்னையின் அழகை வானில் வரைந்த ஓவியம் நிலவு.

**மையக் கருத்து:**

நிலவு இரவில் மிக அழகாகக் காட்சியளிக்கிறது. ஒளியையும், குளிரையும் அளித்து இயற்கை அன்னையின் முழுஅழகையும் நிலவானது அளிக்கிறது.

**எதுகை :**

அடி அல்லது சீர் தோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை ஆகும்.

பாடலிலுள்ள எதுகைச் சொற்கள்:

அந்தி - பிந்தி - சிந்தாமல் - இந்தா

**மோனை :**

அடி அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.

பாடலிலுள்ள மோனைச் சொற்கள்:

**அ**ந்தி - **அ**வ்வாறே, **பி**ந்தி - **பெ**ருஞ்சிறப்பின், **சி**ந்தாமல் - **சே**கரித்து,

**முரண் :**

பாடலில் முரண்பட்ட சொற்கள் அமையத் தொடுப்பது முரண் ஆகும்.

பாடலிலுள்ள முரண் சொல் : இருள் x ஒளி

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



கண்ணாடி அது காட்டுமே
உன் முகத்தை முன்னாடி.
பெண்ணே நீயே
இந்நாட்டின் கண்ணே.
மருத்துவர் முத்துலட்சுமி,
ஆசிரியர் இராதாகிருஷ்ணன்,
அறிவியலறிஞர் அப்துல் கலாம்,
விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா,
விளையாட்டு வீராங்கனை சாய்னா நேவால்
அனைத்தும் நீயே.
உனக்குள்ளே அத்தனை
ஆக்க சக்திகளும்.



www.Padasalai.Net
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கதையைத் தொடர்ந்து நிறைவு செய்க :**

வேப்பமரத்தால் ஆன மரப்பாச்சி பொம்மை ஒன்று என் வீட்டில் நெடுங்காலமாக இருந்தது. மிகுந்த அன்போடு அதற்கு என் பெயரை வைத்திருந்தேன். எத்தனையோ வாசனைகளை அதன்மீது பூசினேன். ஆனாலும் அந்தக் கசப்பின் வாசம் போகவில்லை. இரவில் அதன் மெல்லிய விம்மல் ஓசை கேட்கும்...

'..அப்போது நான் அதைத் தாலாட்டுப்பாடி உறங்கவைப்பேன். நான் கோபப்படும்போது எனக்கு அறிவுரை கூறும். நான் அழுகையில் ஆறுதல் கூறித் தேற்றும். மகிழ்ச்சியடையும் போது என்னுடன் மகிழும். தனிமையில் நான் இருக்கையில் உற்ற துணையாய் அந்த மரப்பாச்சி பொம்மை அமையும். என் தோழியாய், அன்னையாய், பாட்டியாய் அமைந்தது அப்பொம்மை.

ஒரு பொம்மை என்னை இந்த அளவிற்கு ஈர்த்ததற்கான காரணம் சிந்தித்தேன். ஒருமுறை அம்மாவிடம் இதுபற்றி வினவினேன் (கேட்டேன்). என் சிறுவயது கதையை சொல்லத் தொடங்கினாள். அப்போது என் வயது மூன்று. அருகிலிருக்கும் கிராமத்தில் நடந்த தேர்த்திருவிழாவிற்கு என்னையும் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அப்போது அங்குள்ள பொம்மைகளை வாங்கித் தரவேண்டி அடம்பிடித்திருக்கிறேன். அப்பாவிடம் பணம் இல்லாததால் வாங்கித்தர முடியவில்லை. அதை என்னிடம் எடுத்துக்கூறியும் நான் அடங்கவில்லை. வீட்டிற்கு வந்தும் அழுதுகொண்டே இருந்திருக்கிறேன். தவித்துப்போன என் அப்பா, எனக்கு வீட்டிலிருந்த வேப்பமரத்தின் கட்டையில் அந்த மரப்பாச்சி பொம்மையை தானே செய்து தந்திருக்கிறார். அன்றுமுதல் அது எனக்குள் ஒன்றாகிவிட்டது. பொம்மையின் வரலாறு அறிந்த பின், அப்பாவின் நினைவாக இருப்பது அது மட்டுமே என்பதை அறிந்துகொண்டேன். இப்பொழுதெல்லாம் அதன் வாசனை எனக்குத் தெரிவதில்லை. அப்பாவின் வாசம் மட்டுமே வீசுகிறது,

**கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.**

***எ.கா .***

வானம், பற, நிலவு, தொடு - வானத்தில் பறப்போம், பறந்து நிலவைத் தொடுவோம்.

***1. சருகு, விழு, மண், அலை -***

புயல் காரணமாக சருகுகள் விழுந்தன, மண் பறந்தது, பயிர்கள் அலைஅலையாக அசைந்தன.

**2. விண்மீன், ஒளிர், எரி, விழு :**

இரவில் விண்மீன்கள் ஒளிர்ந்தன. அப்போது எரிகல் ஒன்று விழுந்தது,

**3. குதிரை, வேகம், ஓடு, தாவு :**

குதிரை மிகவும் வேகமாக தாவித்தாவி ஓடும்.

***4. குழந்தை, நட, தளிர்நடை, விழு :***

குழந்தைகள் தளிர்நடை நடக்கும்போது மிகவும் அழகாக இருக்கும். தவறி விழும்போது மனம் வலிக்கும்.

**5. திரை, காண், கைதட்டல், மக்கள் :**

திரைப்படம் காண்கையில், மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com


படிப்போம் பயன்படுத்துவோம் (கலைச்சொல் அறிவோம்)

Artist - கவின் கலைஞர்
Animation - இயங்கு படம்
Newsreel - செய்திப்படம்
Multiplex Complex - ஒருங்கிணைந்த திரையரங்க வளாகம்
Cinematography - ஒளிப்பதிவு
Sound Effect - ஒலிவிளைவு

## திருக்குறள்

*1. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.*

***ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு***
***அச்சாணி அன்னார் உடைத்து.***



***2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.***

*மனமோ மாட்டுவண்டி*
*பாதையொழுங்கில் போக நினைக்கும் மாடு*
*இப்படி இருந்தால் எப்படி நகரும்*
*வாழ்க்கைச் சக்கரம்*
*ஊர் போகும் பாதையில்*
*சக்கரம் உருண்டால்*
*அதுவே அறிவு; அதுவே தெளிவு.*

***அ) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு***
***அவ்வது துறைவது அறிவு.***



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3. நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

*சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்*

*மாரிபோல் மாண்ட பயத்ததாம் – மாரி*

*வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!*

*சிறந்தக்கால் சீரியார் நட்பு.*

**இ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை: தீயினத்தின் அல்லல் படுப்பதும் இல்.**

4. அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்? **ஈ) தீயினத்தார்**

5. திண்ணியர் என்பதன் பொருள் **ஆ) மன உறுதியுடையவர்.**

6. ஆராய்ந்து சொல்கிறவர் **இ) தூதுவர்.**

7. பொருத்துக.

அ) பாம்போடு உடன் உறைந்தற்று - 1. தீக்காய்வார்

ஆ) செத்தார் - 2. சீர் அழிக்கும் சூது

இ) வறுமை தருவது - 3. கள் உண்பவர்

ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவர் - 4. உடம்பாடு இலாதவர்

**ஈ) 4 3 2 1**

8. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்.

**அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்ளக் கூடியவர்.**

9. எளியது, அரியது என்பன **ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது.**

**குறுவினா :**

**1. மனத்தை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?**

மனத்தை அதன் போக்கில் செல்லவிட்டால் தீமையே விளையும். எனவே மனத்தை அதன் போக்கில் செல்ல விடக்கூடாது.

**2. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் தொடர்பு - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

பெரிய தேருக்கு சிறு அச்சாணியே இன்றியமையாதது. அதுபோன்று சிறியவர்களிடம் பெரிய ஆற்றல் இருக்கும். எனவே உருவத்தைக் கொண்டு யாரையும் இகழக்கூடாது.

**3. மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?**

மன உறுதியோடு இருந்தால் எண்ணியவற்றை எண்ணியவாறே செய்து முடிக்கலாம்.

**4. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?**

கள்ளுண்பவர் நஞ்சுண்பவருக்குச் சமமானவர் என திருவள்ளுவர் இடித்துரைக்கிறார்.

**5. அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத்தகாதன யாவை?**

தீக்காய்பவரைப் போல அரசரோடு விலகாமலும், மிக நெருக்கமாகவும் இருத்தல் கூடாது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**6. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?**

அறிவு அழிவு வராமல் காக்கும் அரண். மேலும் பகைவராலும் அழிக்க முடியாத அரண் ஆகும்.

**7. அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?**

உறவுபோல் நடித்து உள்ளுக்குள் பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

வாளைப் போல வெளிப்படையாக துன்பம் தரும் பகைவரைக் கண்டு அஞ்சத் தேவையில்லை.

**8. வறுமையும் சிறுமையும் தருவது யாது?**

ஒருவருக்கு துன்பம் பலவற்றைச் செய்து அவரது புகழையும் கெடுக்கின்ற சூதானது வறுமையும், சிறுமையும் தரும்.

**9. நீங்கள் படித்ததில் பிடித்த குறளை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்.**

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

படிக்க வேண்டியவற்றை கசடறக் கற்க வேண்டும். கற்ற பின் அதற்குத் தகுந்தாற்போல நடந்து கொள்ள வேண்டும்.

**10. உலகத்தில் சிறந்த துணையாகவும் பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

நல்ல குணமுடையோர் சிறந்த துணையாவர். தீய குணமுடையோர் கொடிய பகைவர் ஆவார்.

**11. இலக்கணக் குறிப்பு தருக.**

1. ஒரீஇ - சொல்லிசை அளபெடை
2. படுப்பதூஉம் - இன்னிசை அளபெடை
3. சொல்லுதல் - தொழிற்பெயர்.

**12. கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று - பொருள் தருக.**

நீரில் மூழ்கிய ஒருவனை தீப்பந்தம் கொண்டு தேடுவது இயலாத செயல். அதுபோல கள்ளுண்பவனை திருத்துவது இயலாத செயலாகும்.

**13. பெருந்தேர் - புணர்ச்சி விதி தருக.**

பெருமை + தேர்
பெரு + தேர் - ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டது.
பெருந்தேர் - இனமிகல் விதிப்படி வல்லினத்திற்கு(த்) இனமான மெல்லினம்(ந்) மிகுந்து பெருந்தேர் என ஆயிற்று.

**சிறுவினா :**

**1. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**அணி :**

மேற்கண்ட திருக்குறளில் பயின்று வரும் அணி, தொழில் உவமை அணி.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**அணி விளக்கம் :**

உவமை ஒரு பொருளாகவும், உவமேயம் ஒரு பொருளாகவும் நிற்க இடையில் போல எனும் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி. அவ்வுவமை அணி தொழிலின் பொருட்டு அமைவது தொழில் உவமை அணி ஆகும்.

**குறள் விளக்கம் :**

தீக்காய்பவர் தீயை விட்டு அகலாமலும், நெருங்காமலும் தீக்காய்வர். அதைப் போல அரசரை சார்ந்து இருப்பவர் மிகவும் அருகில் செல்லாமலும், விலகி விடாமலும் இருத்தல் வேண்டும்.

**பொருத்தம் :**

அரசரைச் சார்ந்திருப்பவர் தீக்காய்பவரைப் போல அணுகியும், விலகாமலும் இருக்க வேண்டும். இங்கு தீக்காய்பவரின் செயலானது அரசனுடன் இருப்பவருக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளதால் இது தொழில் உவமை ஆகும்.

**2. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?**

- அறிவானது நம்மை அழிவிலிருந்து காக்கும் கருவியாகும். பகைவராலும் அழிக்க இயலாத அரணாகத் திகழும்.
- மனதை அதன் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்வழியில் செலுத்துவது அறிவாகும்.
- யார் எதைக் கூறினாலும், அதன் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.
- உலகம் செல்லும் வழியிலேயே நாமும் இணைந்து செல்வதே அறிவாகும்.
- பின்பு வரப்போகும் துன்பத்தை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் அறிவுடையவருக்கு, அவர் நடுங்கும்படியான துன்பம் இல்லை.

**3. எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**

துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

**அணி விளக்கம் : எடுத்துக்காட்டு உவமையணி**

உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு பொருளாகவும் நிற்க, இடையில் உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணி எனப்படும்.

**குறள் விளக்கம் :**

உறங்குபவரும் இறந்தவரும் வேறு அல்லர். இருவரும் ஒன்றே. அதைப் போல கள்ளுண்பவர், நஞ்சுண்பவருக்குச் சமமானவர்.

**பொருத்தம் :**

உறங்குபவர், இறந்தவருக்குச் சமம். கள்ளுண்பவர் நஞ்சுண்டவருக்குச் சமம் என்று கூறி, இடையில் போல எனும் உவம உருபு மறைந்து வந்ததால் இத்திருக்குறள் எடுத்துக்காட்டு உவமையணிக்குச் சான்றாயிற்று.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.**

- நல்ல செயல்பாட்டிற்கு மனஉறுதி தேவை.
- ஒரு செயலைச் செய்து முடிக்கலாம் என்று சொல்வது எளிது. அவ்வாறு சொன்னதை செய்து முடிப்பது அரிது.
- மனவுறுதியுடன் செயல்பட்டால் நினைத்தவற்றை நினைத்தவாறே செய்து முடிப்பர்.
- ஒருவரின் தோற்றத்தைக் கண்டு இகழக் கூடாது. பெரிய தேருக்கு சிறு அச்சாணி எவ்வளவு முக்கியமோ, அதைப்போல உருவத்தில் சிறியவராயினும் அவரது செயல் முக்கியமானது.

**5. சிற்றினம் சேராமையும், நல்லினத்தின் துணையுமாக வள்ளுவர் உரைப்பன பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.**

**சிற்றினம் சேராமை :**

தீய சிந்தனை உடையவரோடு தொடர்பு வைத்திருப்பதை விட நமக்குத் துன்பம் தரும் வேறு பகையும் தேவை இல்லை. அப்படிப் பட்ட தீயவரோடு நாம் சேரக்கூடாது.

**நல்லினத்தின் துணை :**

- மக்களுக்கு இயற்கையான அறிவானது மனத்தால் ஏற்படும். உலகத்தாரால் மதிக்கப்படும் அவரது நற்செயல்கள் அவர் சேர்ந்த நல்ல இனத்தால் உண்டாகும்.
- நற்சிந்தனை உடையரின் துணையை விடச் சிறந்த துணை வேறு இல்லை.
- நல்லவரோடு பழகினால் நமக்கு நன்மை கிடைக்கும். தீயவரோடு பழகினால் தீமையே விளையும்.

**6. வாளையும் பாம்பையும் எவ்வகைப் பகைக்கு சான்றாக வள்ளுவர் கூறுகிறார்?**

**வாளைப் போன்றவர் பகை :**

- வாளைப் போல வெளிப்படையாக துன்பம் தரும் பகைவரைக் கண்டு அஞ்சத் தேவையில்லை.
- உறவுபோல் நடித்து உள்ளுக்குள் பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

**பாம்பு போன்றவர் உறவு :**

மனதளவில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கையானது, ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றது.

**7. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க.**

**சூதினால் வரும் கேடு :**

- ஒருவருக்கு பலவகையான துன்பங்களைத் தந்து, புகழைக் கெடுத்து, வறுமையைக் கொடுப்பது சூது.

- சூதாடுவதில் காலத்தைக் கழித்தால், அது அவருடைய பரம்பரைச் செல்வத்தையும், அவரது இயல்பான நற்பண்பையும் கெடுத்துவிடும்.

**கள்ளினால் வரும் கேடு :**

- உறங்குபவர் இறந்தவருக்குச் சமமானவர். அவ்வாறே கள்ளுண்பவர் நஞ்சுண்டவருக்குச் சமமானவர்.
- கள்ளுண்டு மயங்கியவருக்கு நல்லன சொல்லித் திருத்த முயற்சி செய்வது, நீரில் மூழ்கிய ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது. அதாவது கள்ளுண்பவரைத் திருத்த இயலாது.

**8. சொற்பொருள் பின்வரு நிலையணி :**

**அணி விளக்கம் :**

செய்யுளில் முன்னர் வந்த சொல்லே வந்து, தந்த பொருளையே (ஒரே பொருளை ) தருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**சான்று (i):**

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

**விளக்கம் :**

யார் எதைக்கூறினாலும் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடாது: அதிலுள்ள உண்மையை உணர்ந்துகொள்வதே அறிவுடைய செயலாகும்.

**பொருத்தம் :**

பாடலில் யார்யார் என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து எவர் எனும் ஒரே பொருளைத் தருவதால் சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

**சான்று 2 :**

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

**விளக்கம் :**

ஒரு செயலைச் செய்ய நினைத்தவர் அச்செயலில் மனஉறுதியுடன் இருந்தால் நினைத்தவை நினைத்தவாறே முடிப்பர்.

**பொருத்தம் :**

பாடலில் எண்ணி எண்ணி எனும் சொல் இருமுறை வந்து நினைத்தது எனும் ஒரே பொருளைத் தருவதால் சொற்பொருள் பின்வரு நிலையணிக்கு சான்றாயிற்று.

**9. உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**அணி விளக்கம் :**

உவமை ஒரு பொருளாகவும், உவமேயம் ஒரு பொருளாகவும் நிற்க, இடையில் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

**சான்று :**

உடம்பாடு இலாதார் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**குறளின் பொருள் :**

மனதில் உடன்பாடு இல்லாதவருடன் வாழ்வது, ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வதைப் போன்றது.

**பொருத்தம் :**

உடம்பாடு இலாதாருடன் வாழ்வது, பாம்புடன் சிறிய வாழ்வதைப் போல என்று கூறி, அற்று எனும் உவம உருபு வெளிப்பட வருவதால் உவமையணி ஆகும்.

**நெடுவினா :**

***1. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று விளக்குக.***

***முன்னுரை :***

வையம் அளந்த திருக்குறளில் அறிவின் மேன்மையைத் திருவள்ளுவர் விளக்கியுள்ளார். அறிவின் சிறப்பையும், அதன் மேன்மையையும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

***அறிவே அரண் :***

அறிவானது நம்மை அழிவிலிருந்து காக்கும் கருவியாகும். பகைவராலும் அழிக்க இயலாத அரணாகத் திகழும்.

**தீமையினின்று காக்கும் அறிவு :**

மனதை அதன் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்வழியில் செலுத்துவது அறிவாகும்.

**மெய்ப்பொருள் காண்க :**

யார் எதைக் கூறினாலும், அதன் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

**உலகம் செல்லும் வழியில் செல்க :**

உலகம் செல்லும் வழியிலேயே நாமும் இணைந்து செல்வதே அறிவாகும்.

***அறிவுடையாருக்குத் துன்பம் இல்லை :***

பின்பு வரப்போகும் துன்பத்தை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் அறிவுடையவருக்கு, அவர் நடுங்கும்படியான துன்பம் இல்லை.

***முடிவுரை :***

அறிவின் தனித்தன்மைகளை குறள்வழிக் கற்றோம். அறிவோடு செயல்படுவோம்: துன்பமின்றி இன்பமாக வாழ்வோம். அறிவே ஆற்றல் தரும்.

**2. திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.**

***முன்னுரை :***

வாழ்க்கையில் ஒரு மனிதன் பின்பற்ற வேண்டிய எல்லாக் கருத்துக்களையும் தனக்குள் கொண்டு, அறிவுப் புதையலாகக் காட்சியளிப்பது வள்ளுவரின் வாய்மொழியாம் திருக்குறள். திருக்குறளின் மாண்பினை அறிந்தே ஜி.யு.போப் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதில் கூறப்பட்டுள்ள சில வாழ்வியல் கருத்துக்களை இனிக் காண்போம்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**வாழ்வு :**

மனித வாழ்வு என்பது மகத்துவமானது. அவ்வாழ்வில் ஒருவன் பின்பற்ற வேண்டியன, தவிர்க்க வேண்டியன என அனைத்துவிதமான கருத்துக்களையும் கூறி உலகுக்கே பொதுமறையாக விளங்குவது நம் திருக்குறள்.

**அறிவுடைமை :**

அறிவின் முக்கியத்துவத்தை அறிவுடைமை அதிகாரத்தின் மூலம் நமக்கு வெளிக்காட்டியுள்ளார் வள்ளுவர்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

யார் எதைக் கூறினாலும், அதை அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதைச் சுட்டுகிறார்.

**சிற்றினம் சேராமை :**

தீயவரோடு சேர்ந்தால் நமக்குத் தீமைகளே உண்டாகும். அதனால் நல்லவர்களோடு சேர வேண்டும் என்பதை சிற்றினம் சேராமை எனும் அதிகாரத்தின் வாயிலாக நிலைநாட்டுகிறார் வள்ளுவர்.

**வினைத்திட்பம் :**

ஒரு செயலை நல்ல முறையில் செய்து முடிக்க வேண்டுமென்றால் அதற்கு நம் மனவலிமை அவசியம். மனவலிமையின் மகத்துவத்தை வினைத்திட்பம் எனும் அதிகாரத்தில் நமக்குக் காட்டுகிறார்.

**தூது :**

அரசனிடம் தூதாகச் செல்பவன் அறிய வேண்டியவற்றையும் தூதின் சிறப்பையும் தூது அதிகாரத்தில் விளக்கிக் கூறியுள்ளார்.

**மன்னரைச் சேர்ந்து ஒழுகல் :**

மன்னருடன் பழகும்போது நடந்து கொள்ளும் விதத்தை நமக்கு தெளிவாக இவ்வதிகாரத்தின் வழி வழிகாட்டியுள்ளார்.

**உட்பகை :**

பகைவரை அடையாளம் காணும் முறை, வெளிப்படையாக பகை கொள்பவரை விட உள்ளுக்குள் பகை கொள்பவரே ஆபத்தானவர் என்று கூறி, கவனமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**கள், சூதினால் கேடு :**

கள் அருந்துவதும், சூதாடுவதும் துன்பத்தையே விளைவிக்கும் என்று அவற்றின் தீமைகளை விளக்கி, அதிலிருந்து காத்துக் கொள்ளவும் வலியுறுத்துகிறார்.

**முடிவுரை :**

திருவள்ளுவர் அவர்கள் ஒரு மனிதனை தெய்வமாக்கும் முயற்சியில் தம்மால் இயன்ற, காலத்தால் அழியாத நற்கருத்துக்களை நமக்கு அளித்துள்ளார். "வள்ளுவர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்பதற்கு ஏற்ப திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியமாகத் திகழ்கிறது.

**மனப்பாடக் குறட்பாக்கள் :**

1. அறிவற்றம் காக்கும் கருவி செருவார்க்கும்
   உள்அழிக்கல் ஆகா அரண்.
2. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
   மெய்ப்பொருள் காண்பது அறிவு.
3. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
   அதிர வருவதோர் நோய்.
4. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை: தீயினத்தின்
   அல்லல் படுப்பதூஉம் இல்.
5. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
   மற்றைய எல்லாம் பிற.
6. சொல்லுதல் யார்க்கும் எளிய: அரியவாம்
   சொல்லிய வண்ணம் செயல்.
7. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந் தேர்க்கு
   அச்சாணி அன்னார் உடைத்து.
8. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
   எண்ணி உரைப்பான் தலை.
9. வாள்போல் பகைவரை அஞ்சற்க: அஞ்சுக
   கேள்போல பகைவர் தொடர்பு.
10. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
    கழகத்துக் காலை புகின்.

**கூடுதல் வினாக்கள் :**

**1. நகுலன் இயற்றிய கவிதைகள் யாவை?**

மூன்று, ஐந்து, கண்ணாடியாகும் கண்கள், நாய்கள், வாக்குமூலம், சுருதி ஆகியன நகுலன் இயற்றிய கவிதை நூல்கள் ஆகும்.

**2. சிலப்பதிகாரம் பற்றிக் குறிப்பு வரைக./ சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள் பற்றிக் கட்டுரைக்க./ சிலப்பதிகாரத்தின் தனிப்பெருஞ்சிறப்புகளைக் கட்டுரைக்க./ இளங்கோ கண்ட புரட்சிக் காப்பியம் சிலப்பதிகாரம் என்பதை சான்றுடன் நிறுவுக.**

- தமிழரின் கலை, நாகரிகம், பண்பாடு முதலானவற்றை உள்ளடக்கிய கருவூலமாகச் சிலப்பதிகாரம் திகழ்கிறது.
- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.
- குடிமக்களை காப்பியத்தின் தலைவர்களாக பாடியிருப்பதால் குடிமக்கள் காப்பியம் என அழைக்கப்படுகிறது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- மூவேந்தர்களையும் சிறப்புப்படுத்தி, புகார், மதுரை, வஞ்சிக் காண்டங்கள் இயற்றியிருப்பதால் மூவேந்தர் காப்பியம் என வழங்கப்படுகிறது.
- பெண்ணை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு பாடப்பட்ட முதல் காப்பியம். மேலும் அரசனை எதிர்த்த வழக்காடிய புரட்சி நடந்தேறியதால் புரட்சிக் காப்பியம் எனப் பெயர்பெற்றது.
- இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று வடிவத்திலும் அமைந்திருப்பதால் முத்தமிழ்க் காப்பியம் என்று அழைக்கப்படுகிறது.
- செய்யுள், இடையிடையே உரைநடை என அமைந்திருப்பதால் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று வழங்கப்படுகிறது.
- பொதுமைக் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம் என்பன சிலப்பதிகாரத்திற்குரிய வேறு பெயர்கள்.

***3. இரட்டைக் காப்பியங்கள் யாவை? அவ்வாறு அழைக்கப்படக் காரணம் என்ன?***

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியம் என்று அழைக்கப்படுகின்றன. அவை கதைத் தொடர்பால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன.

4. நடிப்புலகின் சக்கரவர்த்தி என்றழைக்கப்படுபவர் யார்? சிவாஜி கணேசன்.

5. என்னைப்போல் சிவாஜி நடிப்பார். ஆனால் என்னால்தான் சிவாஜிபோல் நடிக்க முடியாது என்று கூறியவர் யார்? மார்லன் பிராண்டோ (ஹாலிவுட் நடிகர்)

6. செவாலியர் விருது பெற்ற நடிகர் யார்? - சிவாஜி கணேசன்.

7. தாதா சாகெப் பால்கே விருது பெற்ற நடிகர் யார்? - சிவாஜி கணேசன்.

8. தமிழில் கிடைக்கப் பெற்ற முதல் இலக்கண நூல் எது? தொல்காப்பியம்.

9. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் யார்? இளம்பூரணர்.

10. படப்பிடிப்புக் கருவியைக் கண்டுபிடித்தவர் யார்? தாமஸ் ஆல்வா எடிசன்.

11. கவிஞர் நகுலனின் இயற்பெயர் யாது? டி.கே. துரைசாமி.

***12. பொருள் தருக.***

கழை - மூங்கில், நித்திலம் - முத்து, ஆமந்திரிகை - இடக்கை வாத்தியம்
அரசு உவா - பட்டத்து யானை, கழஞ்சு - எடை அளவு.

13. தலைக்கோலரிவை என்ற பட்டத்தைப் பெற்றவள் யார்? மாதவி

14. நன்மை பெருகவும், தீமை நீங்கவும் வேண்டி பாடப்படும் தெய்வப் பாடல்கள் - ஓரொற்றுவாரம், ஈரொற்றுவாரம்.

15. பாவிகம் என்பது காப்பியப் பண்பே.

16. பெருங்காப்பியத்திற்குரிய நான்குவகை உறுதிப் பொருள்களும் பிற உறுப்புகளும் முழுமையாக அமையப்பெற்று விளங்கும் காப்பியம் சீவகசிந்தாமணி.

17. காப்பியம் என்பதைப் பிரிக்கும் முறை காப்பு + இயம்.




திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## இயல் 7



**உரைநடை : இலக்கியத்தில் மேலாண்மை - வெ. இறையன்பு இ.ஆ.ப.**
**செய்யுள் : அதிசயமலர் - தமிழ்நதி**
**தேயிலைத் தோட்டப்பாட்டு - முகம்மது இராவுத்தர்**
**புறநானூறு - பிசிராந்தையார்**
**துணைப்பாடம் : சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்**
**இலக்கணம் : தொன்மம்**

**பலவுள் தெரிக.**

1. "பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்" - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பரணர்

ஆ) சோழன் நலங்கிள்ளியை கோவூர்க்கிழார்

இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்

ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்.

**விடை : ஆ) சோழன் நலங்கிள்ளியை கோவூர்க்கிழார்**

2. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது.

அ) நம்பிக்கை ஆ) பெருமிதம்

இ) புகழ் ஈ) அச்சம்

**விடை : அ) நம்பிக்கை**

3. முச்சந்தி இலக்கியம் என்பது

கூற்று 1 : கதை வடிவிலான வடிவம் உடையது.

கூற்று 2 : பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுகிறது.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**விடை : ஆ) கூற்று 1, 2 சரி**

4. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்

அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

**விடை : இ) வளர்ந்த.**

5. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது.

ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது

ஈ) தனக்குப் பயன்படும், பிறருக்கும் பயன்படும்.

**விடை : ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது.**

**குறுவினா :**

**1. பருவத்தே பயிர்செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**

- ✓ உரிய காலத்தில் உரிய இடத்தில் செயல்பட்டால் உலகையே வெல்லலாம். அதைப்போல சரியான பயிரைத் தேர்ந்தெடுத்து, உரிய நேரத்தில் விதைத்து, நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல், அறுவடைக்குப்பின் பாதுகாத்து, உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் போன்றவற்றைக் கடைபிடித்தால் விவசாயம் செழிக்கும்.
- ✓ ஆடிப்பட்டம் தேடி விதை போன்ற பழமொழிகள் வேளாண் மேலாண்மையைக் குறிக்கின்றன.

**2. அறிவுடை வேந்தனின்நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?**

அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறையறிந்து வரிதிரட்டினால் நாடு செல்வச் செழிப்பாக இருக்கும். இதுவே அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவதாகும்.

**3. எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போது அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பைச் சிந்திப்பதில்லை. ஒரு தேனீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக. (பொதுவான வினா)**

- தேனீரில் தேயிலை, பால், சருக்கரை ஆகியன அடங்கியுள்ளன.
- தேயிலை பயிரிடும் உழவர், தேயிலை தோட்டத் தொழிலாளர், தொழிற்சாலை ஊழியர், கரும்பு விவசாயி, தொழிலாளர், சருக்கரை ஆலை ஊழியர்கள், பசு வளர்ப்போர் என எண்ணற்றோரின் உழைப்பால் தேனீர் உருவாகிறது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**4. செவியறிவுறூஉ துறையை விளக்குக.**

அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க வலியுறுத்துவதே செவியறிவுறூஉ துறையாகும்.

**சிறுவினா :**

**1. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**

- ♣ வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கருத்துகள் உள்ளன.
- ♣ சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய நேரத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல், அறுவடைக்குப்பின் பாதுகாத்தல், உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வுடனும் பொறுப்புணர்வும், நிருவாக நெறியும் இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும்.



- ♣ வறியவன் ஒருவன் தன் சிறு வயலைப் பாதுகாப்பது போல என்ற உவமையிலிருந்து வயலை எங்ஙனம் பாதுகாப்பது என்பதை உணர முடிகிறது.
- ♣ "வையம் முழுது வறிஞன் ஓம்பும் ஓர்
  செய் எனக் காத்து இனிதுஅரசு செய்கிறான்"

**2. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்? (2023 பொதுத் தேர்வு)**

**அதிசய மலரின் பூச்செடி முளைத்த விதமாக தமிழ்நதி கூறுவன.**

- குண்டு மழை பொழிந்ததால் நிலங்கள் அழிக்கப்பட்டன.
- பச்சையம் இழந்த நிலம் சாம்பல் நிறத்தில் காட்சியளித்தது.
- பொட்டல் வெளியில் போரின் பின் பிறந்த குழந்தைபோல அதிசய மலரின் பூச்செடி முளைத்து பூத்தது.
- ஆட்கள் இல்லாத நேரத்தில் அங்கு சுற்றித்திரிந்த யானைகளின் எச்சத்தினால் முளைத்திருக்கலாம். அல்லது
- எவரோ ஒருவருடைய சப்பாத்தின் ( காலணி ) பின்புறம் விதையாக ஒட்டிக்கொண்டு வந்து செடியாக முளைத்திருக்கலாம்.

**3. எங்கிருந்தோ வருகிறது**
**வண்ணத்துப்பூச்சியொன்று**
**பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**



**இடம் :** மேற்கண்ட பாடலடிகள் **தமிழ்நதி** இயற்றிய **அதிசய மலர்** எனும் பாடலில் இடம்பெற்றுள்ளன.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பொருள் :** இலங்கையில் குண்டு மழை பொழிந்தது: நிலங்கள் அழிக்கப்பட்டன. மனிதர்கள் சிதறி ஓடினர்: அழிக்கப்பட்ட தாய்மண்ணில் மீண்டும் அமைதி திரும்புகிறது. அதைப் பூ மலர்வதாகக் கூறுகிறார். மேலும் மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்புகிறது. இதனை, வண்ணத்துப்பூச்சி ஒன்று வருகிறது என்கிறார். மக்கள் தொலைத்த உரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. அதனை, பறவைகளும் நாளை வரக்கூடும் என்று உவமையாக வருணிக்கிறார் தமிழ்நதி.

**4. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையும் பொருளையும் பொருத்தி விளக்குக.**

யானை புக்க புலம்போல எனும் பாடல் புறநானூற்றில் பிசிராந்தையார் இயற்றியதாகும்.



**உவமை :** யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே.

**உவமையின் பொருள் :** விளைந்த நெல்லை உணவுக் கவளமாக்கிக் கொடுத்தால் அது யானைக்குப் பலநாட்களுக்கு உணவாகும். ஆனால் யானை தானே உண்ணலாம் என்று நிலத்தில் இறங்கினால் உண்பதைக்காட்டிலும் காலில் மிதிபட்டு அழிவதே அதிகம். அதைப்போல அரசன் முறையறிந்து வரி வாங்கினால் நாடு செழிப்பாக இருக்கும். அதைவிடுத்து அரசன் நாள்தோறும் வரிதிரட்ட விரும்பினால் நாட்டு மக்கள் துன்புறுவர். அரசும் அழியும்.

**பொருத்தம் :** உவமையான யானையையும், உவமையாக வரிவாங்கும் அரசனின் செயல்பாட்டையும் கூறி இடையில் போல எனும் உவம உருபு அமைந்துள்ளதால் உவமையணி ஆகும்.

**நெடுவினா :**

**1. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.**

**முன்னுரை :**

துன்பக்கடலில் உழன்றுகொண்டிருக்கும் எளிய மக்களின் வலிகளையும் வாழ்வு நிலையையும் நாட்டுப்புற இலக்கிய வடிவங்களான கும்மி மற்றும் கதைப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

முகம்மது இராவுத்தர் அவர்கள் இயற்றிய, கும்மி எனும் நாட்டுப்புற வடிவத்தில் அமைந்த தேயிலை தோட்டப்பாட்டு தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் மன வேதனையை வெளிக்காட்டுவதாக அமைகின்றது.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**அடிமை வாழ்க்கைக்கான காரணம் :**

19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தாலும், வெள்ளையரின் சூழ்ச்சியாலும் தமிழர்கள் கரும்புத் தோட்டத்திலும், தேயிலைத் தோட்டத்திலும் கூலிகளாகப் பணியமர்த்தப்பட்டு, அடிமையாக மிகக் குறைந்த கூலிக்கு அதிக உழைப்பைக் கொடுத்தனர். அத்தகு தேயிலை தோட்டத் தொழிலாளர்களின் துன்பத்தை உணர்த்துகிறது தேயிலை தோட்டப்பாட்டு.




**அடிமை வாழ்க்கை :**

வணிகம் செய்ய வந்த வெள்ளையர்கள், இங்கே நடந்த கைத்தொழில்களையெல்லாம் நசுக்கினர். நம்மிடம் உள்ள செல்வங்களை எல்லாம் கொள்ளையிட்டு, நம்மையெல்லாம் விலங்கைவிடக் கேவலமாக நடத்தினர்.

பிறந்து, வளர்ந்து, உண்ட நம் சொந்த மண்ணில் அந்நியர் கொடுத்த பல வேலைகளைச் செய்து கஷ்டப்பட்டு பெண்டாட்டி பிள்ளைகளுடன் நாயைவிடவும், பேயைவிடவும் கீழான நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

**வேலைக்கு ஆசைகாட்டல் :**

வேலைக்கு வரச்சொல்லி ஆசைகாட்டி, ஆலைக் கரும்புபோல் ஆட்டிப்படைத்து, குரங்காட்டிபோல அடிமைப்படுத்தினர். நாம் அவர்களிடம் வாங்கிய சிறு கடன் தொகையை ஒன்றுக்கு பத்தாக எழுதி, சாகும்வரை அவர்கட்கு அடிமையாக கூலிக்கு வேலை செய்யும்படி ஆக்கிவிட்டனர்.

சிறிதும் பாவதோசம் பார்க்காமல் இலங்கை, அந்தமான் போன்ற இடங்களில் தேயிலைத் தோட்டத்தில் வேலைக்குச் சேர்த்தனர்.

**மண்ணுளி பாம்புபோல வாழ்க்கை :**

உண்ண உணவுக்கும், அடிப்படைச் செலவுகளுக்கும் கூலி குறைந்துகொண்டே போய் மண்ணுளி பாம்புபோல குடும்பத்துடன் வாழ்கிறோம்.

**கல்வியின் சிறப்பு :**

இனியும் வெள்ளைக்காரரின் பேச்சைக் கேட்காதீர். கல்வி அறிவு நம்மிடம் இல்லாததே அனைத்திற்கும் காரணம். எனவே கல்வி கற்று துன்பத்திலிருந்து தற்காத்துக் கொள்ளுங்கள்.

**முடிவுரை :**

மேற்கண்ட தேயிலைத் தோட்டப்பாட்டு மூலமாக வெள்ளைக்காரர்களிடம் நாம் அடிமை வாழ்க்கை வாழ்ந்த துயரத்தையும், கல்வியின் அவசியத்தையும் அறிந்துகொண்டோம்.


www.Padasalai.Net


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2. சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.**

கரூரை அடுத்துள்ள புகளூரில் உள்ள ஆறுநாட்டான் குன்றின்மீது உள்ள கல்வெட்டு குறித்து ஆய்வு செய்தவர் ஐராவதம் மகாதேவன் அவர்கள்.

- ✧ 1927 - 28 ஆம் ஆண்டின் தொகுதிகளில் புகளூர்க் கல்வெட்டுகள் பற்றிய குறிப்புகள் முதல் முதலாக மகாதேவன் அவர்களுக்குக் கிடைத்தன.
- ✧ ஆறுநாட்டான் குன்று மீதுள்ள கல்வெட்டுகள் சேரல் இரும்பொறை மன்னர்கள் பற்றியன.
- ✧ சங்ககால தமிழ் மன்னர்களைப் பற்றிய புறச்சான்றுகள் கிடைக்காத நிலையில் அவர்களது பெயர்கள் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.
- ✧ கல்வெட்டின் முதல்வரியில் யாற்றூர் என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான செங்காயபன் வசிக்கும் உறையுள் இது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.



- ✧ இரண்டாவது வரியில் இருந்த கோ எனும் எனும் சொல்லைக் கொண்டு சங்ககால தமிழ் மன்னரின் கல்வெட்டு இது என்பது உறுதியானது.
- ✧ சங்க நூல்களில் மட்டுமே இதுவரை காணப்பட்ட பெருங்கடுங்கோன், இளங்கடுங்கோ, இளங்கோ எனும் பண்டைய தமிழ் மன்னர்களின் பெயர்கள் முதன்முதலாக இக்கல்வெட்டுகளில் இடம்பெற்றிருந்தன.
- ✧ "…..அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
  கோ ஆதன் செல்லிரும்பொறை மகன்
  பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்
  கடுங்கோ (இ)ளங்கோ ஆக அறுத்த கல்"
- ✧ இதன்மூலம் கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்தது என்ற செய்தி அறியப்படுகிறது.
- ✧ இக்கல்வெட்டு ஏறத்தாழ கி.பி. (பொ.ஆ) இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது.
- ✧ கல்வெட்டின் மூலம் நாம் பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டில் கரூர் பகுதியை சேர மன்னர்கள் ஆட்சி செய்ததும், ஆறுநாட்டான் குன்றில் சமணத்துறவி செங்காயபன் தங்கி இருந்ததும் நமக்கு தெரிய வருகிறது.
- ✧ இரண்டாம் நூற்றாண்டில் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டதும் நமக்குப் புலனாகிறது.
- ✧ தமக்குக் கிடைத்த ஆய்வு முடிவைத் தம் வரலாற்றுப் பேராசிரியர் திரு.நீலகண்ட சாஸ்திரியிடம் காட்டி அதைத் தெளிவுபெற்று அதன் சிறு



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறிப்புகளை "இந்து" நாளிதழில் வெளியிட்டார் திரு. ஐராவதம் மகாதேவன் .

- மொத்தத்தில் கல்வெட்டு ஆராய்ச்சியில் அவருக்கிருந்த ஆர்வமும், கல்வெட்டுகள் பழங்கால வரலாற்றை அறிந்துகொள்ள நமக்கு திறவுகோலாகப் பயன்படுவதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**3. நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

***திரு.வெ.இறையன்பு அவர்கள் கூறும் நிருவாக மேலாண்மை :***

- உயர் பதவியில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை. ஆனால் யார் திறமைசாலிகள் என்று அறிந்து வைத்திருந்தால் போதுமானது.
- தெரிந்திருப்பது ஒருவகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றோர் அறிவு.
- "கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
  நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்
  ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு
  தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு" என்கிறது நாலடியார்.
- நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்பவன், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவான்.
- டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் வாழ்ந்து வந்தான். அவன் வரவு குறைந்தாலும் செலவைக் குறைக்கவில்லை. அவனது உதவியாளர் நிதி நிலைமைப் பற்றிப் பேச வரும்போதெல்லாம் கேட்க மறுத்தான்.
- கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெறிக்கும்போதும் அவன் வருந்தவில்லை.



- தான் அளித்த விருந்தை உண்டவர்கள் உதவுவார்கள் என்று பொய்க்கணக்கு போடுகிறான். அவனுடைய சேவகர்கள் நான்கு திசைகளுக்கும் உதவி கேட்டுச் சென்று வெறும் கையோடும், வெளிறிய முகத்தோடும் திரும்புகிறார்கள்.
- இறுதியில் அவன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான். மனித இனத்தையே வெறுக்கிறான். இது நிதி மேலாண்மை பற்றிய ஷேக்ஸ்பியர் நாடகம்.
- ஔவையார் நல்வழியில்,
  "ஆன முதலில் அதிகம் செலவானால்
  மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
  எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயுனாய்

நல்லார்க்கும் பொல்லானாம் நாடு”

என்று நிதியைக் கண்டபடி கையாள்பவருக்கு அறிவுறுத்துகிறார்.

- இவையே நிருவாக மேலாண்மை பற்றிய திரு.வெ.இறையன்பு அவர்களின் கருத்துகளாகும்.

**இலக்கணக் குறிப்பு :**

1. காய்நெல் - வினைத்தொகை.
2. புக்க - பெயரெச்சம்.
3. அறியா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**பகுபத உறுப்பிலக்கணம் :**

1. அறிந்து = அறி + த்(ந்) + த் + உ

அறி - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

2. அறுத்து = அறு + த் + த் + உ

அறு - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

**பொருள் தருக :**

1. காய்நெல் - விளைந்த நெல்.
2. மா - ஒரு நில அளவு.
3. செறு - வயல்.

**இலக்கணம் : தொன்மம்**

**1. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.**

ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி.

**2. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.**

ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.

**3. “சாபவிமோசனம்”, “அகலிகை” கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்.**

ஆ) புதுமைப்பித்தன்.

**4. பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.**

ஆ) 4 3 2 1

**5. தொன்மம் - விளக்கம் தருக. (2023 பொதுத் தேர்வு வினா)**

- தொன்மம் (myth) என்றால் பழங்கதை, புராணம் என்றெல்லாம் பொருள் உள்ளது.
- தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகளுள் தொன்மை என்பதுவும் ஒன்றாகும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஃ காலம் காலமாக உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட கருத்து வடிவங்களும் தொன்மங்களே.

**6. பேச்சுவழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.**

*அ) இதோ வருகிறான் பார் அரிச்சந்திரன்.*

*ஆ) அந்த சமையல்காரரின் சமையல் நளபாகம் தான். ரொம்ப சுவையானதா இருக்கும்.*

**7. உள்மனம் ஒரு பாற்கடல்**
***அதைக் கடைந்தால்***
***அமுதம் மட்டுமல்ல***
***ஆலகாலமும் வெளிப்படும் என்பதை***
***நீ அறிவாய் அல்லவா?***

**- இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?**

- ♣ இக்கவிதையில் பாற்கடல், அமுதம், ஆலகாலம் ஆகியன தொன்மங்கள்.
  - ♣ கவிதையில் வெளிப்படும் தொன்மம் முரண்பாடு.

## மொழிப்பயிற்சி

தமிழாக்கம் தருக.

A white woman, about 50 years old, was seated next to a black man. Obviously disturbed by this, she called the airhostess.

*சுமார் 50 வயதுடைய வெள்ளை இனத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி கருப்பினத்தவரின் அருகில் அமரவைக்கப்பட்டாள். அதைத் தொந்தரவாக எண்ணிய அவள், விமான பணிப்பெண்ணை அழைத்தாள்.*

"Madem, what is the matter?" the airhostess asked (*"என்ன விஷயம் அம்மா" என்று விமான பணிப்பெண் வினவினாள்*).

"You placed me next to a black man. Give me an alternative seat" (*"நீங்கள் கருப்பின ஆணிற்குப் பக்கத்தில் என்னை உட்கார வைத்துள்ளீர். எனக்கு வேறு இருக்கை தாருங்கள்" என்றாள்*).

The airhostess replied. "Almost all the places on this flight are taken. I will go to see if any another place is available"



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

*("விமானத்தின் பெரும்பாலான இருக்கைகள் நிறைந்துவிட்டன. வேறு இடம் உள்ளதா என பார்க்கிறேன்" என்று பதிலளித்தாள் விமானப்பணிப்பெண்).*

The hostess went away and came back a few minute later *(சற்று நேரத்தில் சென்று சிறிது நேரத்தில் திரும்பி வந்தாள் பணிப்பெண்).*

"Madam, just as I thought, there are no other available seats in the economy class. We still have one place in the first class" *("அம்மையே சாதாரண வகுப்பில் இருக்கைகள் அனைத்தும் நிரம்பிவிட்டன. முதல் வகுப்பில் ஒரே ஒரு இருக்கை மட்டும் உள்ளது").*

Before the woman could say anything *(வெள்ளை இனப்பெண் எதுவும் சொல்வதற்கு முன் பணிப்பெண் தொடர்ந்து)*, the hostess continued. "It would be scandalous to make someone sit next to someone so disgusting" *( "அருவருக்கத்தக்க ஒருவரின் அருகில் அமரவைப்பது இழிவானது" என்று கூறிவிட்டு).*

She turned to the black guy and said, "Sir, a seat awaits you in first class" *("அவள் திரும்பி கருப்பினத்தவரைப் பார்த்து, ஐயா முதல்வகுப்பில் உங்களுக்கு ஓர் இருக்கை காத்திருக்கிறது. வாருங்கள்" என அழைத்தார்).*

At the moment, the other passengers who were shocked by what they had just witness stood up and applauded *(இந்தச் சம்பவங்களை அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டிருந்த சகபயணிகள் எழுந்துநின்று கைதட்டி ஆரவாரம் செய்தனர்).*

Take a lesson from the sun who shines his light on everyone *(வேறுபாடு காட்டாமல் எல்லாருக்கும் ஒளி வழங்கும் சூரியனிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள்).*

Or the rain that falls on every single shore *(எல்லா இடங்களிலும் நீர் நிறையும்படி பெய்யும் மழையிடம் கற்றுக்கொள்ளுங்கள்).*

No distinction of our race or the colour of our face *(இனத்தையும், முகத்தின் வண்ணத்தையும் வைத்து மனித இனத்தைப் பிரிக்கக்கூடாது)..*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

Nature's gifts are there for all men rich or poor *(ஏழையோ பணக்காரனோ அனைவருக்கும் இயற்கை பரிசு வழங்குவது உறுதி).*

(Courtesy : S.S.S. Bal Vikas) *(நன்றி எஸ்.எஸ்.எஸ். பால் விகாஸ் அவர்கட்கு)*

**விளம்பரத்தைப் படித்து நாளிதழ்ச் செய்தியாக மாற்றுக :-**




*சென்னையில் 42ஆவது புத்தகக் கண்காட்சி நடைபெற உள்ளது. 800 அரங்குகளில் 12,00,000 தலைப்புகளில் 20,00,000 வாசகர்களையும் 30,00,000 பார்வையாளர்களையும் உள்ளடக்கிய புத்தகக் கண்காட்சி. 04.01.2019 முதல் 20.01.2019 வரை ஒய்.எம்.சி.எ மைதானம் உடற்கல்வியியல் கல்லூரி, நந்தனத்தில் புத்தகக் கண்காட்சி நடைபெற உள்ளது. வார நாட்களில் பிற்பகல் 2 மணி முதல் இரவு 9 மணி வரையும், விடுமுறை நாட்களில் காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரையும் கண்காட்சி நடைபெறும். நுழைவுக்கட்டணம் ரூ.10 மட்டுமே. புத்தகங்களுக்கு 10% சிறப்புத் தள்ளுபடியும் உண்டு. அனைவரும் புத்தகங்களை வாசிப்போம், வாழ்க்கையை நேசிப்போம்.*

**மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக :-**

***ஆற அமர*** - *பிரச்சனை என்று வந்துவிட்டால் **ஆற அமர** யோசித்து முடிவெடுக்க வேண்டும். (2023)*

***ஆணி அடித்தாற்போல*** - *ஆசிரியர் நடத்திய பாடங்கள் **ஆணி அடித்தாற்போல** என் மனதில் பதிந்தது.*

***அகலக்கால்*** - *ஒரே நேரத்தில் இரண்டு தொழில்கள் செய்தேன். பல இடங்களில் கடனும் வாங்கினேன். அப்போது என் தந்தை **அகலக்கால்** வைக்காதே என்று அறிவுறுத்தினார்.*

***வழிவழியாக*** - *கற்றார் சிறப்படைவது என்பது **வழிவழியாக** வந்த வழக்கம் ஆகும்.*

***கண்துடைப்பு - கண்துடைப்பாக*** அறிவிக்கப்படும் கவர்ச்சிகரமான திட்டங்களை மக்கள் நம்பாமல், அரசு வங்கிகளில் முதலீடு செய்ய வேண்டும்.

இலக்கிய நயம் பாராட்டுக :-



பூமிச்சருக்காம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலரோடு பேசுவேன்
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன்.

- நா. காமராசன்.

***திரண்ட கருத்து :***

பூமியின் சருகுகள் போன்ற பாலைவனத்தை முத்தைத்தரும் கடல்போல் மாற்றுவேன். புயலை தென்றலாக மாற்றுவேன். இரவில் விண்மீன்களைக் காசாக மாற்றி இரவலருக்குக் கொடுத்து அவர்களுடன் உரையாடுவேன். இரவை எரிக்கும் சூரியனை ஏழைகளின் அடுப்பை எரிக்கப் பயன்படுத்துவேன்.

***மையக்கருத்து :***

இல்லாதவர்களுக்கு இருப்பதைக் கொடுத்து உதவ வேண்டும்.

***எதுகை :***

அடி அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

பாடலிலுள்ள எதுகைச் சொற்கள் :

இரவில் - இரவெரிக்கும்.

***மோனை :***

அடி அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை.

***பாடலிலுள்ள மோனைச் சொற்கள் :***

பூமி - புயலை - புதிய, இரவில் - இரவெரிக்கும் - இரவலரோடு.

***இயைபு :***



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பாடலடிகளின் ஈற்றுச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபு ஆகும்.

பாடலில் ஆக்குவேன், பேசுவேன், வீசுவேன் என்பன இயைபாக வந்துள்ளன.

***முரண் :***

பாடலில் எதிர்ச்சொற்கள் அமையத் தொடுப்பது முரண் ஆகும்.

பாடலில் புயல் x தென்றல் எனும் முரண் அமைந்துள்ளது.

தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக :-

1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.

வாழைத்**தோப்பில்** குயில்கள் **கூவி**க்கொண்டும் காகங்கள் **கரைந்து**கொண்டும் இருந்தன.

2. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

முருகன் சோறு **உண்டு** பால் **பருகினான்**.

3. கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.

கோவிந்தன் குடியிருக்க சுவர் **எழுப்பி** கூரை **வேய்ந்தார்**.

4. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்**குருளை**யும் யானைக்**கன்று**ம் கண்டேன்.

5. ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

ஆட்டுப் **பட்டி**யைச் சுற்றிலும் எலிகள் **வளை**கள் அமைத்திருந்தன

.

6. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

பனை **ஓலை**யால் கூரை **வேய்ந்திருந்தனர்**.

பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக :-

இளங்கோவன் சாத்தனாரிடம், "முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்கிறீர்களே, அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக" எனக் கேட்டார்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## மனப்பாடப் பாடல்
## புறநானூறு

"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே:
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்:
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்,"

ஆசிரியர் : பிசிராந்தையார்
பாவகை : நேரிசை ஆசிரியப்பா

**படிப்போம் பயன்படுத்துவோம் : (கலைச்சொல் அறிவோம்)**

**Depit Card** - பற்று அட்டை
**Teller** - விரைவுக் காசாளர்
**Demand Draft** - கேட்பு வரைவோலை
**Mobile Banking** - அலைபேசி வழி வங்கி முறை
**Withdrawal Slip** - திரும்பப் பெறல் படிவம்
**Internet Banking** - இணையவங்கி முறை

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



பனிரெண்டாம் வகுப்பு
படிப்பதாலேயே
பனிரெண்டு மணி நேரம்
உழைக்க வேண்டும்.
காலை எழுந்ததும் படி
அதுவே வெற்றிப்படி
பள்ளிக்குச் சென்று
பக்குவமாய் பாடம் படி.
உறவுகளோடு அலைபேசியில்
உறவாடி மகிழ்.
ஆன்றோர் கூறும் அறிவுரை
சான்றோன் ஆக்கிடுமே உனை.
அழகாய் வெளியே சென்று
விளையாடி உடலுக்கு உரமேற்று.
நல்ல நிகழ்ச்சிகளை சிறிது
நேரம் தொலைக்காட்சியில் கண்டிடு.
உலகத்து அறிவு பெறுவாய்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

www.Padasalai.Net
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

திணை, துறை (மிக முக்கிய வினா)

**திணை : பாடாண் திணை (2023)**

**திணை விளக்கம் :**

ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணை ஆகும்.

**சான்று :**

"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே:
மாநிறைவு இல்லதும், பலநாட்கு ஆகும்:
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்:
கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்:
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான், உலகமும் கெடுமே".

**விளக்கம் :**

விளைந்த நெல்லை சோறாக்கி கவளமாகக் கொடுத்தால் அது யானைக்கு பலநாட்கு உணவாகும். அதைவிடுத்து, யானை தானே நிலத்தில் புகுந்து உண்டால் உண்பதைக் காட்டிலும் காலால் மிதித்து அழிக்கும். அதைப்போல அரசன் முறையாக வரிதிரட்டினால், நாடு செழிப்படையும். அதை விடுத்து, அரசன் தினமும் வரியைத் திரட்டினால் யானை புகுந்த நிலம் போல அரசனுக்கும் பயன்தராது, நாட்டு மக்களும் துன்புறுவர்.

இப்பாடலில் அரசனின் கருணையை எடுத்துக்காட்டியுள்ளதால், பாடாண்திணை ஆகும்.

**துறை விளக்கம் : (செவியறிவுறூஉத் துறை)**

அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல், செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.

**சான்று :**

"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே:
மாநிறைவு இல்லதும், பலநாட்கு ஆகும்:
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்:
கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்:



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான், உலகமும் கெடுமே".

**விளக்கம் :**

விளைந்த நெல்லை சோறாக்கி கவளமாகக் கொடுத்தால் அது யானைக்கு பலநாட்கு உணவாகும். அதைவிடுத்து, யானை தானே நிலத்தில் புகுந்து உண்டால் உண்பதைக் காட்டிலும் காலால் மிதித்து அழிக்கும். அதைப்போல அரசன் முறையாக வரிதிரட்டினால், நாடு செழிப்படையும். அதை விடுத்து, அரசன் தினமும் வரியைத் திரட்டினால் யானை புகுந்த நிலம் போல அரசனுக்கும் பயன்தராது, நாட்டு மக்களும் துன்புறுவர்.

இப்பாடலில் அரசன் செய்ய வேண்டிய கடமைகளை (வரி வாங்கும் முறை) எடுத்துக்காட்டியுள்ளதால், செவியறிவுறூஉ துறை ஆகும்.

கூடுதல் வினாக்கள்:

1. ஓர் அரசன் ஒரு நாளை எவ்வாறு ஒதுக்கிப் பணியாற்ற வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் மடியின்மை என்ற அதிகாரத்தில் மூலம் உணர்த்துகிறார்.
2. வரலாற்று முந்தைய காலத்து மனிதனுக்கு எது கனவு? ஓய்வு
3. வறியவன் ஒருவன், தன் சிறு வயலைப் பாதுகாப்பது போல இவ்வுலகம் முழுவதையும் பாதுகாத்து, மிகச் சிறந்த முறையில் ஆட்சி செய்தவர் தசரதன்.
4. நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் என்று குதிரைகள் ஏற்றுமதி பற்றிக் கூறும் நூல் பட்டினப்பாலை.
5. யவனர்களின் கப்பல் வணிகம் பற்றிக் கூறும் நூல் எது? புறநானூறு.
6. பகை நாட்டுச் செல்வங்களைக் கொண்டுவந்து தன் நாட்டு மக்களுக்கு வழங்கிய அரசன் பற்றிக் குறிப்பிடும் நூல் பதிற்றுப்பத்து (இரண்டாம் பத்து)
7. இரண்டு முறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது என்று கூறியவர் ஹிராக்ளிடஸ்.
8. இறையன்பு எழுதிய வாய்க்கால் மீன்கள் என்ற நூல் 1995 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றது.
9. தமிழ்நதியின் இயற்பெயர் கலைவாணி.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைத்துறையில் பட்டம் பெற்று, கனடாவில் வாழ்ந்து வருபவர் யார்? தமிழ்நதி.
11. பாரத மக்களின் பரிதாபச் சிந்து இயற்றியவர் முகம்மது இராவுத்தர்.
12. மா - ஒரு நில அளவு.
13. புறநானூற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்? ஜார்ஜ் எல் ஹார்ட்.
14. பிசிர் என்பது பாண்டிய நாட்டில் இருந்த ஒரு ஊர்
15. புறநானூற்றை அச்சில் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாதையர்.(1894).
16. பிசிராந்தையார் எந்த பாண்டிய மன்னனுக்கு வரி வாங்கும் முறையை எடுத்துரைத்தார் அறிவுடை நம்பி.
17. புறம், புறப்பாட்டு என்றெல்லாம் அழைக்கப்படும் நூல் புறநானூறு.
18. புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
19. முடியுடை மூவேந்தர், குறுநில மன்னர், வேளிர், கையறு நிலை, நடுகல் போன்ற பொருண்மைகளை வெளிப்படுத்தும் நூல் புறநானூறு.
20. பிண்டம் என்பதன் பொருள் வரி.
21. ஐராவதம் மகாதேவன் வாசித்த கல்வெட்டு, கரூரை அடுத்த ஆறு நாட்டான் குன்றின் மீது பொறிக்கப்பட்டிருந்தது.
21. கடந்த காலத்தைக் காட்டும் கண்ணாடி தொல்லியல்.
22. புகளூருக்குத் தலயாத்திரை சென்றவர் ஐராவதம் மகாதேவன்.
23. தொன்மம் என்ற சொல்லிற்கு பழங்கதை, புராணம் என்றெல்லாம் பொருள்.

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

*கீழ்க்காணும் விண்ணப்பத்தை நிரப்புக :*

திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

தொலைநிலைக் கல்வி இயக்ககம்

இளநிலை/முதுநிலை/பட்டயம்/சான்றிதழ்/முதுநிலைப்பட்டயம்/அடிப்படைப்படிப்பு/அறிமுகநிலைப்படிப்பு/தொழில்முறை மற்றும் இதர படிப்புக்கான விண்ணப்பம்

கடவுச்சீட்டு (PASSPORT) அளவு புகைப்படம் ஒட்டவும்

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்.

கல்வியாண்டு 2019 2020 க

நாள்காட்டி ஆண்டு 2019 2020 நா

(கற்போர் தாங்களே விண்ணப்பத்தினை நிறைவு செய்தல் வேண்டும். அனைத்து விவரங்களும் கட்டாயம் அளிக்கப்பட வேண்டும்.)

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பம் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள் 30.11.2021

விண்ணப்பிக்க விரும்பும் பாடப்பிரிவு: இளநிலை ✓ | முதுநிலை | பட்டயம் | சான்றிதழ் | முதுநிலைப் பட்டயம் | அடிப்படை நிலை | அறிமுக நிலை | பாடப்பிரிவு: தமிழ்

கட்டணம் செலுத்திய விவரம்: வரைவோலை ✓ | வங்கிச் செலுத்துச்சீட்டு | நிதிப்பிரிவு இரசீது | கணினி இரசீது

எண்: 61371189 | நாள்: 15.11.2021 | தொகை: 21,522/-

1. பெயர் (தமிழில்) அன்பு. க
   (ஆங்கிலத்தில்) ANBU. K
2. முகவரி S/O. க. கண்ணன்
   56/22A, வள்ளுவர் தெரு.
   திருவண்ணாமலை.
   அஞ்சல் எண் 606601
3. தொலைபேசி எண்
   கைபேசி எண் 9876543210
   மின் அஞ்சல் முகவரி anbukannan28@gmail.com
4. பிறந்த நாள் 28 10 2004
5. பாலினம் ஆ ✓ / பெ / மூன்றாம் பாலினம்
6. தேசியம் இந்தியன்

1. நகர்ப்புறம் ✓ 2. கிராமப்புறம்
3. பணிபுரிபவர் 4. பணியில் இல்லாதவர் ✓
5. திருமணமானவர் 6. திருமணமாகாதவர் ✓
7. மாற்றுத்திறனாளி
8. அரசு ஊழியர் 9. முன்னாள் மாணவர்

7. தந்தை ✓/காப்பாளர்/கணவர் பெயர்: கண்ணன், க
8. கல்வித் தகுதி தேர்ச்சி பெற்ற விவரம்:

| பத்தாம்/மேல்நிலைப்பள்ளி ✓ வகுப்பு | பதிவு எண் | தேர்ச்சி பெற்ற நாள் | அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மதிப்பெண் | | பயின்ற பள்ளி |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பெற்றது | |
| தமிழ் | 615744 | 05.06.2021 | 100 | 98 | ஸ்ரீ இரமண மகரிஷி பதின்ம மேல்நிலைப் பள்ளி. |
| ஆங்கிலம் | | | 100 | 97 | |
| கணிதம் | | | 100 | 100 | |
| இயற்பியல் | | | 100 | 96 | |
| வேதியியல் | | | 100 | 95 | |
| உயிரியல் | | | 100 | 97 | |

| இளநிலைப் பட்டம் | பதிவு எண் | தேர்ச்சி பெற்ற நாள் | அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மதிப்பெண் | | பயின்ற கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பெற்றது | |
| | | | | | |

உறுதிமொழி

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என்றும், ஏதேனும் தவறு இருப்பின் பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு உட்படுவேன் என்றும் இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

இடம்: திருவண்ணாமலை
நாள்: 15.11.2021

K. Anbu
விண்ணப்பதாரரின் கையொப்பம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல் 8

**உரைநடை : நமது அடையாளங்களை மீட்டவர்**
**செய்யுள் : இரட்சணிய யாத்திரிகம் - எச்.ஏ.கிருட்டிணனார்**
**முகம் - சுகந்தி சுப்ரமணியன்**
**சிறுபாணாற்றுப்படை - நத்தத்தனார்.**
**துணைப்பாடம் : கோடைமழை - சாந்தா தத்**
**இலக்கணம் : குறிமீடு**

பலவுள் தெரிக :

**1. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி**

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

**விடை : இ) திண்டிவனம்**

**2. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.**

அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு. வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2. மயிலை. சீனி. வேங்கடசாமி
இ) தமிழ்த் தென்றல் - 3. திரு. வி. க.
ஈ) மொழி ஞாயிறு - 4. தேவநேயப் பாவாணர்

**விடை : அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு. வரதராசனார்.**

**3. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்.**

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமியமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

**விடை : ஈ) கிறித்தவமும் தமிழும்.**

**4. நான் வெற்று வெளியில் அலைந்துகொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது.**

அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை
இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை

**விடை : இ) தனது அடையாளத்தை.**

**5. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்.**

அ) ஆய் அண்டிரனும் அதிகனும்
ஆ) நல்லியக் கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

**விடை : ஆ) நல்லியக் கோடனும் குமணனும்.**

**குறுவினா :**

**1. "தமிழர் வளர்த்த கலைகள்" நூல் பற்றிக் குறிப்பு வரைக.**

- தமிழரது கலைத்திறனை எடுத்துக் கூறுவது தமிழர் வளர்த்த கலைகள் நூலாகும்.
- கவின் கலைகள் குறித்து குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூலாகும்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2. "விரிபெரு தமிழர் மேன்மை**
**ஓங்கிடச் செய்வ தொன்றே**
**உயிர்ப்பணியாகக் கொண்டோன்" - யார் யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?**

பாவேந்தர் பாரதிதாசன், மயிலை சீனி வேங்கடசாமியைப் பற்றி அவ்வாறு கூறுகிறார்.

தமிழரின் பண்பாட்டை, வரலாற்றை ஆய்வு செய்து உலகறியச் செய்வதையே தன் வாழ்நாள்முழுவதும் பணியாகக் கொண்டவர் மயிலை சீனி வேங்கடசாமி . அதனாலேயே பாரதிதாசன் அவ்வாறு புகழ்ந்துரைக்கிறார்.

**3. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.**



- ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்தன்மை உண்டு.
- குடும்ப வாழ்க்கையில் சமுதாயத்தின் இறுக்கமான சூழலில் சிக்கித் திணரும் பெண்கள், தன் இயல்பான முகத்தை (தன் தனித்தன்மையை) மறந்து விடுகின்றனர்.
- இதுவே முகம் முகவரியற்றுப் போனதற்குக் காரணமாகும்.

**4. இறைமகனின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?**

- இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே.
- வானம் இடிந்து விழவில்லையே.
- கடல் வற்றிப் போகவில்லையே.
- இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பது ஏனோ எனப் பலவாறாகப் புலம்பினர்.

**சிறுவினா :**

**1. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக. (2023)**



- மயிலை சீனி. வேங்கடசாமி 16.12.1900 ஆம் ஆண்டு மயிலாப்பூரில் பிறந்தார்.
- இவரின் தந்தை ஒரு சித்த மருத்துவர், இவரின் தமையனார் கோவிந்தசாமி ஒரு தமிழாசிரியர்.
- 25 ஆண்டுகள் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். விபுலானந்த அடிகள், திரு.வி.க., தெ.பொ.மீ., ச.த. சற்குணர் ஆகிய அறிஞர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்.
- பல்வேறு இதழ்களில் அவர் எழுதிய கட்டுரைகள் வெளிவந்தன.
- சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு எனப் பல்வேறு துறைகளில் நூல்கள் எழுதினார்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ➢ மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார்.
- ➢ தம் வாழ்வு முழுவதையும் தமிழ் ஆராய்ச்சிக்கே அர்ப்பணித்தவர்.

**2. கடையெழு வள்ளல்களையும், அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.**

- * **பேகன்** - காட்டில் குளிரால் நடுங்கிய மயிலுக்கு, தன் ஆடையைத் தந்தவன்.
- * **பாரி** - படருவதற்கு கொம்பின்றித் தவித்த முல்லைக் கொடிக்கு, அது படருவதற்காகத் தன் தேரையே கொடுத்தவன்.



- * **காரி** - குதிரைகளையும், ஏனைய செல்வங்களையும் இரவலர்களுக்கு ஈந்தவன்.
- * **ஆய்** - ஒளிமிக்க நீலவண்ணக் கல்லையும், நாகம் கொடுத்த ஆடையையும், ஆலின் கீழ் அமர்ந்த இறைவனுக்குக் கொடுத்தவன்.



- * **அதிகன்** - நீண்ட நாள் நோயின்றி வாழ உதவும் நெல்லிக்கனியை தான் உண்ணாமல், ஔவையாருக்கு வழங்கியவன்.
- * **நள்ளி** - தன்னிடம் உள்ள செல்வங்களை குறிப்பறிந்து வழங்கும் கைகளை உடையவன்.
- * **ஓரி** - சிறிய மலைநாட்டை கூத்தர்க்குப் பரிசாக வழங்கியவன்.

**3. "ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : ஈசன் மகன் எனும் இப்பாடல் எச்.ஏ.கிருட்டிணனார் அவர்கள் இயற்றிய இரட்சணிய யாத்திரிகம் எனும் நூலில் இரட்சணிய சரிதப் படலத்தில் இடம்பெற்றுள்ளது.

**விளக்கம்** : இறைமகன் இயேசுவை தண்டிப்பதற்காக கயிற்றால் கட்டினர். அதற்கு அவர் உடன்பட்டார். இச்செயல் அவர்கள் மீது அன்புகாட்ட அல்ல. தமக்குத் துன்பம் செய்தவர்கள் வாழ்நாள் முழுக்க துன்பத்தில் இருப்பார்களே என்று அவர்கள் மீது இரக்கப்பட்டார் அவர். அன்பு எனும் கட்டில் இருந்து விடுபட இயலாத ஓர் ஏழைபோல இருந்தார். இதை நீங்கள் நினைத்துப் பாருங்கள் என்பதே மேற்கண்ட வரிகளின் பொருள்.

**4. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.**

- → ஏழைகளுக்குக் கொடுத்து உதவுவதே கொடை. எனவே ஏழைகளுக்கு அவர்களின் தேவையறிந்து கொடுக்க வேண்டும்.
- → உழைக்க இயலாத மாற்றுத்திறனாளிகள், நோயுற்றோர், வயது முதிர்ந்தோர் ஆகியோருக்கு கொடை கொடுத்து உதவலாம்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

→ நம் பிறந்த நாள், பொங்கல், தீபாவளி போன்ற நல்ல நாட்களில் முதியோர் இல்லம், ஆதரவற்றோர் இல்லங்களுக்குச் சென்று உணவளித்து மகிழலாம்.

→ சிலர் உதவி கேட்கத் தயங்குவர். அதனால் அவர்களின் குறிப்பறிந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யலாம்.

→ நாம் பயன்படுத்தாத, நல்ல நிலையில் உள்ள துணிகளை ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்து உதவலாம்.

**நெடுவினா :**

**1. மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.**

**ஆராய்ச்சிப் பேரறிஞர் - மயிலை சீனி வேங்கடசாமி.**

**முன்னுரை**

மயிலை சீனி. வேங்கடசாமி தமிழ் ஆராய்ச்சியை தன் உயிர் மூச்சாகக் கொண்டவர். அவரின் ஆராய்ச்சிப் பணிகளைப் பட்டியலிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.




- மயிலை சீனி. வேங்கடசாமி 16.12.1900 ஆம் ஆண்டு மயிலாப்பூரில் பிறந்தார்.
- ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தொடக்கப் பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். கற்பிக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் ஆய்வாளராகத் தம்மை உருவாக்கிக் கொண்டார்.
- கட்டுரையோ, நூலோ எழுதும் முன் தரவுகளைச் சேகரித்து, ஒப்பிட்டு ஐயமிருப்பின் மற்றவரிடம் கேட்டுத் தெளிந்த பின்னரே வெளியிடுவார்.
- ச.த. சற்குணர் கிறித்தவமும் தமிழும் என்ற பெயரில் உரையாற்றினார். அதனைக் கேட்டு ஆர்வத்தால் கிறித்தவமும் தமிழும் என்ற நூலை எழுதினார்.
- தொல் இலக்கியம், தொல் கலை, தொல்லெழுத்து ஆகியவற்றில் கொண்ட ஈடுபாட்டால், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும் ஆகிய நூல்களை இயற்றினார்.
- சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு முதலான துறைகளில் இவர் கவனம் செலுத்தினார்.
- மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் பற்றி வரலாற்றுக நூல்களை எழுதினார்.
- களப்பிரர் குறித்த புதிய கண்ணோட்டத்தை களப்பிரர் ஆட்சியில் தமிழகம் என்னும் நூல் மூலம் வெளியிட்டார்.
- கவின் கலைகள் பற்றி தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் எனும் கலையியல் ஆய்வு நூலை வெளியிட்டார்.
- தமிழ்நாட்டு வரலாறு எனும் இவரது நூல் இவரது மீட்டுருவாக்க முயற்சிக்கு சரியான சான்றாகும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ➢ சொல்லாய்வுகள் செய்து, அஞ்சிறைத்தும்பி என்ற தொகுப்பில் செந்தமிழ்ச் செல்வி எனும் இதழில் வெளியிட்டார்.
- ➢ இவரது ஆராய்ச்சிகளைப் பாராட்டி, அறிஞர்கள் ஆராய்ச்சிப் பேரறிஞர் எனும் பட்டத்தை வழங்கினர்.

**முடிவுரை**

தமிழ்ப் பண்பாட்டிலும், தமிழர் வரலாற்றிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் மயிலையார். தம் வாழ்நாள் முழுவதும் தமிழ் ஆராய்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர். அவரைப் போல நாமும் தமிழ் வளர்ச்சிக்கு பணியாற்றுவோம்.

**(எவையேனும் 10 கருத்துகள் எழுதினால் போதுமானது)**

**2. எச்.ஏ.கிருட்டிணனார் "கிறித்தவக் கம்பரே" என்பதை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.**

**முன்னுரை**



**எச்.ஏ. கிருட்டிணனார், கம்பரைப் பின்பற்றி இரட்சணிய யாத்திரிகம் இயற்றியுள்ளார். அதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.**



- தழுவல்கள் : கம்பராமாயணம் வான்மீகி முனிவர் வடமொழியில் இயற்றிய இராமாயணத்தைத் தழுவி இயற்றப்பட்டது. அதைப்போல ஜான் பன்யன் ஆங்கிலத்தில் இயற்றிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் எனும் நூலைத் தழுவி தமிழில் கிருட்டிணனார் இரட்சணிய யாத்திரிகம் இயற்றினார்.
- பருவங்கள் : கம்பர் தம் காவியத்தை ஆறு காண்டங்களாக இயற்றினார். இராமபிரானின் பிள்ளைப் பருவம் தொடங்கி அவரின் வாழ்க்கை வரலாற்றை முழுவதும் வடித்துக் காட்டியுள்ளார். கிருட்டிணனார் கம்பரைப் பின்பற்றி இயேசுவின் குழந்தைப் பருவம் முதல் இறுதிவரை ஐந்து பருவங்களாகப் பிரித்து வகைப்படுத்தியுள்ளார். பால(குமார) காண்டம், ஆரணிய காண்டம் போன்றவற்றிலும் கிருட்டிணனார், கம்பரையே பின்பற்றியுள்ளார்.
- **வரலாறு** : கம்பர், இராமபிரானின் வரலாற்றை செஞ்சொற்களால் வடித்தது போலவே கிருட்டிணனார் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை செதுக்கியுள்ளார்.
- **புலம்பல்கள்** : கம்பராமாயணத்தில் இராமபிரான் கானகம் சென்றபோது அவரைப் பிரியும் துயரால் அயோத்தி மக்களும், முனிவர்களும், குகனும் கண்கலங்கி பலவாறு புலம்பினர். இரட்சணிய யாத்திரிகத்தில் இயேசுவை முள்கிரீடம் அணிவித்தும் சிலுவையில் அறைந்தும், துன்புறுத்தியபோது மக்கள் புலம்பினர். இங்கும் கம்பரை கிருட்டிணனார் பின்பற்றியுள்ளார்.
- **விருத்தப்பா** : கம்பர் விருத்தப்பாவில் கம்பராமாயணத்தை இயற்றியதுபோல, கிருட்டிணனாரும் விருத்தப்பாவிலேயே இயற்றியுள்ளார்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- **உவமை, உருவகங்கள்** : கம்பரைப்போலவே கிருட்டிணனாரும் தம் பாடல்களில் உவமை, உருவகங்களைப் பயன்படுத்தியுள்ளார்.

**முடிவுரை :**

மேற்கண்ட காரணங்களால் கிருட்டிணனார், கிருத்துவக் கம்பர் என அழைக்கப்படுகிறார்.

**3. கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.**

**கோடை மழை - சாந்தா தத்**

**முன்னுரை :**

முதியோரை அவர்தம் இறுதி நாட்களில் அவருடைய பிள்ளைகள் பார்த்துக் கொள்ள வேண்டும். பிள்ளையே தன் பிள்ளையை அனாதையாக விட்டுவிடுவது எவ்வளவு கொடுமை. அத்தகு சூழ்நிலையில் முதியவருக்கு ஊன்றுகோலாய் இருந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும். அத்தகு சூழலைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

- மருத்துவமனையில் பசியிலோ, காய்ச்சல் அவதியிலோ சிணுங்கிக் கொண்டிருந்த குழந்தையை நினைத்து அவதிப்பட்டுக் கொண்டிருந்தார் ஆறுமுகம்.
- தேநீர் குடிக்கச் சென்றால் இடம் பறிபோய்விடும் என்பதால் குழந்தையைத் தோளில் சாய்த்து சமாதானப்படுத்த முயன்றார்.
- மூன்று மணிநேரமாக குழந்தையை ஏந்தியிருந்ததால் கையில் வலி தெரிந்தது. இடுப்பும் வலித்தது.
- யாரோ இறந்தபோது மருத்துவமனையில் ஓலம் கேட்டது. அப்போது, தன் குடும்பத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார்.
- ஆறுமுகத்தின் மருமகள் காய்ச்சலில் இறந்துவிட்டாள். அதை நினைத்து, ஆறுமுகத்தின் மகனும் தன் குழந்தையை விட்டுவிட்டு இறந்துவிட்டான்.
- மருத்துவரிடம் குழந்தையைக் காட்டினார். நெஞ்சில் சளி இருப்பதால் காய்ச்சல். பயப்படத்தேவையில்லை என்று கூறி மருந்து எழுதிக் கொடுத்தார்.
- ஊசிபோட செவிலியரிடம் அழைத்துச் சென்றார். அவரின் கைகள் நடுங்கின. வீட்டில் யாரும் இல்லையா என செவிலியர் கேட்டார்.
- மருந்துச் சீட்டை எடுத்துக்கொண்டு மருந்துக் கடையை நோக்கிச் சென்றார்.
- வரவேற்ற கடைக்காரன் பாபு, குழந்தையை வாங்கிக் கொண்டான். அவரின் கைச்சுமை இடம் மாறியது.
- அந்தக் குழந்தையை தத்தெடுத்து வளர்க்க ஒருவர் பாபுவிடம் கேட்டிருந்தார். அவரை நாளைக்கு வரச்சொல் என்றார் ஆறுமுகம்.
- தத்து எடுக்க வந்தவர்கள் பாபுவுக்கு தெரிந்தவர்கள். ஆறுமுகத்திற்கு வயதாகிவிட்டதால் அவரால் இனியும் குழந்தையை பார்த்துக் கொள்ள முடியாது. குழந்தையைப் பிரிந்த துக்கம் மேலிட ஆறுமுகம் கண்ணீர் வடித்தார்.
- குழந்தையை தத்து எடுத்தவர்கள், ஆறுமுகத்தையும் தன்னோடு வீட்டிற்கு வருமாறு அழைத்தனர். தன் பெயரனை மட்டுமின்றி, தன்னையும் தத்தெடுத்த

அந்தத் தம்பதியரை எண்ணி "பாபு இப்போதைக்கு எனக்கு சாவு வராதுனு தோணுதுப்பா" என்று அந்த தம்பதியின் மனித நேயத்தை எண்ணி கண்ணீர் விட்டு கைகூப்பி நன்றி செலுத்தினார் ஆறுமுகம்.

**முடிவுரை :**

தம்பதியால் குழந்தை, ஆறுமுகம் இருவரும் மறுவாழ்வு பெற்றனர். இருவரின் துயரமும் தீர்ந்தது. குழந்தைகள் இருக்கும் இடத்தில் பெரியவர்களின் துணை வேண்டும். இருவரின் மனத்துயரும் நீங்கியது. அதைப்போல நாமும் ஒருவருக்கொருவர் உதவி செய்து மனிதநேயத்துடன் வாழ்வோம்.



**கதாபாத்திரங்கள் :**

ஆறுமுகம் - பெரியவர்
பாபு - மருந்துக்கடை வைத்திருப்பவர்
தம்பதி - ஆறுமுகத்தின் பெயரக் குழந்தை, ஆறுமுகம் இருவரையும் தத்து எடுத்தவர்.

## இலக்கணம் - குறியீடு

**1. குறியீடுகளைப் பொருத்துக.**

அ) பெண் - 3) விளக்கு
ஆ) புறா - 1) சமாதானம்
இ) தராசு - 4) நீதி
ஈ) சிங்கம் - 2) வீரம்

விடை : இ) 3, 1, 4, 2

2. கூற்று : 19ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.

காரணம் : பொமலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்.

ஆ) கூற்று சரி, காரணம் சரி.

3. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்.

ஈ) உள்ளுறை உவமை.

4. "திட்டம்" என்னும் தலைப்பில் "வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?" என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் வரம் எதற்கு குறியீடாகிறது?

இ) திட்டம்.

5. மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

அ) குறியீடு.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**குறுவினா :**

***1. குறியீடு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.***

*சரக்குந்தின் சக்கரத்தில்*
*நசுங்கிய பூனை*
*அதன் குறுக்கே*
*வந்தது யாரோ?*

***2. வியர்வை கவிதையில் வெளிப்படும் குறியீடுகளைக் குறிப்பிடுக.***

*ஆதிரை இட்ட பருக்கையால் அமுதுசுரபியில் உணவு பெருகிக் கொண்டே இருந்தது. அதைப்போல் வியர்வை சிந்தி உழைப்பதால் உலகம் செழித்து வளர்கிறது என்பதை குறியீடாகக் குறிப்பிடுகிறார்.*

***3. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.***

- *சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.*
- *சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருக்க வேண்டும்.*
- *குறியீட்டுப் பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.*

தமிழாக்கம் தருக.

I make sure I have the basic good habits which include respecting my elders , greeting people when I meet them, wishing them well when departing etc *(பெரியவர்களை மதித்தல், மக்களைச் சந்திக்கும்போது வாழ்த்துதல், புறப்படும்போது அவர்கள் நலம் விரும்புதல் போன்ற அடிப்படை நல்ல பழக்கங்கள் என்னிடம் உள்ளது என்பதை உறுதி செய்கிறேன்).*

Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine.
*( இதைத்தவிர, சட்டத்தைக் கடைபிடித்தல், ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்டவருக்கும் சேவை செய்தல், நோயாளிகளுக்கும், உதவி தேவைப்படுவோருக்கும் உதவுதல், வீடற்றவருக்கு தங்க இடம் வழங்கல், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுதல் போன்ற நல்ல பழக்கங்களும் எனக்குள்ளன).*

To lead on a peacefull life, I develop other good habits *(மன அமைதியுடன் வாழ நான் மற்ற நல்ல பழக்கங்களையும் மேம்படுத்திக் கொள்கிறேன்)*, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul *( எழுத்துப்பணி, இசை கேட்டல், நடனமாடல், பாடுதல் போன்றன என் ஆன்மாவின் தேவைகளை நிறைவேற்ற உதவும் பிற பழக்கங்கள்).*


*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கதையைப் படித்துணர்ந்து உரையாடலாக மாற்றுக :**

ராமசாமி : வணக்கம் நண்பர்களே!

மூவரும் : வணக்கம் ராமசாமி.

ராமசாமி : எனக்கு சில்க் சட்டை இருக்கே உனக்கு இருக்கா?

மூவரும் : ( யோசிக்கின்றனர் ).

ராமசாமி : நான் ஐந்தாம் வகுப்பு இந்திய தேச சரித்திரப் புத்தகத்தை எடுத்துக்கொள்கிறேன்.

செல்லையா : இந்த ஆண்டு இந்திய தேச சரித்திரப் புத்தகத்தை நான் வாங்கவில்லை. அதனால் சிவிக்ஸ் புத்தகத்தை எடுத்துக் கொள்கிறேன்.

ராமசாமி : படப்போட்டியை ஆரம்பிக்கலாமா?

செல்லையா : ஓ... ஆரம்பிக்கலாமே!

**விடைக்கேற்ற வினா அமைத்தல் :~**

***1. விடை : குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம்பெற்றுள்ளது.***

வினா : குடும்பம் என்ற சொல் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

***2. விடை : நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் ஆணையத்தை அமைத்தது.***

விடை : நடுவண் அரசு எப்போது தேசிய பேரிடர் ஆணையத்தை அமைத்தது?

***3. வினா : சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாய்ப் பயணிக்கவும் உதவுகின்றன.***

விடை : சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் எதற்கு உதவுகின்றன.

***4. வினா : 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைந்துள்ளது.***

விடை : தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் எங்கு எப்போது அமைந்தது?

***5. வினா : "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன்.***

விடை : ஆவணப்படம் பற்றி கிரியோர்சன் கூறுவது யாது?

**எண்ணங்களை எழுத்தாக்குக :-**



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com



அம்மா.
அ உயிரெழுத்து
ம் மெய்யெழுத்து
மா உயிர்மெய் எழுத்து
உயிரையும் உடலையும்
தந்து,
தம் தூக்கம் பசி
பொருட்படுத்தாமல்,
கண்ணைக் காத்திடும்
இமை போல்
எம்மைக் காத்திடுவாள்.
தாலாட்டி, சீராட்டி,
சோறூட்டி வளர்த்திடுவாள்.
உதிரத்தைப் பாலாக்கி
ஊட்டிடுவாள்.
தெய்வத்தை யாரும்
கண்டதில்லை.
தாயையே கண்டோம்
வாழும் தெய்வமாக...

www.Padasalai.Net

**படிப்போம் பயன்படுத்துவோம் (கலைச் சொல்)**

| | | | |
|---|---|---|---|
| Stamp pad | - மைபொதி | File | - கோப்பு |
| Stapler | - கம்பி தைப்புக் கருவி | Rubber Stamp | - இழுவை முத்திரை |
| Folder | - மடிப்புத்தாள் | Eraser | - அழிப்பான் |

**இலக்கிய நயம் பாராட்டல் :**

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

- திரிகூட ராசப்பக் கவிராயர்.

**திரண்ட கருத்து :**

குற்றால மலையில் ஆண் குரங்குகள் கனிகளைக் கொடுத்து அவற்றை உண்ணுமாறு பெண் குரங்குகளைக் கெஞ்சும். குரங்குகளின் கையிலிருந்து விழுந்த கனிகளுக்கு தேவர்கள் கெஞ்சி நிற்பர். குற்றால மக்கள் கண் சிமிட்டி தேவர்களை அழைப்பர். சித்தர்கள் அங்கு மாயங்கள் புரிவர். அருவியின் சாரல் மழைபோலப் பொழியும். அங்கு வரும் கதிரவனின் தேர்ச் சக்கரங்களும், குதிரையின் கால்களும் வழுக்கும். பிறை நிலவைச் சூடிய சிவபெருமான் அருள்பாலிக்கும் மலை குற்றால மலையே எங்கள் மலை என்று குற்றாலத்தின் மலை வளத்தை வருணித்துள்ளார்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**மையக் கருத்து :**

குற்றால மலையின் வளத்தையும், சிறப்புகளையும் கவினுற (அழகாக) வருணித்துள்ளார் திரிகூட ராசப்பக் கவிராயர்.

**எதுகை :**

அடி அல்லது சீர் தோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை ஆகும்.

**பாடலிலுள்ள எதுகைச் சொற்கள்:**

வா**ன**ரங்கள் - கா**ன**வர்கள் - தே**ன**ருவி - கூ**ன**லிளம்

**மோனை :**

அடி அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.

**பாடலிலுள்ள மோனைச் சொற்கள்:**

**கா**னவர்கள் - **க**மனசித்தர், **கூ**னலிளம் - **கு**ற்றால

**இயைபு :**

பாடலின் இறுதிச் சீர்கள் ஒன்றிவரத் தொடுப்பது இயைபு எனப்படும்.

பாடலில் கொஞ்சும் - கெஞ்சும், அழைப்பர் - விளைப்பார், ஒழுகும் - வழுகும் போன்றன இயைபாக வந்துள்ளன.

**அணி :**

குற்றால மலையை மிக உயர்த்திக் கூறியிருப்பதால் இது **உயர்வு நவிற்சி அணி** ஆகும்.

**பகுபத உறுப்பிலக்கணம்**

**1. பகைத்த = பகை + த் + த் + அ**

பகை - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, அ - வினையெச்ச விகுதி.

**2. களைந்து = களை + த்(ந்) + த் + உ**

களை - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

**3. பழித்தனர் = பழி + த் + த் + அன் + அர்**

பழி - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, அன் - சாரியை, அர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

**4. இடிந்து = இடி + த்(ந்) + த் + உ**

இடி - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**புணர்ச்சி விதி :**

**1. முன்னுடை = முன் + உடை**

முன் + ன் + உடை - தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் விதிப்படி ன் மிகுந்தது.

முன்னுடை - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி ன் + உ = னு ஆயிற்று.

**2. ஏழையென ஏழை + என**

ஏழை + ய் + என - இ, ஈ, ஐ வழி யவ்வும் விதிப்படி ய் மிகுந்தது.


ஏழையென - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி ய் + எ = யெ ஆயிற்று.

**மனப்பாடப் பாடல் :**

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி

- எச்.ஏ. கிருட்டிணனார்

பாவகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.



**குறுக்கெழுத்துப் போட்டி :**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கு 1 | டி | ய | ர | சு 6 | | | ண் | | ளி |
| ம | ட் | | | க | ல் | ட | பா 21 | | தி |
| ண | ஊ 7 | ம 14 | மை | ந் | | | று | இ 18 | மே 19 |
| ன் | | ன் | க | தி | அ 4 | ஞ் | சி 11 | றை | |
| ம 9 | லை | நா | டு | | | கு | ஜா 10 | ம | சு 17 |
| ர் | ந | ளு | ஆ 12 | றை | கொ 3 | க் | ன் | க | ரு |
| வ 16 | ள | ம | லை | து | ல் | ரு | பு | ன் | ம் |
| தி | கூ 15 | | | ந் | லி | த | ன் | | பு |
| ந் | வ | | டு | லா | ம 5 | ளி | யு | | |
| ந 8 | ல் | லி | | ஆ 13 | லை | ம 20 | ன் | ரா | பி 2 |



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கூடுதல் வினாக்கள் :**

1. கிருத்தவக் கம்பர் என்று அழைக்கப்படுபவர் எச்.ஏ. கிருட்டிணனார்.
2. இரட்சணிய யாத்திரிகம், ஜான் பன்யன் இயற்றிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ்(ஆங்கில மொழி) எனும் நூலைத் தழுவி தமிழில் எழுதப்பட்டது.
3. இரட்சணியம் - இறைவன், யாத்திரிகம் - பயணம். இறைவனை நோக்கிய பயணம் என்று பொருள்படும்.
4. மயிலை சீனி. வேங்கடசாமியின் தந்தை சீனிவாசன் சித்த மருத்துவர்.
5. தமிழ்ப்பற்று முன்னோர் வழியாக எனக்குக் கிடைத்த சீதனம் என்று கூறியவர் மயிலை சீனி. வேங்கடசாமி.
6. ச.த. சற்குணரின் கிறித்துவமும் தமிழும் எனும் உரையைக் கேட்டு மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் கிறித்தவமும் தமிழும்.
7. களப்பிரர் ஆட்சி செய்த காலம் தமிழரின் இருண்ட காலம்.
8. தமிழர் வளர்த்த அழகுக் கலை என்ற நூல் கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முதல் நூலாகும். ஆசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி.
9. தமிழ்நாட்டு வரலாறு எனும் நூலை இயற்றியவர் மயிலை சீனி. வேங்கடசாமி.
10. ஆராய்ச்சிப் பேரறிஞர் என்ற பட்டத்தைப் பெற்றவர் மயிலை சீனி. வேங்கடசாமி.
11. இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலானது ஜான் பன்யன் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் எனும் நூலைத் தழுவி இயற்றப்பட்டது.
12. இரட்சணிய யாத்திரிகம் ஐந்து பருவங்களைக் கொண்டது.
13. மேதினி என்ற சொல்லின் பொருள் உலகம்.
14. சிறுபாணாற்றுப் படையின் ஆசிரியர் நத்தத்தனார்.
15. தமிழுக்குத் தலையையே கொடுக்க வந்த வள்ளல் குமணன்.
16. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் நல்லியக்கோடன்.
17. சிறுபாணாற்றுப்படையின் மொத்த அடிகள் 269.
18. கோடை மழை ஆசிரியர் சாந்தா தத்.

***

# பகுபத உறுப்பிலக்கணம்

| இடைநிலைகள் | |
|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலைகள் | ப், வ் |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |

| விகுதிகள் | |
|---|---|
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | என், ஏன், அல், அன், கு, டு, து, று |
| தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | எம், ஏம், அம், ஆம், ஓம், கும், டும், தும், றும் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | ஐ, ஆய், இ |
| முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | இர். ஈர், மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்றுவிகுதிகள் | அன், ஆன் |
| படர்க்கைப் பெண்பால் வினைமுற்றுவிகுதிகள் | அள், ஆள் |
| படர்க்கைப் பலர்பால் வினைமுற்றுவிகுதிகள் | அர், ஆர், ப, மார், கள் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்றுவிகுதிகள் | து, று, டு |
| படர்க்கை பலவின்பால் வினைமுற்றுவிகுதிகள் | அ, ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க, இய, இயர் |
| தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| தெரிநிலைப் வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| தொழிற்பெயர் விகுதிகள் | அல், தல், அம், ஐ, கை |

**சந்தி : க், ப், த்**

**பகுதி** - பகுபதத்தின் முதல் உறுப்பு - கட்டளையிடுவது போல இருக்கும்.
**விகுதி** - பகுபதத்தின் இறுதி உறுப்பு - திணை, பால், எச்சம், முற்று, தொழிற்பெயர் காட்டும்.
**சந்தி** - கொடுக்கப்பட்ட சொல்லில் பகுதிக்கு அருகில் இருக்கும் மெய்யெழுத்து.

**இடைநிலை** - கொடுக்கப்பட்ட சொல்லில் பகுதி, சந்திக்கு அடுத்து உயிர்மெய்யைப் பிரித்தால் வருவது. காலம் காட்டும்.
**சாரியை** - விகுதிக்கு முன், விகுதி போலவே அமைவது.



www.Padasalai.Net

**விகாரம்** - பகுதி, சந்தி, இடைநிலை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றம்.

*சான்று 1* : கண்டான் என்பதில் காண் என பகுதி வந்திருக்க வேண்டும். எனவே காண் பகுதி. கொடுக்கப்பட்ட சொல்லில் கண் என வந்துள்ளது எனவே அதனை அடைப்புக்குறி() இட்டுக் காட்ட வேண்டும். காண்(கண்) + ட் + ஆன்

*சான்று 2* : தந்தான் = தா(த) + த்(ந்) + த் + ஆன்

தா - பகுதி, த எனக் குறுகியது விகாரம்.

த் மட்டுமே சந்தியாக வரும். ஆனால் ந் இடம்பெற்றுள்ளது. எனவே த் சந்தி,

ந் ஆனது விகாரம்.

**பிரிக்கும் முறை :**

பகுதி : முதலில் கொடுக்கப்பட்ட சொல்லில் உள்ள கட்டளை சொல்லைப் பிரிக்கவும். கட்டளைச் சொல் இல்லையெனில் கட்டளைச் சொல்லை உருவாக்கவும்.

சந்தி : கட்டளைச் சொல்லை அடுத்து ஏதேனும் மெய்யெழுத்து இருந்தால் சந்தி.

இடைநிலை : சந்திக்கு அடுத்து உள்ள உயிர்மெய்யை பிரிக்கவும். மெய் - இடைநிலை.

விகுதி : எஞ்சியுள்ள உயிரெழுத்துடன் அதற்கடுத்த எழுத்தைச் சேர்த்தால் விகுதி கிடைக்கும்.

சான்று :

கண்டான் = காண்(கண்) + ட் + ஆன்

காண் - பகுதி, கண் எனக்குறுகியது விகாரம், ட் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

---

**இலக்கணக் குறிப்பை எளிமையாகக் கண்டறிவது எப்படி?**

**(முக்கியமானவை மட்டும்)**

1. கொடுக்கப்பட்ட சொல்லை இரண்டாகப் பிரித்தால் இடையில் மை வந்தால் பண்புத்தொகை

சான்று : செந்தமிழ் = செம்மை + தமிழ்.

2. முக்காலம் காட்டுவது வினைத்தொகை. முதல் பாதி கட்டளை போலவும், இரண்டாம் பாதி பொருளின் பெயர் போலவும் அமையும்.

சான்று : அலைகடல்

3. அல், தல், அம், ஐ, கை போன்றவற்றில் முடிவது தொழிற்பெயர்.

சான்று : படித்தல், அழுகை.

4. முடிவடையாத சொல் எச்சம் எனப்படும். எச்சம் அருகில் பெயர்ச் சொல் வந்தால் பெயரெச்சம்.

சான்று : ஓடிய குதிரை. (ஓடிய - எச்சம்)

எச்சம் அருகில் வினைச்சொல் வந்தால் வினையெச்சம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சான்று : படித்து முடித்தான். (படித்து - எச்சம்)

5. செய்தவனையும், செயலையும் ஒருங்கே ஒரே சொல்லில் அமைப்பது வினையாலணையும் பெயர். (அவன், அவர் என முடியும்)

சான்று : படித்தவன், வாங்கியவர்.

6. ஒரு சொல்லில் உயிரெழுத்து சொல்லின் முதலில் மட்டுமே வரும். சொல்லின் இடை அல்லது கடையில் வராது. அப்படி வந்தால் அது அளபெடை.

- சொல்லின் இடை அல்லது கடையில் வந்த உயிரெழுத்து இ என்றால் அது சொல்லிசை அளபெடை.

சான்று : உரனசைஇ, தழீஇ.

சொல்லின் இடை அல்லது கடையில் அ அல்லது உ என்ற உயிரெழுத்து வந்தால் சொல்லை இரண்டு இரண்டு எழுத்துகளாகப் பிரிக்கவும் (அலகிடுதலில் பிரித்தது போல).

- இரண்டாகப் பிரிந்தால் செய்யுளிசை அளபெடை (அ) இசைநிறை அளபெடை.

சான்று : கெடாஅ, படாஅம்.

- மூன்றாகப் பிரிந்தால் இன்னிசை அளபெடை

சான்று : கெடுப்பதூஉம், கொடுப்பதூஉம்.

7. வேற்றுமை உருபுகள் மறைந்து வந்தால் வேற்றுமைத் தொகை.

சான்று : மாலை சூடினாள் (மாலையைச் சூடினாள்) இரண்டாம் வேற்றுமைத் தொகை. ஐ

கைகொடுத்தான் (கையால் கொடுத்தான்) மூன்றாம் வேற்றுமைத் தொகை (ஆல்)

8. ஒரே சொல் பலமுறை வந்து, பிரித்தால் பொருள் தருவது அடுக்குத் தொடர்.

சான்று : அலை அலை, பாம்பு பாம்பு.

9. ஒரே சொல் பலமுறை வந்து, பிரித்தால் பொருள் தராதது இரட்டைக் கிளவி.

சான்று : சலசல, படபட.

10. சொல்லின் இடையே எழுத்து ஏதேனும் குறைந்து வந்தால் இடைக்குறை.

சான்று : இலாத - இல்லாத என்பதன் இடைக்குறை.

11. சொல்லானது க, இய, இயர் ஆகியவற்றில் முடிந்தால் வியங்கோள் வினைமுற்று.

சான்று : வாழ்க, வாழிய.

12. ஒரு சொல்லானது வேறு சொல்லாக மறுவி (மாறி) வந்தால் மரூஉ

சான்று : நுந்தை (நும் தந்தை என்பதன் மரூஉ)

13. மிகுதி எனும் பொருளில் வருவது உரிச்சொல் தொடர். சால, தவ, நனி, கழி போன்றன சொல்லில் வரும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சான்று : சாலச் சிறந்தது, தவச் சிறிது, கடிநகர்

14. ஒரு எழுத்து வரவேண்டிய இடத்தில் வேறொரு எழுத்து வந்து பொருள் மாறவில்லை எனில்

போலி.

சான்று : பந்தல் - பந்தர் - ஈற்றுப்போலி

மஞ்சு - மைஞ்சு - முதற்போலி

அரசன் - அரைசன் - இடைப்போலி

ஐந்து - அஞ்சு - முற்றுப்போலி

---

பிரித்துப் புணர்ச்சி விதி தருக. (முக்கியமானவை மட்டும்)

1. கொடுக்கப்பட்ட சொல்லை இரண்டாகப் பிரிக்கவும்.

2. எந்தெந்த விதிகளின் படி அவ்வாறு மாறியது என்பதைக் காட்ட வேண்டும்.

புணர்ச்சி விதிகள் :

1. உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - நிலைமொழி மெய்யாக இருந்து வருமொழியின் முதலில் உயிர்வந்தால் உயிரும் மெய்யும் இணைந்து உயிர்மெய் ஆகும். சான்று : வானம் + எல்லாம் = **வானமெல்லாம்**

2. உயிர் வரின் உக்குரல் மெய்விட்டோடும் - நிலைமொழி ஈற்றெழுத்து குற்றியலுகரச்சொற்கள் (கு, சு, டு, து, பு, று) வந்து, உயிராக இருந்து, வருமொழியில் முதலில் உயிரெழுத்து வந்தால் குற்றியலுகரத்திலுள்ள வல்லின மெய்யை விட்டுவிட்டு உகரம் சென்றுவிடும்.

சான்று : ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள் (கு = க் + உ)

ஆங்க் + அவற்றுள்

3. ஈறுபோதல் - நிலைமொழி ஈற்றெழுத்து மை ஆக இருப்பின் அது நீங்கிவிடும். சான்று : கருமை + விழி = கருவிழி.

4. முன்னின்ற மெய் திரிதல் - நிலைமொழி ஈற்று மெய், வருமொழி முதலோடு ஒன்றுவதற்காக நிலைமொழி ஈற்று மெய் திரியும்.

சான்று : செம்மை + தமிழ் (ஈறுபோதல்)

செம் + தமிழ் = செந்தமிழ்

5. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும். - நிலைமொழியில் ஒரு குறில், அதற்கடுத்து மெய், வருமொழியில் உயிர் வந்தால் அந்த மெய்யானது இரட்டும்.

சான்று : உள்ளொன்று = உள் + ஒன்று

உள் + ள் + ஒன்று



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும் - பூ என்ற சொல் நிலைமொழி வந்து வருமொழியோடு புணரும்போது நிலைமொழிக்கு இனமான மெல்லினம் தோன்றும்.

*சான்று : பூ + காற்று பூங்காற்று (கா = க் + ஆ. க் இனவெழுத்து ங்)*

7. உடம்படுமெய்ப் புணர்ச்சி - நிலைமொழி ஈற்றிலும், வருமொழி முதலிலும் உயிரெழுத்து வந்தால், அவற்றை இணைக்க மெய்யெழுத்து வரும். ய் அல்லது வ் உடம்படு மெய்யாக வரும்.
நிலைமொழியில் இ, ஈ, ஐ வந்தால் ய் வரும்.
நிலைமொழியில் பிற உயிரெழுத்துகள் வந்தால் வ் வரும்.
ஏ வந்தால் வ் அல்லது ய் வரும்.

**நூற்பா** : இஈஐ வழி யவ்வும்,
ஏனை உயிர்வரின் வவ்வும்,
ஏ முன் இவ்விருமையும்.

*சான்று : தனியாழி = தனி +ஆழி*
*தனி + ய் + ஆழி (னி + ன் இ. இஈஐ வழி யவ்வும்).*

8. இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் - நிலைமொழி ஈற்றில் உயிர்வந்து, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அவ்வல்லினம் மிகும்.

*சான்று : வாழைக்காய் = வாழை + காய்*
*வாழை + க் + காய்*

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**பொதுத்தேர்வு வினாத்தாள்**

மொழிப்பாடம் - பகுதி - I - தமிழ் மே - 2022

கால அளவு : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி - I**

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

**1. தமிழில் திணைப் பாகுபாடு ________ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.**

அ) தொடர்க்குறிப்பு **ஆ) பொருட்குறிப்பு** இ) எழுத்துக்குறிப்பு
ஈ) சொற்குறிப்பு

**2. திருக்குறளில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ________.**

**அ) 9** ஆ) 7 இ) 3 ஈ) 5

**3. "மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட வளர்ந்தாய்" இவ்வரிகள் இடம்பெறும் நூல் ________.**

அ) புறநானூறு ஆ) கலிங்கத்துப்பரணி **இ) தமிழ் விடு தூது**
ஈ) நாலடியார்

**4. உவமைக்கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர் ________.**

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் **ஈ) சுரதா**

**5. உரிமைத்தாகம் என்னும் கதையை எழுதியவர் ________.**

அ) உத்தம சோழன் **ஆ) பூமணி** இ) ஐராவதம் மகாதேவன்
ஈ) முகமது மீரான்

**6. "நடிப்புலகின் சக்கரவர்த்தி" என்று எல்லோராலும் அழைக்கப்படுபவர் ________.**

அ) நம்பியார் ஆ) ஜெமினி கணேசன் இ) முத்துராமன்
**ஈ) சிவாஜி கணேசன்**

**7. "காய்நெல்" ___ என்பதன் இலக்கணக் குறிப்பு ________.**

**அ) வினைத்தொகை** ஆ) பண்புத்தொகை இ) உம்மைத்தொகை
ஈ) உவமைத்தொகை

**8. "தமிழ்க்குயிலே! கூவி வா, வா! "எனக் கூறியவர் ________.**

**அ) சிற்பி பாலசுப்பிரமணியம்** ஆ) பாரதியார் இ) சுரதா
ஈ) பாரதிதாசன்

**9. பகைவராலும் அழிக்க முடியாத அரண் ________.**

**அ) அறிவு** ஆ) நட்பு இ) படை ஈ) செல்வம்

**10. வேடுவர் தலைவன் ________ ஆவான்.**

அ) சுக்ரீவன் ஆ) குகன் இ) இராமன் ஈ) வீடணன்

**11. உபாத்தியாயர் என்ற சொல் யாரைக் குறிக்கும்?**

அ) நடிகர் ஆ) கணக்கர் **இ) ஆசிரியர்** ஈ) மருத்துவர்

**12. "குடிமக்கள் காப்பியம்" என்று அழைக்கப்படும் நூல் ________.**

**அ) சிலப்பதிகாரம்** ஆ) கம்பராமாயணம் இ) வளையாபதி
ஈ) இரட்சணிய யாத்திரிகம்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**13. இலக்கியத்தில் மேலாண்மை என்னும் நூலின் ஆசிரியர் ________.**
அ) பக்தவச்சல பாரதி **ஆ) வெ. இறையன்பு** இ) தி.சு.நடராசன்
ஈ) அய்யப்ப மாதவன்

**14. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல் ________.**
அ) முத்துவீரியம் ஆ) தொல்காப்பியம் **இ) தண்டியலங்காரம்**
ஈ) வீர சோழியம்

**பகுதி - II**
**பிரிவு - 1**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x2=6

15. சூரிய ஒளி பட்டவுடன் நகரம் எவ்வாறு மாறியதாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்?
16. எதிர்பாராத விருந்தினராக ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாரை?
17. சினத்தை ஏன் காக்க வேண்டும்?
18. இறைமகனார் அடைந்த துன்பத்தைக் கண்டு மக்கள் எவ்வாறு வருந்தினர்?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x2=4

19. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலை வழக்குகளாக மாற்றுபவை எவை?
20. குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையாக இருப்பது எது?
21. ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** 7x2=14

22. பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க : கான், காண்.
23. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.
24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
புள்ளைக்கு உடம்பு சரியில்லை. மூனு நாளா சிரமப்படுது.
25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அ) பலகை ஆ) கோவில்.
26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) அறுத்து ஆ) கண்டான்.
28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) முன்னுடை ஆ) பூம்பாவாய்
29. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.
முன் <
30. கலைச் சொல்லாக்கம் தருக.
அ) Mobile Banking ஆ) Biography

**பகுதி - III பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

31. "தன்னேர் இலாத தமிழ்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
33. வள்ளலார் கந்த கோட்டத்து இறைவனிடம் வேண்டுவதை தெய்வமணி மாலை பாடல் வழி நின்று விளக்குக.
34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

35. "பாடஅம் ஈத்த கெடாஅ நல்லிசை" - இப்பாடலில் ஒலிக்கோலங்களின் பண்பை விளக்குக.
36. "இன்றைய கூட்டுக் குடும்பம், பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே" ___ விளக்குக.
37. பண்டைக்கால பள்ளிக்கூடங்களில் பின்பற்றப்பட்ட குறிப்பிடத்தக்க நடைமுறைகள் யாவை?
38. உழவுத்தொழிலில் மேலாண்மை குறித்து நீவிர் அறிந்தவற்றை எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x4=12

39. அ) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்
- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) யானைக்கும் அடிசறுக்கும் (அல்லது)
ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்
42. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
ஆ) செவியறிவுறூஉத் துறையைச் சான்றுடன் விளக்குக.

**43. தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its ownership everyware.
2. A new language is a new life.
3. Knowledge of languages is the doorway to wisdom.
4. The limits of my languages are the limits of my world-.

**43. காது கேளாதோருக்கான மாற்று வினா.**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்கள் அறிவை வளர்த்து உயர்த்தும் கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிப் பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே. மொழியால் வளர்பவரும் மக்களே.

**வினாக்கள் :**

1. மொழி என்பது யாது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

### பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3x6=12

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**

ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்விற்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று விளக்குக.

45. அ) பண்டையகாலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல்
முறைகளைத் தொகுத்தெழுதுக. **(அல்லது)**

ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது ___ எவ்வாறு? விளக்குக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. **(அல்லது)**


ஆ) உங்கள் பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர் ஒருவரை நேரில் கண்ட அனுபவத்தை விளக்குக.

### பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4+2=6

அ) "இதில் வெற்றி பெற" என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள "விண் வேறு" எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "அரிது" - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக






திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பொதுத்தேர்வு வினாத்தாள்**

மொழிப்பாடம் - பகுதி - I - தமிழ் ஏப்ரல் - 2023

காலஅளவு : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி - I**

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

**1. தண்டியலங்காரம் ________ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது.**

அ) சூரிய நிழல் ஆ) வீரசோழியம் **இ) காவியதர்சம்** ஈ) முத்துவீரியம்

**2. சுரதா நடத்திய கவிதை இதழ்.**

அ) ஊர்வலம் ஆ) இலக்கியம் இ) விண்மீன் **ஈ) காவியம்**

**3. இந்தியாவின் முதல் பொது நூலகம்.**

அ) கீழ்திசைச் சுவடிகள் நூலகம் ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகம்
இ) மறைமலை நூலகம் **ஈ) கன்னிமரா நூலகம்**

**4. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது:**
**- இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?**

**அ) மெய்ப்படிமம்** ஆ) வினைப்படிமம் இ) உருப்படிமம் ஈ) பயன்படிமம்

**5. சாப்ளினின் சாதனைப் படமான "தி கிரேட் டிக்டேட்டர்" வெளியான ஆண்டு.**

அ) 1930 ஆ) 1950 இ) 1960 **ஈ) 1940**

**6. வெங்கதிர் என்பதன் இலக்கணக் குறிப்பு.**

**அ) பண்புத்தொகை** ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

**7. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ___ ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே"**
**- என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது.**

அ) தாய் வழிச் சமூகமுறை ஆ) தனிக்குடும்ப முறை
**இ) தந்தை வழிச் சமூகமுறை** ஈ) விரிந்த குடும்ப முறை

**8. ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு.**

அ) 1816 **ஆ) 1812** இ) 1815 ஈ) 1824

**9. மகரயாழ் எத்தனை நரம்புகளைக் கொண்டது?**

அ) 16 ஆ) 21 இ) 7 **ஈ) 17**

**10. எளியது அரியது என்பன :**

அ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு
ஆ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை
இ) மெய்ப்பொருள் காண்பது - உருவு கண்டு எள்ளாதது
**ஈ) சொல்வது - சொல்லியபடி செய்வது**



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**11. "பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப" என்பது ________ பாவிகம்.**

அ) மணிமேகலையின் **ஆ) கம்பராமாயணத்தின்**

இ) வளையாபதியின் ஈ) சிலப்பதிகாரத்தின்

**12. வெண்பாவின் ஓசை.**

அ) துள்ளல் ஆ) அகவல் இ) தூங்கல் **ஈ) செப்பல்**

**13. தமிழில் உயிர்மெய்யெழுத்துக்கள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் எழுத்துகள்.**

அ) 136 ஆ) 120 **இ) 126** ஈ) 116

**14. "தம்மனை" என்பது ________ இல்லம்.**

அ) தந்தையின் **ஆ) மனைவியின்** இ) உடன்பிறந்தானின்

ஈ) கணவனின்

**பகுதி - II**

***பிரிவு - 1***

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x2=6

15. "நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது" ___ விளக்கம் தருக.

16. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?

17. தொன்மம் - விளக்கம் தருக.

18. "எத்திசையிலும் சோறு தட்டாமல் கிட்டும்" ___ யாருக்கு?

***பிரிவு - 2***

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x2=4

19. இயல்பு வழக்குகளைக் கலை வழக்குகளாக மாற்றுபவை எவை?

20. எழுத்தாணியின் வகைகள் யாவை?

21. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

***பிரிவு - 3***

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** 7x2=14

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. தலை, தளை, தழை

23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) ஈந்த ஆ) பேசுவார்

24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) தனியாழி ஆ) அருங்கானம்

பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.


புள்ளைக்கு உடம்பு சரியில்லை. மூனு நாளா சிரமப்படுது.

25. கலைச் சொல்லாக்கம் தருக. அ) Passport ஆ) Folder

**குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**பின்வரும் மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக. ஆற அமர**

26. படத்திற்குப் பொருத்தமான பின்வரும் திருக்குறளின் விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.



உருவுகண்டு ________ வேண்டும் உருள்பெருந்தேர்க்கு

________ அன்னார் உடைத்து.



திரு.ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அ) வெங்காயம் ஆ) தலைமை.

30. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிப் பொந்துகள் அமைந்திருக்கின்றன.0

## பகுதி - III பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

31. "பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்" என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது?
32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெக் கேட்கிறார்?
33. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
36. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
37. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.
38. தாய் வழிக் குடும்பம் குறித்து பக்தவச்சல பாரதி கூறும் கருத்துகளை விவரிக்கவும்.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x4=12

39. அ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

ஆ) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா
- பாரதியார்.

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) குன்றின் மேலிட்ட விளக்கு போல (அல்லது)

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

42. அ) வெண்பாவிற்குரிய இலக்கணம் யாது? (அல்லது)

ஆ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

**43. தமிழாக்கம் தருக.**

I make sure I have the basic good habits which include respecting my elders , greeting people when I meet them, wishing them well when departing. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless,



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peace full life, I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

***43. காது கேளாதோருக்கான மாற்று வினா***

*கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.*

*நகரங்கள் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும். சமூகத்தின் கடந்தகால வரலாற்றுக்கும், நிகழ்கால வாழ்விற்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் அவை துணை நிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என்றழைக்கப்படும் "சென்னை" இன்று தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். அவ்வகையில் இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும் தமிழகத்தின் தலைநகரமாகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும், வளர்ச்சியும் நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று.*

**வினாக்கள் :**

*1. பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானது எது?*
*2. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என அழைக்கப்படும் நகரம் எது?*
*3. நகரங்கள் சமூகத்தில் எவ்வாறு துணை நிற்கின்றன?*
*4. நாம் அறிய வேண்டிய சிறப்புகள் யாவை?*

**பகுதி - IV**

***அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.*** 3x6=12

*44. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.*

*(அல்லது)*

*ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.*

*45. அ) "நெகிழி தவிர்த்து நெஞ்சம் நிமிர்த்து" —— என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.*

*(அல்லது)*

*ஆ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர் " என்னும் கூற்றினைச் சான்றுடன் கட்டுரைக்க.*

*46. அ) "கோடை மழை" கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.*

*(அல்லது)*

*ஆ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்கவும்.*

**பகுதி - V**

***47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.***

*அ) "தெய்வமணிமாலை" என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள **"ஒருமையுடன்"** எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.*

*ஆ) "**சினம்**" - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பொதுத்தேர்வு வினாத்தாள்

மொழிப்பாடம் - பகுதி - I - தமிழ் மார்ச் - 2024

கால அளவு : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

**1. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ் !"**
**- இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்**

**அ) அடி எதுகை, சீர் மோனை** ஆ) அடிமோனை, அடி எதுகை
இ) சீர் எதுகை, அடிமோனை ஈ) சீர் மோனை, சீர் எதுகை

**2. பொருத்தி விடை தேர்க.**

**(1) குரங்குகள் - (i) கன்றுகளைத் தவிர்த்தன**
**(2) விலங்குகள் - (ii) மரங்களிலிருந்து வீழ்ந்தன**
**(3) பறவைகள் - (iii) குளிரால் நடுங்கின**
**(4) பசுக்கள் - (iv) மேய்ச்சலை மறந்தன**

அ) (1) - (iii), (2) - (ii), (3) - (i), (4) - (iv)
ஆ) (1) - (i), (2) - (iii), (3) - (iv), (4) - (ii)
இ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv)
**ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)**

**3. "பலர் துஞ்சவும் தான் துஞ்சான்" - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்.**

அ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்
ஆ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்
இ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
**ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்க்கிழார்**

**4. விளியறி ஞமலி - இதில் குறிப்பிடப்படும் விலங்கு.**

**அ) நாய்** ஆ) எருது இ) யாளி ஈ) குதிரை

**5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.**

**அ) கடுக்காய்** ஆ) வசம்பு இ) மாவிலைக்கரி
ஈ) மணத்தக்காளியிலைச் சாறு

**6. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கையின் மையம். காரணம் :**

அ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
ஆ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
இ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
**ஈ) (அ), (ஆ), (இ) அனைத்தும்**



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**7. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.**

| | |
|---|---|
| (1) காதை | (i) கந்தபுராணம் |
| (2) சருக்கம் | (ii) சீவகசிந்தாமணி |
| (3) இலம்பகம் | (iii) சூளாமணி |
| (4) படலம் | (iv) சிலப்பதிகாரம் |

அ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)
**ஆ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - i)**
இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)
ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

**8. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்..... - தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.**
**(1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்**
**(2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்**
அ) (1) தவறு: (2) தவறு ஆ) (1) சரி: (2) தவறு
**இ) (1) சரி: (2) சரி** ஈ) (1) தவறு: (2) சரி

**9. எளியது, அரியது என்பன :**
அ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு
ஆ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை
இ) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாமை
**ஈ) சொல்வது - சொல்லியபடி செய்வது**

**10. "உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்" - இத்தொடரில் இடம்பெற்றுள்ள பெயரெச்சம்.**
**அ) வளர்ந்த** ஆ) உண்டு இ) இடந்தனில் ஈ) பிறந்து

**11. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் :**
அ) சமணமும் தமிழும் ஆ) பௌத்தமும் தமிழும்
**இ) கிறித்தவமும் தமிழும்** ஈ) இசுலாமியமும் தமிழும்

**12. மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி :**
அ) அங்கதம் **ஆ) குறியீடு** இ) தொன்மம் ஈ) படிமம்

**13. பிழையான தொடரைக் கண்டறிக.**
**அ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**
ஆ) காளைகளைப் பூட்டி வயலை எழுதனர்.
இ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.
ஈ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

**14. தோப்பில் முகமது மீரானுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் :**
அ) கூனன் தோப்பு ஆ) துறைமுகம்
**இ) சாய்வு நாற்காலி** ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பகுதி - II**

**பிரிவு - 1**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x2=6

15. ஞாலத்தின் பெரியது எது?
16. நெடுநல்வாடை - பெயர்க்காரணம் தருக.
17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.
18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x2=4

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.
20. முறை வைப்பு என்றால் என்ன?
21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** 7x2=14

22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.
24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
    ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    நிலத்தைக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
26. பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க : தின்மை - திண்மை.
27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) செய்த ஆ) கலங்கி
28. கலைச் சொல்லாக்கம் தருக.
    அ) Stapler ஆ) Teller
29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) உரனுடை ஆ) தலைக்கோல்
30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அ) கோவில் ஆ) தாமரை

**பகுதி - III பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்குக.
36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்கவும்.
37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

### பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x4=12

39. அ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(அல்லது)

ஆ) உவமை அணியைச் ச்ான்றுடன் விளக்குக.

**40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்
- கவிமணி தேசிக விநாயகம்
பிள்ளை.

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) யானைக்கும் அடிசறுக்கும் (அல்லது)
ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்

42. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
ஆ) செவியறிவுறூஉத் துறையைச் சான்றுடன் விளக்குக.

**43. தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its ownership everyware.
2. A new language is a new life.
3. Knowledge of languages is the doorway to wisdom.
4. The limits of my languages are the limits of my world-.

**43. காது கேளாதோருக்கான மாற்று வினா.**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்கள் அறிவை வளர்த்து உயர்த்தும் கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிப் பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே. மொழியால் வளர்பவரும் மக்களே.

**வினாக்கள் :**

1. மொழி என்பது யாது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3x6=12

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**

ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்விற்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று விளக்குக.

45. அ) பண்டையகாலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக. **(அல்லது)**

ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது ___ எவ்வாறு? விளக்குக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. **(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர் ஒருவரை நேரில் கண்ட அனுபவத்தை விளக்குக.

## பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4+2=6

அ) "இதில் வெற்றி பெற" என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள "**விண் வேறு**" எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "**அரிது**" - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக

### பின்னிணைப்பு

**விலங்கு வாழிடங்கள்**

| | | |
|---|---|---|
| ஆட்டுப்பட்டி | யானைக்கூடம் | குதிரைக் கொட்டில் |
| மாட்டுத் தொழுவம் | வாத்துப்பண்ணை | பாம்புப் புற்று |
| எலி வளை | | |

**தொகுப்புப்பெயர்கள்**

ஆட்டு மந்தை பசு நிரை

**உறுப்புப் பெயர்கள்**

மா, பலா, வாழை - இலை (மாவிலை, பலா இலை, வாழையிலை)

ஈச்சம், தென்னை, பனை - ஓலை (ஈச்சவோலை, தென்னையோலை, பனையோலை)

அவரை, கத்தரி, முருங்கை, வெள்ளரி - பிஞ்சு (அவரைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, வெள்ளரிப்பிஞ்சு )

தாழை மடல்





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**வினைமரபுச் சொற்கள்**

| | |
|---|---|
| அம்பு எய்தார் | ஆடை நெய்தார் |
| உமி கருக்கினார் | பூ பறித்தார்/கொய்தார் |
| மரம் வெட்டினார் | மாத்திரை விழுங்கினார் |
| சோறு உண்டார் | தண்ணீர் குடித்தார் |
| பால் பருகினார் | கூடை முடைந்தார் |
| சுவர் எழுப்பினார் | முறுக்கு தின்றார் |

**ஒலி மரபுச் சொற்கள் :**

| | | |
|---|---|---|
| ஆடு கத்தும் | ஆந்தை அலறும் | எருது எக்காளமிடும் |
| காகம் கரையும் | குதிரை கனைக்கும் | கிளி பேசும்/கொஞ்சும் |
| குரங்கு அலப்பும் | குயில் கூவும் | சிங்கம் முழங்கும் |
| கூகை குழறும் | நரி ஊளையிடும் | கோழி கொக்கரிக்கும் |
| புலி உறுமும் | மயில் அகவும் | வண்டு முரலும் |
| நாய் குரைக்கும் | யானை பிளிறும் | |

www.Padasalai.Net

**இளமைப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| அணிற் பிள்ளை | குருவிக்குஞ்சு | பசுங்கன்று |
| யானைக்கன்று | கழுதைக்குட்டி | சிங்கக்குருளை |
| எலிக்குட்டி | கோழிக்குஞ்சு | மான்கன்று |
| நாய்க்குட்டி | மான்கன்று | குதிரைக்குட்டி |
| பூனைக்குட்டி | எருமைக்கன்று | |



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கலைச் சொற்கள்**

| | | |
|---|---|---|
| Whatsapp | | புலனம் |
| Telegram | - | தொலைவரி |
| Wi-fi | - | அருகலை |
| Hotspot | - | பகிரலை |
| Youtube | - | வலையொளி |
| Instagram | - | படவரி |
| Wechat | - | அளாவி |
| Messenger | - | பற்றியம் |
| Twitter | - | கீச்சகம் |
| Skype | - | காயலை |
| Bluetooth | - | ஊடலை |
| Broadband | - | ஆலலை |
| Online | - | இயங்கலை |
| Offline | - | முடக்கலை |
| Thump drive | - | விரலி |
| Hard disk | - | வன்தட்டு |
| GPS | - | தடங்காட்டி |
| CCTV | - | மறைகாணி |
| OCR | - | எழுத்துணரி |
| 3D | - | முத்திரட்சி |
| 2D | - | இரு திரட்சி |
| Projector | - | ஒளிவீச்சி |
| Printer | - | அச்சுப்பொறி |
| Scanner | - | வருடி |
| Smartphone | - | திறன்பேசி |
| Sim Card | - | செறிவட்டை |
| Charger | - | மின்னூக்கி |
| LED | - | ஒளிர்விமுனை |
| Passport | - | கடவுச் சீட்டு |
| Visa | - | நுழைவு இசைவு |






திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர் 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com